# முத்துக் குளிப்பு

வல்லிக் கண்ணன்

கலைஞன் பதிப்பகம்
தியாகராயநகர்
சென்னை-17

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற் பதிப்பு: டிசம்பர் 1965

விலை ரூ 2-50

ஸ்ரீமதி பிரிண்டர்ஸ், சென்னை-2

# அறிமுகம்

உலக இலக்கியம் என்பது பெரியகடல். அதன் ஆழத்தை யார்தான் முற்றிலும் காண முடியும்?

உலக இலக்கியப் பெருங்கடலில் நீந்திக் களிக்கவும், ஆழ்ந்து உள்ளே மல்கிக் கிடக்கும் பொக்கிஷங்களை ஓரளவுக்குக் கண்டு மகிழவும் ஆங்கிலம் பெரிதும் துணை புரிகிறது.

'ஆங்கிலத்தின் உதவியால் உலக இலக்கியக் கடலை ஒருவாறு கரை கண்டவர்கள் நாங்கள் என்று நாங்களே பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியும்' என்று கு. ப. ராஜகோபாலன் ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

நான் அவ்வாறு கூறும் நிலையில் இல்லை. கடந்த முப்பது வருஷங்களாக நான் இலக்கிய மாணவனாக வாழ்ந்து, எண்ணற்ற புத்தகங்களைப் படித்து வந்திருப்பினும், நான் இன்னும் படிக்காமலே விட்டு வைத்துள்ள அற்புத நூல்கள் மிகப் பலவாகும் என்ற உணர்வு என்னுள் என்றும் நீடிக்கிறது.

கடலினுள் இறங்கி, முக்குளித்து, மதிப்புள்ள முத்துச் சிப்பிகளை அள்ளி எடுத்துப் பயன் பெறுவதற்குப் பதிலாக, பெரும் பகுதி நேரங்களில் கடலோரத்திலேயே நின்று, அலைகள் கொண்டு வந்து சேர்க்கிற வெறும் சிப்பிகளைக் கண்டு நான் திருப்தி அடைந்து வந்திருப்பதாகக் கூட சிறு வேதனை எனக்கு ஏற்படுகிறது உண்டு.

எனது சொந்த ஆசையும் தவிப்பும் எப்படியும் இருக்கட்டும். நான் படித்த புத்தகங்களில் ரசனைக்கு உரிய விஷயங்களாகவும், கேட்டவற்றில் சுவையானவை

யாகவும் தோன்றியவற்றை தமிழ் ரசிகர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் எனக்கு அடிக்கடி எழும்.

என் அருமை நண்பர் விஜயபாஸ்கரன் லட்சிய வேகத்தோடும், இலக்கிய ஆர்வத்துடனும் 'சரஸ்வதி' என்ற மாசிகையை நடத்தி வந்தபோது, அதில் 'உதிரிப் பூக்கள்' எனும் தலைப்பில் பலரகமான விஷயங்களைப் பற்றியும் எழுதினேன். அவை இலக்கியப் பிரியர்களின் ரசிப்புக்கும் பாராட்டுதலுக்கும் உரிய விருந்து ஆயிற்று. இதர பத்திரிகாசிரியர்களின் கவனிப்புக்கும் இலக்கா யிற்று. அதனால் 'சாந்தி' 'புதுமை' 'தாமரை' ஆகிய பத்திரிகைகளிலும் நான் படித்த புத்தகங்களைப்பற்றி எழுத நேர்ந்தது.

நல்ல எழுத்துக்களைத் தேடிப் பிடித்து, புத்தகங்க ளாக வெளியிடுவதில் ஆர்வமும், இலக்கியத்தில் ஈடு பாடும் கொண்டுள்ள நண்பர் மாசிலாமணி எனது கட்டு ரைகளைத் தொகுத்து, புத்தக உருவம் கொடுக்க முன் வந்தது மகிழ்ச்சிக்கு உரியதாகும். எனக்கு மாத்திரம் அல்ல. இலக்கியப் பிரியர்கள் பலரும் மகிழ்ச்சியோடு வரவேற்கக் கூடிய ஒரு முயற்சி இது.

இப் புத்தகம் உலக இலக்கிய நயங்களை, முதல்தர சிருஷ்டிகளிலிருந்து தேர்ந்தெடுத்த மணிகளை, அறிமுகம் செய்கிறது என்று நான் சொல்லமாட்டேன். ஆனால், நான் ரசித்த பல நயங்களை, எனக்கு நல்லதாகத் தோன்றிய சில சிறப்புக்களை, பிறரும் ரசிக்கக் கூடிய முறையில் சுவையாக எடுத்துச் சொல்கிறது இது. இதில் உள்ள ஒரு சில கட்டுரைகளைப் படித்தாலே போதும்; இந்த உண்மை தெளிவாகும்.

சென்னை

**வல்லிக்கண்ணன்**

# இரட்டை மனிதர்

லண்டன் மாநகரில், பிரசித்தி பெற்ற ஒரு டாக்டரின் வீடு. அறுவை வைத்திய நிபுணரான அவர் மாடியில் இருக்கிருர். கீழே வாசல் முகப்பில் உள்ள மணி அலறுகிறது.

வந்தவர்களை வரவேற்று விசாரிக்கும் தாதி கேள்விகள் கேட்கும் ஒலியும், படபடப்பாக பேசும் குரலும் மேலே எட்டுகின்றன.

சில நிமிஷ நேரத்திலே ஒரு நபர் உள்ளே பிரவேசிக்கிருர். 'மிஸ்டர் மூர்' என்று தாதி அறிவிக்கிருள்.

மிஸ்டர் மூர் டாக்டருடன் கைகுலுக்க முயலுகிருர். ஆனால் கைகளின் நடுக்கம் அச்செயலை வெற்றிகரமாகச் செய்ய விடாமல் தடுக்கிறது. மூரின் நெற்றியில் ஒரு காயம் காணப்படுகிறது.

டாக்டர், மூரிடம் பேச்சுக் கொடுக்கிருர். உத்தியோகம் பற்றி எல்லாம் விசாரிக்கிருர்.

பொறுமை இழந்தவர் போல் பதிலளிக்கிருர் மூர். அவருக்கு தேயிலைத் தோட்டம் இருக்கிறது. முதலாளியான அவர் அடிக்கடி வேட்டையாடச் செல்வது உண்டு. யானைகளையும் புலிகளையும் கரடிகளையும் வேட்டையாடி இருக்கிருர். வேட்டை யென்ருல் சும்மாதாளு? வேட்டையாடிக் களிப்போருக்கும் ஆபத்து ஏற்படுமே! அவருக்கும் எத்தனையோ அபாயங்கள்! புலியோடு அவர் நடத்திய போராட்டங்கள் தான் எத்தனை! அப்படி ஒரு புலியுடன் நிகழ்த்திய போரிலே

தான் நெற்றியில் காயம் ஏற்பட்டது. புலி தோள்மீது உண்டாக்கிய காயத்தின் விளைவாக கை நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. சரியாகக் கை குலுக்க முடியவில்லை. காப்பிக் கோப்பையை நன்ருகப் பற்றி சரியாக வாயருகே கொண்டு போக இயலவில்லை. இந்நிலையில் மறுபடியும் துப்பாக்கி பிடித்துச் சண்டை போடுவது எங்கே? வேட்டையாடுவது எப்படி?

'ஆனால் நான் கட்டாயம் புலி வேட்டைக்குப் போயாக வேண்டும். டாக்டர்! என்னை நீங்கள் குணப்படுத்த முடியுமா?' இவ்வாறு தொணதொணத்தார் மூர்.

டாக்டர் யோசனை செய்தார். சில ஆப்பரேஷன்கள் மூலம் குணப்படுத்தி விடலாம் என்கிருர்.

ஆப்பரேஷன் என்றதுமே நடுக்கம் எடுத்துவிட்டது வேட்டைக்கார வீரருக்கு! டாக்டரிடம் முறைத்துவிட்டு வேகமாக வெளியேறினர்.

'சனியன் தொலைந்தது!' என்று நிம்மதியாக மூச்சு விட்டார் டாக்டர்.

மறுநாள் காலை. மணி கணகணத்தது. மிஸ்டர் பீயர்ஸன் என்று பெயர் சொல்லிக் கொண்டு, அமைதியாக வந்து நின்ருர் ஒருவர். அவர் கை நடுக்கமும், தள்ளாடும் தன்மையும், நெற்றிக் காயமும் கூறின, இவர் நேற்று வந்த ஆசாமியே என்று. ஆனால் மிஸ்டர் மூர் வெறி நாய் போல் நடந்தார்! இவரோ ஆட்டுக் குட்டி போல் பழகினர்.

'ஆசாமி ஏதோ நடிப்பு வேலை காட்டுகிருர்' என்று எண்ணினர் டாக்டர்.

மிஸ்டர் பீயர்ஸன் நகை வியாபாரி என்று சொன்னர். வைரங்களைப் பரிசோதனை செய்வதில் அவர்

நிபுணர் என்ருர். அப்படி வைரங்களை சோதித்துக் கொண்டிருக்கும் போதுதான் ஒரு விபத்து நேர்ந்து விட்டது என்ருர்.

'அப்படியானுல் தேயிலைத் தோட்டமும் புலி வேட்டையும் என்ன ஆயிற்று?' என்று விளையாட்டாகக் கேட்டார் டாக்டர்.

'வைர வியாபாரியான எனக்கும் தோட்டத்துக்கும் என்ன சம்பந்தம்? புலி வேட்டையா? என்ன டாக்டர், என்னேடு விளையாட விரும்புகிறீர்களா?' என்று, தாம் மிகவும் அவமதிக்கப் பட்டுவிட்டது போல், பேசினுர் பீயர்ஸன்!

டாக்டருக்கும் தாதிக்கும் ஒரே குழப்பம். ஆளைப் பார்த்தால்—சந்தேகமே யில்லை. நேற்று வந்த அதே நபர்தான். குரல் கூட ஒன்றுதான். ஆனுல் பேசும் தோரணையும் பழகும் விதமும் முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றன! மிஸ்டர் மூர்தான் பீயர்ஸனு, அல்லது......

'மிஸ்டர் மூர்? யார் இது? எனக்குத் தெரியாதே!' என்று சொன்ன பீயர்ஸன் திடீரென்று வெகுண்டெழுந்தார். அவர் முகத்தில் கடுகடுப்பு குடிகொண்டது. டாக்டர் மீது எரிந்து விழுந்தார். கோபித்துக் கொண்டு வெளியே ஓடினுர்.

'ஆகவே, சந்தேகமில்லை. இருவரும் ஒருவர்தான்' என்று டாக்டர் தீர்மானித்தார். இப்படி 'ஆளுக்குள்ளே ஆளு' புகுந்து கொள்கிற அதிசயம் அவ்வப்போது உலகத்தில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது என்பதை அவர் அறிவார்.

—ஜெர்மனியில், மிகவும் கண்ணியம் வாய்ந்த திறமை மிகுந்த ஸர்ஜன் ஒருவர் இருந்தாராம். அவர்

அடிக்கடி பயங்கரமான கொள்ளைக்காரனாக மாறிவிடு வாராம். துணிகரமான பாங்குக் கொள்ளைகளில் ஈடுபட்டாராம். விஞ்ஞான பூர்வமான வழிவகைகளைக் கையாண்டு, வெற்றிகரமாகப் பல பாங்குக் கொள்ளைகளை நிகழ்த்திய பயங்கரப் பேர்வழியும் பெயர்பெற்ற—நேர்மை மிகுந்த—டாக்டரும் ஒருவரே என்று நம்புவதே கஷ்டமாக இருந்ததாம், அவரைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டபோது. இத்தனைக்கும் அவரேதான் கொள்ளைக்காரன் என்பது அந்த டாக்டருக்குத் தெரியாது.

இன்னொரு விசித்திரமான கேஸ்!

—ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர். பலர் கவனத்தையும் கவர்ந்து கீர்த்தி பெற்ற கொள்ளையர் தலைவன், 'ரெட் பிரின்ஸ்' என்று, ஒருவன். அவனைப் பிடிக்கத் தீவிர முயற்சிகள் நடைபெற்றன, அந்த இன்ஸ்பெக்டரும் 'சிவப்பு ராஜகுமார'னை பிடித்துவிடப் பெரிதும் முயன்றார். உண்மையில், போலீஸ் இன்ஸ்பெக்டர் தான் திருடர் தலைவனான 'ரெட் பிரின்ஸ்'! அது அவருக்கே தெரியாது!

மூளையில் ஒரு பகுதியில் சிறு கட்டிகள் தோன்றுவதனால்தான் இத்தகைய விசித்திர மாறுபாட்டங்கள் ஏற்படுகின்றன என்று லண்டன் டாக்டர் உணர்ந்தார். மிகவும் ஜாக்கிரதையாக மூளையில் ஆப்பரேஷன் செய்து, கட்டியை நீக்கிவிட்டால் சுக நிலை ஏற்பட்டுவிடும் என உறுதியாக நம்பினார் அவர்.

மறுநாளும் அதே நபர் வந்தார். மிஸ்டர் பீயர்ஸன் ஆகவே வந்தார். அவரிடம் டாக்டர் விவரங்களை எடுத்துச் சொன்ன போது, அவரும் சிகிச்சைக்கு இசைந்தார்.

குறிப்பிட்ட ஒரு நாளில் ஆப்பரேஷன் நிகழ்ந்தது. ஆப்பரேஷன் நடைபெற்ற இரண்டு—இரண்டரை மணி நேரமும், பீயர்ஸன் திடுமென மிஸ்டர் மூர் ஆக மாறி விடக் கூடாதே; அப்படி மாறி முரட்டுத்தனமாக நடக்கத் தொடங்கினால் அவர் உயிருக்கே ஆபத்தாகி விடுமே என்று டாக்டரின் உள்ளம் பதை பதைத்துக் கொண்டிருந்தது.

நல்ல வேளையாக, விபரீதம் எதுவும் தலைகாட்டாமலே, ஆப்பரேஷன் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது. இரண்டு வார கால சிகிச்சை நிகழ்ந்தது.

ஒருநாள்—நோயாளி பூரண குண நிலையை எட்டிக் கொண்டிருந்தபோது—டாக்டர் தமாஷாகக் கேட்டார்: 'இனி உங்களை வைர வியாபாரி பீயர்ஸன் என்பதா? தேயிலைத் தோட்ட முதலாளி என்பதா?'

அவருக்குக் கிடைத்த பதில் டாக்டரைத் திகைக்க வைத்தது!

'பீயர்ஸனா? மூரா? என்ன சொல்கிறீர்கள் என்றே எனக்குப் புரியவில்லை,' என்றார் நோயாளி! வேறு ஒரு பெயரையும் தொழிலையும் குறிப்பிட்டார்.

எதை நம்புவது என்றே டாக்டருக்கு விளங்கவில்லை. தமது அறுவை வைத்தியம் புதியதோர் குழப்பத்தை உண்டாக்கி விட்டதோ என்ற கவலை வேறு!

அப்படி எதுவும் நிகழ்ந்து விடவில்லைதான். அந்த நபர் மூன்றாவதாகக் குறிப்பிட்ட பெயரும் தொழிலும் தான் அவருடைய சுயநிலை என்பதை நிரூபிக்கும் வகையில், அவர் குறிப்பிட்ட ஸ்தாபனத்திலிருந்து ஒரு பிரதிநிதி வந்து சேர்ந்தார்.

'இரண்டு மாதங்களாக எங்கள் முதலாளி காணாமல் போய் விட்டார். எவ்விதமான தகவலும் இல்லை.

இரண்டு தினங்களுக்கு முன்புதான் நான் இங்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறேன் என்று ஒரு கடிதம் இவரிடமிருந்து வந்தது' என்றார். குணம் பெற்று விட்ட முதலாளியை அவர் சொந்த ஊருக்கு அழைத்துக்கொண்டு போனார்.

மனித உள்ளத்தையும் உணர்வுகளையும் பாதிக்கிற விந்தைக் கோளாறுகள் இப்படி எத்தனை எத்தனையோ! அவை பற்றிச் சுவையாக எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றவர்கள் எழுதினால், அந்தப் புத்தகம் தனிநயம் பெற்றதாகி விடுகிறது.

டாக்டர் ஜார்ஜ் ஸாவா என்பவர் எழுதியுள்ள 'எ ரிங் அட் தி டோர்' (வாசலில் ஒரு மணியோசை) எனும் புத்தகம் அத்தகைய தனித்தன்மை பெற்று விளங்கு கிறது. தமது அனுபவங்களை வைத்து அவர் பல புத்த கங்கள் எழுதி இருப்பதாகத் தெரிகிறது. சொல்ல விரும்புகிறவற்றை அருமையாகவும், அழகாகவும் சொல்லத் தெரிந்த டாக்டர் அவர்.

* * *

இந்த 'ஆளுக்குள்ளே ஆளு' என்கிற விவகா ரத்தை உயிர் நாதமாக்கி ஆர். எல். ஸ்டீவன்ஸன் எனும் ஆங்கிலக் கதாசிரியர் அற்புதமான ஒரு கதை பின்னி யிருக்கிறார். 'டாக்டர் ஜெகில் அன்ட் மிஸ்டர் ஹைட்' என்று. இது தமிழிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

'ஒரே மனிதன் நல்லவனாகவும் இருப்பான். பழி பாவங்களுக்கு அஞ்சாத கொடியவனாகவும் மாறிவிடு வான். ஒவ்வொருவனுள்ளும், சட்டத்துக்குக் கட்டுப் பட்டு, தர்ம நியாயங்களுக்குத் தலை வணங்கி, சமூகத் துக்கு நல்லவனாக வாழத் தூண்டுகிற பண்பும்

இருக்கிறது. சட்டங்களைத் தகர்த்து, அநியாயங்களை வளர்த்து அதர்ம அட்டூழியங்களைச் செய்யத் தூண்டுகிற பண்பும் உறைகிறது. சந்தர்ப்பம், சூழ்நிலை, பண்பாடு முதலிய புறக்காரணங்களுக்குத் தகுந்தபடி மனிதன் நல்லவனுகவோ, அல்லது தீயவனுகவோ செயல் புரிகிருன்.

நற்பண்பை தேவன் என்றும், தீய தன்மையை அசுரன் என்றும் உருவகப் படுத்திஞல், ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தேவனும் வாழ்கிருன், அசுரனும் வசிக்கிருன் என்று கொள்ளலாம். ஆகவே ஒவ்வொரு மனிதனுள்ளும் ஏற்படுகிற தர்ம—அதர்ம மனக் குழப்பங்களை—மனச்சாட்சிப் போராட்டங்களை-தேவ அசுர யுத்தம் என்று குறிப்பிடலாம். தேவாசுர யுத்தம் புராண காலத்தில் நடந்து முடிந்து விடவில்லை; இன்றும் ஒவ்வொரு மனிதனுள்ளும் நடந்து கொண்டுதான் இருக்கிறது—இவ்வாறு அழகாக விளக்கியிருக்கிருர் கு. ப. ராஜகோபாலன், 'டாக்டர் ஜெகில் அன்ட் மிஸ்டர் ஹைட்' புத்தகத்தை 'இரட்டை மனிதன்' என்ற பெயரில் தமிழாக்கி வெளியிட்டபோது, அதன் முன்னுரையிலே.

நல்ல மனிதனுக வாழும் டாக்டர் ஜெகில், மிஸ்டர் ஹைட் ஆக மாறுகிறபோது கொடிய செயல்களை எல்லாம் செய்கிருன். முடிவில் இதர மனிதர்களால் வேட்டையாடப்பட்டுச் சாகிருன். இந்த அனுபவத்தை, நன்ருகக் கதை சொல்லத் தெரிந்த ஸ்டீவன்ஸன் அழகாக எழுதியிருக்கிருர்.

# சோக நாடகங்கள்

சாதாரண மக்கள், ஏழை எளியவர்கள், உழைத்துப் பிழைப்பவர்களின் அன்றாட வாழ்க்கையில் என்ன அற்புதம், அதிசயம், பிரமாதம் நிகழ்ந்துவிடப் போகிறது என்று பலரும் எண்ணுவது இயல்பு. அவர் களும் உள்ளமும் உணர்வும் பெற்ற மனிதர்களே என்ற உணர்வோடும் மனித இதயத்தோடும் மற்றவர் களது வாழ்வின் நிகழ்ச்சிகளைக் கவனித்தால், சாதாரண மக்களிடையிலும் எத்தகைய மகத்தான உணர்ச்சி நாடகங்கள், சோகக்கதைகள் ஊற்றெடுத்துக் குமிழி யிட்டு ஒடுங்கிவிடுகின்றன என அறியமுடியும். சகல மனிதர்களின் உள்ளத் துடிப்புகளையும் உணர்ச்சிப் போராட்டங்களையும் கூரிய நோக்கோடும் நுண்உணர் வோடும் புரிந்து கொள்ளும் ஆற்றல் பெற்ற கதாசிரி யர்கள் மறக்கமுடியாத அற்புதமான கதைகளைப் படைத் திருக்கிறார்கள். சாதாரண மனிதரின் மகத்தான உணர்ச்சிகளைப் பற்றிய சொற்சித்திரங்கள் ரசிகர்களின் உள்ளத்தைத் தொடும் தன்மை பெற்றவை.

காதரின் மேன்ஸ்பீல்ட் எனும் அம்மையார் எழுதி யுள்ள 'பார்க்கர் அம்மாவின் வாழ்க்கை' என்கிற சிறு கதை இந்த இனத்தைச் சேர்ந்தது.

பார்க்கர் அம்மா (மா பார்க்கர்) வயதான பாட்டி. கனவான் ஒருவரின் ஜாகையை வாரத்துக்கு ஒருநாள் சுத்தம் செய்யும் பொறுப்பு அவளுக்கு. சோம்பேறியும் சுகவாசியுமான அந்தக் கனவான் ஆறு நாட்களில் தனது அறையை அசல் குப்பைத் தொட்டியாக மாற்றி வைப்பார். ஏழாம்நாள் வேலைக்கு வருகிற பாட்டிக்கு இடுப்பொடியும்படியான வேலைகள் சுமந்து கிடக்கும்.

அன்றும் அவள் வழக்கம்போல் வேலை செய்ய வந்தாள். உன் பேரன் எப்படி இருக்கிறன் என்று கனவான் உபசாரத்துக்காக விசாரித்தார். அவனை நேற்றுப் புதைத்து விட்டோம் என்றுள் கிழவி.

பேரனைப் பறி கொடுத்துவிட்ட பாட்டிக்கு எவ்வாறு ஆறுதல் கூறுவது என்று புரியாது குழம்புகிறுர் பெரிய வர். அவள் பெருமூச்சுடன் வேலையில் ஈடுபடுகிறுள். பேரனின் சிறு குறும்புகள் அவள் நினைவில் எழுந்து கிளர்வூட்டுகின்றன.

அடுப்புத் தீயும் அடுப்பங்கரை அலுவல்களும் அவளது மனஓட்டத்துக்குத் தடை விதிக்கின்றன. பல ரகமான வேலைகளும் கவனத்தைக் கவர்கின்றன. சிரமமான வாழ்க்கைதான் ஸ்ரீமதி பார்க்கருடையது !

பதிருைவது வயசில் சொந்த ஊரை விட்டு மாபெரும் நகருக்கு வந்தாள். ஒரு வீட்டில் சிற்றுள் வேலை கிடைத்தது. பயங்கரமான இடம் அது. தலை மைச் சமையல்காரி கொடியவள். அங்கு கஷ்டப்பட்ட பார்க்கர் அம்மா ஒருவனைக் கல்யாணம் செய்து கொண் டாள். அதிலும் சுகப்படவில்லை. பதின்மூன்று குழந்தை கள் பிறந்தன. அவற்றில் ஏழு செத்தன. வீடு, இல் லாவிட்டால் ஆஸ்பத்திரி—புருஷனுக்குப் பணிபுரிதல், பிள்ளைகளுக்குப் பாடு பார்த்தல் என்று எப்பவும் வேலை தான். உதவி புரியவரும் உறவினரும் பாரமே ஆயினர். பிறகு இந்தப் பேரன்...

சதா நோஞ்ச உடம்புதான். எவ்வளவோ மருந்து கள் கொடுத்தும் அவன் தடிக்கவே இல்லை. முடிவில் செத்துப்போனுன். அவனது சீக்குக்கும், சிரமங்களுக் கும் பாட்டிதான் காரணம் என்று குறை கூறுவதுபோல் அவளைப்பார்த்துக் கொண்டே செத்து வைத்தான்.

அன்றாட வேலைகளைச் செய்துகொண்டும், கனவானின் கேள்விகளுக்கும் குறுக்கீடுகளுக்கும் பதில் அளித்தவாறும் அவள் தன் வாழ்க்கையின் போக்கை எண்ணுகிறாள். 'இதெல்லாம் எனக்கு ஏன் ஏற்பட வேண்டும்? நான் என்ன செய்தேன்? நான் என்ன தான் செய்தேன்?' என்று முனங்குகிறாள்.

என்னதான் செய்கிறோம் என்று உணராத நிலையிலே அவள் அடுப்பங்கரையையும் வேலைகளையும் அப்படியே போட்டுவிட்டு, இனம் விளங்காத அச்சத்தில் உந்தப்பட்டவளாய் தெருவில் அடியெடுத்து வைத்தாள். நடப்பதன் மூலம் தப்பி விடலாம் என எண்ணுவதுபோல் நடக்கலானாள்.

தெருவிலோ கடுங்குளிர். ஐஸ் மாதிரிக் குளிர்ந்த காற்று வேறு. மனிதர்கள் வேகமாக நடந்து மறைகிறார்கள்; ஆண்கள் கத்திரிகள் போல் நடக்கிறார்கள். பெண்கள் பூனைகள் மாதிரிப் போகிறார்கள். யாரும் அவளை அறிந்திருக்கவில்லை. எவரும் அவளைப்பற்றிக் கவலைப்படவில்லை. இத்தனை வருட காலக்குமைதலின், கொதிப்பின் சுமை தாங்காது, உளம் முறிந்து, அவள் அழத் தொடங்கினால்கூட யாரும் அவளுக்காக அனுதாபம் கொள்ளப் போவதில்லை.

அழுவது என்ற எண்ணம் தானாகத் தலை தூக்கிய உடனே பார்க்கர் அம்மா ஒரு வழியைக் கண்டுபிடித்து விட்டதாக உணர்கிறாள். அழ வேண்டும். அதுதான் அவளது அப்போதையத் தேவை. அழ முடியுமானால்! நெடுநேரம், ஓய்வாக அமர்ந்து, அனைத்தையும் எண்ணி அழ முடியுமானால்? அவளது முதல் வேலை, கொடிய சமையல்காரி, பாடு பார்த்தது, பிள்ளைகளை இழந்தது, புருஷன் செத்தது, உயிரோடிருந்த பிள்ளைகள் அவளைத் தனியாகத் தவிக்க விட்டுச் சென்றது, கடந்

காலத்தின் துன்பச் சுமைகள், பேரனின் சாவு—எல்லாவற்றையும் எண்ணி, அழவேண்டும். அப்படி அழுவதற்கு நீண்ட நேரம் பிடிக்கும். என்னவானாலும், அதற்குரிய வேளை வந்து விட்டது. அவள் அழுதே ஆக வேண்டும். இனியும் அதை ஒத்திப்போட முடியாது. இன்னும் அவளால் காத்திருக்க முடியாது... அவள் எங்கே போவது?

மா பார்க்கரின் வாழ்க்கை கடுமையானதுதான். இழப்பதற்கோ காலம் இல்லை, ஆனால் அவள் எங்கே போக முடியும்? எங்கே?

வீட்டுக்குப் போக முடியாது. அவளுக்குத் தேவையான தனிமை அங்கே இல்லை. வெளியே எங்காவது ஒரு பெஞ்சு மீது அமர்ந்து அழ முடியுமா? வழியோடு போகிறவர்கள் வந்து கேள்வி கேட்டுத் தொண தொணப்பார்களே? கனவானின் தனி அறைக்கு மறுபடியும் போகவும் இயலாது. அயலார் வீட்டில் உட்கார்ந்து அழுவதற்கு அவளுக்கு என்ன உரிமை இருக்கிறது? எந்த வீட்டு வாசல்படி மீதேனும் இருந்து அழலாம் என்றாலோ, போலீஸ்காரன் குறுக்கிடுவானே!

ஐயோ, அவளுக்கு இடமே கிடையாதா? அவள் தனித்திருந்து, தனக்குத்தானே எண்ணிக் குமைந்து, தன் இஷ்டம் போல் வெகுநேரம் வரை ஓய்ந்துகிடந்து அழுவதற்கு—எவருக்கும் அவள் தொந்தரவு கொடுக்காமல், எவரும் அவளுக்கு தொந்திரவு தராமல் மறைவதற்கு—ஏற்ற இடம் ஒன்றுகூட இல்லையா? இந்தப் பரந்த உலகத்திலே, அவள் இறுதியாக உணர்ந்தபடி மனம் விட்டு அழுவதற்கும் ஒரு சிறு இடம் கிடையாதா?

மா பார்க்கர் நின்றுகொண்டே இருந்தாள், மேலும் கீழும் பார்த்தபடி. கொடிய குளிர் காற்று வீசி

அடித்தது. இப்போது மழையும் சேர்ந்து கொண்டது. அவளுக்குப் புகலிடம் இல்லைதான்.

* * *

இத்தகைய சோக நாடகங்கள், மனிதத் தன்மை வறண்டு விட்ட நாகரிக நகரங்களில் இந்நேரத்தில் கூட நடந்து கொண்டே இருக்கும். நடக்காது என்று சொல்ல முடியுமா என்ன ?

இதே போன்ற பரிதாப நிலைக்கு உட்பட்ட மனிதன் ஒருவனின் கதையை செகாவ் என்கிற ரஷ்ய ஆசிரியர் அழகாகச் சித்தரித்துள்ளார்.

குதிரை வண்டி ஓட்டிப் பிழைக்கும் ஒருவனின் அருமை மகன் செத்துப் போனான். அவன் உள்ளத்தில் துயரம் முட்டி நிற்கிறது. தனது இதய வேதனையை யாரிடமாவது கூறி, அனுதாபம் பெற வேண்டும் என்று முயற்சிக்கிறான் அவன். அவசரமே உருவான வியாபாரி ஒருவன் வண்டியில் வந்து ஏறுகிறான் 'விரட்டு, வேகமாகப் போ' என்று அவசரப்படுத்துகிறான். மகனைப் பறி கொடுத்தவன் உட்பக்கம் திரும்பி, மகனைப் பற்றிப் பேச்செடுக்க முயலும் போதெல்லாம் எரிந்து விழுகிறான். இப்படி, பகல் பூராவும் பல தடவைகள் பலரிடம் பேச முயன்றும், அவனுக்கு அவனது துயரத்தை வார்த்தைகளால் வெளியிட்டு ஆற்றிக் கொள்ளுவதற்கு வாய்ப்புக் கிட்டவே இல்லை. அவனுக்கோ அழுத்தும் சோகத்தை ஆற்றியாக வேண்டும். வாய்விட்டு அதைச் சொன்னால் போதும். அவன் பிழைப்பு அதற்கு இடம் தரவில்லை. குதிரையை லாயத்தில் அவிழ்த்துக் கட்டி, அதற்குத் தீவனமும் வைத்தான். பிறகு, அதன் அருகே உட்கார்ந்து, குதிரையின் முகத்தை வருடியவாறே, தன் துயரத்தை வெளியிட்டான் அவன். குதிரையும் காதுகளை நிமிர்த்தி,

அவன் பேச்சை அனுதாபத்தோடு கேட்பது போல், அவனையே பார்த்துக் கொண்டு நின்றது.

மறக்க முடியாத அருமையான கதைகளில் இதுவும் ஒன்று. செகாவ் மனித உணர்ச்சிகளை நன்கு உணரும் ஆற்றல் பெற்றிருந்தார். மனிதர்களின் உள்ளத்தையும் உணர்வுகளையும் - அவற்றால் விளையும் பலவீனங்களையும் குணக்கேடுகளையும்—சித்திரிக்கும் அழகிய கதைகள் அவரது படைப்புகள் ஆகும்.

* * *

அவனவன் உணர்ச்சிகள் தான் அவன் அவனுக்குப் பெரிசு. குறிப்பிட்ட கணத்தின் உணர்ச்சிதான் அவ்வேளைக்கு ஒவ்வொருவனுக்கும் முக்கியமாகத் தோன்றுகிறது. மனிதர்கள் உணர்ச்சி வசப்பட்டவர்கள். அதனால் தம்மை மறந்து, பிறரை மறந்து, மனிதத் தன்மையை மறந்து, நல்லது—கெட்டது என்ற உணர்வு மறந்து செயல் புரிந்து விடுகிறார்கள். அவர்களுடைய செயல்களிலே மனித இனத்தின் சின்னத்தனம்தான் மிக்கோங்கி நிற்கிறது—இதை செகாவின் கதைகள் பல நன்கு உணர்த்தும். முக்கியமாக, 'பகைவர்கள்' என்ற கதையைக் குறிப்பிடலாம்.

ஒரு டாக்டர். அவரது ஒரே மகன் இறந்து போகிறான். மனைவி துயர மிகுதியால் மயக்க முற்றுக் கிடக்கிறாள். இரவு ஒன்பது மணி.

அப்போது ஒருவன் டாக்டரின் உதவியை நாடி வருகிறான். பணக்காரன். தன் மனைவி திடீரென்று கடும் நோயுற்று அவதிப்படுகிறாள். டாக்டர் அவசியம் தன்னோடு வரவேண்டும் என்று வேண்டுகிறான்.

டாக்டர் தன் நிலைமையைச் சொல்லி, மறுக்கிறார். அவருடைய மனநிலை, வீட்டின் அமைதி, துயரச் சூழ்

நிலை எல்லாம் திறமையாக வர்ணிக்கப்படுகிறது, கதையில்...அவர்களுடைய இளமை போய் விட்டது. இனி மேல் அவர்களால் பிள்ளை பெறவும் முடியாது. எனவே, இறந்து போனது அவர்களது ஒரே மகன் மட்டுமல்ல; கடைசி மகனும் கூட.

டாக்டரின் துன்ப நிலையைப் பொறுமையோடு கவனித்திருந்த செல்வன், 'ஒரு மனித உயிரைக் காப்பாற்றுங்கள். மனிதத் தன்மையின் பெயரால் கேட்கிறேன்' என்கிறான்.

'மனிதத் தன்மை இருமுனைக் கத்தி ஆகும். அதே மனிதத் தன்மையின் பெயரால், என்னை அழையாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்' என டாக்டர் அறிவிக்கிறார்.

செல்வன் கெஞ்சி, வற்புறுத்தி, அவரைத் தன்னுடன் அழைத்துச் செல்கிறான். அவர்கள் பிரயாணமும் இயற்கையும் அழகாக வர்ணிக்கப்படுகின்றன. 'இயற்கை முழுவதுமே துன்பமும் நோயும் பிடித்துக் கிடப்பதுபோல் காட்சி அளித்தது.'

செல்வன் உணர்ச்சி மிகுதியோடு வீட்டினுள் ஓடுகிறான். வீடு அவனது பணப்பெருக்கையும் ஆடம்பரத்தையும் காட்டுவதாக இருந்தது. உள்ளே போன செல்வன் ஒரு உண்மையை உணருகிறான்; அவன் மனைவி அவனை ஏமாற்றி விட்டாள். ஆசைநாயகனோடு ஓடிப்போய் விட்டாள். அப்படி ஓடுவதற்காகவே, நோயாளி போல நடித்து, கணவனை வெளியேற்றியிருக்கிறாள். செல்வன் மிகுந்த துயரம் அடைந்தான்.

டாக்டர் 'நோயாளி எங்கே? இது என்ன நாடகம்?' என்று எரிச்சலோடு கத்தினார்.

மனைவி செய்த துரோகம், மனைவியிடம் தனக்குள்ள காதல், அந்தக் காதலுக்காக அவன் செய்த தியாகம் பற்றி எல்லாம் அவன் உணர்வோடு பேசுகிறுன்.

அவன் தனது குடும்ப ரகசியங்களைக் கூடச் சிறிதும் கூசாமல் சொல்லலானுன். அவ் இரகசியங்கள் அவனிடமிருந்து வெளிப்பட்டதனுல் அவனுக்கு ஆறுதல் ஏற்பட்டது போலும். இன்னும் ஒரு மணி நேரம் இப்படிப் பேசிக் கொண்டிருந்தால், அவன் உள்ளம் முழுவதையும் வெளியே கொட்டியிருந்தால், அவனுக்கு நன்ருக இருந்திருக்கும். டாக்டர் அனுதாபத்தோடு கேட்டுக் கொண்டிருந்தால், ஒருவேளை அவன் மனம் தேறி அநாவசியமான தவறுகள் இழைக்காமல் திருப்தி அடைந்திருக்கவும் கூடும். ஆனுல் அப்படி நடக்கவில்லை.

டாக்டர் வெறுப்பாகப் பேசினுர். தன்னை அவன் அவமதித்து விட்டதாகவும், தனது உணர்ச்சிகளை அலட்சியப்படுத்தியதாகவும் குறை கூறினுர். பணக்காரர்களின் காதல் லீலைகள் பற்றிக் கேவலமாகப் பேசினுர். அவனது உணர்ச்சி மாறுதல்களைக் கவனிக்க மனம் இல்லாமல் அவர் ஏசினுர். 'இன்னெருவனின் துன்பத்தை ஏளனமாகக்கருத உனக்கு என்ன உரிமை இருக்கிறது?' என்ருர்.

செல்வன் தாராளமாகப் பணம் தர முன் வந்தான். அதற்காகவும் டாக்டர் அவனைப் பழித்தார். அவனும் கூச்சலிட்டான்; 'அத்தகைய வார்த்தைகளை அவர்கள் குடி போதையிலோ, நினைவிழந்தோ கூடப் பேசியிருக்க மாட்டார்கள். இருவருக்கும் அவரவர் துன்பமும், துன்பப்படுவோனின் தன்னல மனப் பண்பும் தான் மேலிட்டு நின்றன. துன்பம் மனிதர்களை ஒன்று

சேர்ப்பதற்கு பதிலாகப் பிரித்து வைக்கிறது. அவர்களை நியாய மற்றும் இரக்கமின்றியும் நடந்து கொள்ளத் தூண்டுகிறது.'

டாக்டரும் செல்வனும் பேசாத நிலை அடைந்தனர்; அவன் ஒரு வண்டியில் அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தான். வழி நெடுக அவர் அவனைப் பற்றியும், அவன் மனைவி, உறவினர்கள், அவனைப் போன்ற ஆடம்பரக்காரர்கள் பற்றியும் குரூரமாக எண்ணி வந்தார். அவ்வித மனிதர்களைப் பற்றி மிகவும் கேவல மான எண்ணம் அவர் உள்ளத்தில் பதிந்து விட்டது.

'காலம் கடந்து போகும். அவரது துன்பம் மறைந்து போகும். ஆனால், அந்தத் தவறான மனப் பான்மை மறையாது. டாக்டர் இறக்கிற வரை அது அவர் உள்ளத்தில் கறையாக இருக்கத்தான் செய்யும்' என்று முடிகிறது கதை.

# மூன்று வீரர்கள்

ஒரு கதை—உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கலாம்.

இரண்டு அயோக்கியர்கள் ஒரு மன்னனை முட்டாள் ஆக்கத் திட்டமிட்டார்கள். மன்னனை முட்டாள் ஆக்குவதன் மூலம், அவனைச் சேர்ந்தவர்களையும் நாட்டு மக்களையும் முட்டாள்களாக்கி விட முடியும் என அறிந்தவர்கள் அவர்கள். அதன் மூலம் பணமும் பொருளும் பெறவும் திட்டமிட்டனர் அவ்விரண்டு பேரும்.

அரசனிடம் சென்று, அவர்கள் 'நாங்கள் புதிய துணி நெய்து, புது ரக ஆடைகள் தயாரிப்பதில் பெரிய நிபுணர்களாக்கும், அப்படியாக்கும் இப்படியாக்கும்!' என்று அளந்தார்கள். 'தங்கத்தைத் துணியாக நெய்து, தகத்தகாய ஆடைகள் செய்து தருகிறோம்' என்றார்கள். மன்னனும் அவர்கள் பேச்சில் மயங்கி விட்டான். அற்புதமான புதிய ஆடைகள் தயாரிப்பதற்குத் தேவையான பொன்னும் பொருளும் அள்ளி வழங்கினான் அவன்.

அந்த அயோக்கியர்கள் முன்னெச்சரிக்கையாக—புத்திசாலித்தனமாக—ஒரு நிபந்தனை விதித்தார்கள். 'நாங்கள் ஆடைகள் தயாரிக்கும் இடத்துக்கு அடிக்கடி யாரும் வரக்கூடாது. மேலும் ஒரு முக்கிய விஷயம். நாங்கள் தயாரிக்கிற துணி அதிசயமானது; மாய சக்தி பெற்றது. பெரிய பதவியானாலும் சரி, சிறிய பதவியாயினும் சரி, தகுதியில்லாமல் பதவியில் ஒட்டிக் கொண்

டிருப்பவர்கள் பார்வையில் அந்தத் துணியோ, துணியி ளுல் செய்யப்படும் ஆடையோ தென்படாது. இதன் மூலம், யார் பதவிக்கு லாயக்கு அல்லது லாயக்கில்லே என்பதையும் கண்டு பிடித்துவிட முடியும்' என்று சொன்ஞர்கள்.

அவர்கள் தனி இடத்தில் அமர்ந்து துணி நெய்வ தாகவும், ஆடைகள் தயாரிப்பதாகவும் பம்மாத்துப் பண்ணிஞர்கள். ஆர்வம் தாங்க முடியாதவனுய் மன்னன் ஒரு தடவை வந்து பார்த்தான். ஒருவன் தறி முன் இருந்து கைகளேயும் கால்களேயும் ஆட்டி அசைத்தபடி காட்சி அளித்தான். இன்ஞெருவன் துணியை வெட்டுவது போலவும், அளவு எடுப்பது போலவும் நடித்தான். 'பார்த்தீர்களா! எவ்வளவு அருமையான நெசவு! எவ்வளவு நேர்த்தியான துணி!' என்று பெருமை யடித்தார்கள்.

அரசன் கண்ணில் துணியும்படவில்லே; நேர்த்தி யும் அழகும் மென்மையும் புலஞகவில்லே. 'ஓகோ, இது ஏதடா ஆபத்து! நாம் மன்னஞக இருக்கத் தகுதி யற்றவன் என்றல்லவா தோன்றுகிறது! இதை வெளியே சொன்ஞல் நமக்கே தீங்கு ஏற்படும்' என்று எண்ணிஞன். ஆகவே, 'ஆகா! ஆகாகா!' என்று வியந்து விட்டு, வெளியேறிஞன்.

பிறகு, புதிய துணியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலோடு மந்திரி வந்தான். அவன் பார்வையிலும் துணி தென்படவில்லே. துணி நெய்வது போலும், ஆடைகளே வெட்டித் தைப்பது போலும் அவ்வீணர்கள் நடித்துக் கொண்டிருந்ததை அவனும் நிஜம் என்றே நம்பிஞன்.—'துணி எதுவும் நம் கண்ணில் தென்பட வில்லே என்று நாம் சொல்லப் போஞல், மந்திரி பதவிக்கு நாம் தகுதியுடையவன் அல்ல என்று அரசன்

தீர்மானித்து, நம்மை விரட்டி அடிப்பான்' என்ற அச்சம் அவனுக்கு ஏற்பட்டது. அதனுல் அவனும் வீணர்களின் புகழ் மொழியை அங்கீகரித்து, அற்புத மான துணி; அழகான ஆடைகள்' என்று பாராட்டி விட்டுப் போனுன்.

இப்படி முக்கியமானவர்களை ஏமாற்றி, நாளோட்டிய அயோக்கியர்கள் முடிவாக ஒருநாள் அரசனை அணுகினுர்கள். 'புதிய ஆடைகள் அணிந்து தாங்கள் நகர் வலம் வரவேண்டியதுதான்' என்ருர்கள். இது நகரெங்கும் அறிவிக்கப் பட்டது. புதிய ஆடைக ளின் அற்புத சக்தி பற்றி முன்னரே எங்கும் பேச்சு அடிபட்டதால், அதைக் காணும் ஆவலோடு வீதிகள் தோறும் பெருங் கூட்டம் குழுமியது.

அயோக்கிய சிகாமணிகள் மன்னன் மீது கிடந்த துணிமணிகள் அனைத்தையும் அகற்றினர். புதிய ஆடைகளால் அவனை அலங்கரிப்பது போல் வேலைத்த னங்கள் செய்தனர். அரசன் கண்ணுக்குத் துணி எதுவும் தென்படவில்லை. ஆயினும் அவன் புத்தாடை களால் அகமகிழ்ச்சி பெற்றது போல் காட்டிக் கொண்டான். மன்னன் பின்னே தொங்கிப் புரளும் நீண்ட துணியை தூக்கிப் பிடிப்பது போல் நடித்தபடி இரண்டு பேர் நின்ருர்கள். ஊர்வலம் தெருத் தெருவாய் சென்றது!

மன்னன் உடை எதுவும் அணிந்திருக்க வில்லை என்றே ஒவ்வொருவருக்கும் தோன்றியது. எனினும் அந்த எண்ணத்தை வாய்விட்டுச் சொல்ல எவருக்குமே துணிச்சல் இல்லை. அதைச் சொன்னுல், அவர் வகிக் கும் பதவிக்கு அந்த ஆசாமி லாயக்கு இல்லை என்ருகி விடுமே! அப்புறம் என்ன தண்டனை கிடைக்குமோ எனும் பயம் எல்லோரையும் வாய்மூடி மௌனியாக்கி விட்டது.

முடிவில், ஒரு குழந்தை மன்னனை அதிசயமாக நோக்கி, 'ஆகாகா' என்று சிரித்தது. 'ஏஹே, ராஜா சட்டை கிட்டை எதுவுமே உடுத்த வில்லையே. அம்மணமாக அல்லவா இருக்கிறார்!' என்று கை கொட்டிச் சிரித்தது.

குழந்தை எந்தப் பொறுப்பையும் பதவியையும் வகிக்கவில்லை; அந்தப் பொறுப்புக்கு அது தகுதி அற்றது என்று சொல்வார்களே என்ற பயமும் அதற்குக் கிடையாது. அது அறிவித்த உண்மை—ஒவ்வொரு வரும் உணர்ந்த உண்மை—கூட்டம் நெடுகிலும் பேரொலி பெறுவதாயிற்று, மன்னனும் உணர்ந்த உண்மைதானே அது! ஆடையற்ற நிலையில் இருப்பது இப்போதுதான் அவனுக்கு அவமானமாகப் பட்டது. ஊர்வலம் குழப்பத்தில் முடிய, மன்னன் அரண்மனைக்கு ஓடினான். அயோக்கியர்கள் எப்பொழுது, எங்கே எப்படி ஓடி மறைந்தார்கள் என்கிற விஷயம் யாருக்கும் தெரியாது!

சுவையான இந்தக் கதை ஆண்டர்சன் கட்டுக் கதைகளில் ஒன்று ஆகும். இதே போல் சுவையான ஒரு கதை—வீணாதி வீணன் ஒருவனைப் பற்றியது— அராபிய இரவுக் கதைகளில் வருகிறது.

பெரும் பணக்காரன் ஒருவன். மிகுந்த தமாஷ் பிரியன் போலும்! பெரிய மாளிகை வாசியான அவனைத் தேடி வருகிறவர்களை அவன் ஆரவாரமாக வரவேற்பது வழக்கம். ரத்தினக் கம்பளம் பரப்பிய அறை. பெரிய மேஜைகள் அழகான நாற்காலிகள், ஆடம்பரமான சூழ்நிலை. இவற்றுக் கெல்லாம் மேலானதாக அமையும் அவனது உபசாரம்.

வந்தவரை விருந்து உண்ணும்படி மேஜை முன் அமர்த்துவான் அவன். தானும் உட்கார்ந்து கொள்

வான். 'உயர்தர இனிப்பு வகைகளைப் பரிமாறுங்கள். மதிப்பு மிகுந்த மதுவகைகளைக் கொண்டு வாருங்கள்!' என்று கூப்பாடு போடுவான்.

ஆட்கள் வருவார்கள். தூக்க முடியாதபடி பாத்திரங்களைத் தூக்கி வருவது போலவும், பரிமாறுவது போலவும் அபிநயிப்பார்கள். 'சாப்பிடுங்கள், நண்பரே! இதைத் தின்று பாருங்கள். ருசியாக இல்லை? இந்த மது எப்படி?' என்று வீட்டுக்காரன் அளப்பான். தான் மிகுதியும் சுவைத்து உண்பது போல் நடிப்பான். எதிரே இருப்பவரை உபசரித்து உற்சாக மூட்டுவான்.

விருந்தாளி ஒன்றும் புரியாமல் விழிப்பான். பெரியவன் தன்னைக் கேலி பண்ணுகிறானே என்று திகைப்பான். பசி வேறு இருக்கும். கோபம் கொண்டு 'என்னய்யா, விளையாடுகிறீரா?' என்பது போல் ஏதாவது சொல் உதிர்ப்பான். அவ்வளவுதான். வீட்டுக்காரன் வெகுண்டு, அவனுக்குச் சரியான பூசைக் காப்பு கொடுத்து விரட்டி விடுவான்.

இத்தகைய அயோக்கிய சிகாமணியிடம் ஒரு நாள் ஒரு வீணன் வந்து சேருகிறான். வீட்டுக்காரன் காணாது கண்ட நண்பனை மீண்டும் சந்திக்க நேர்ந்தது போல் உவகைப் பெருக்குக் காட்டி வரவேற்றான். குதூகலமாக உபசரித்தான். 'சாப்பிடுமையா நண்பரே! வயிறு கொள்ளு மட்டும் உண்டு களியும். குடித்து மகிழும்!' என்றான்.

ஆட்கள் வந்து போவதையும், பரிமாறுவது போல் பாவலாப் பண்ணுவதையும், எதிரே இருக்கிற தடியன் தின்று சுவைப்பது போல் நடிப்பதையும் வந்தவன் கண்டு, புரிந்து கொண்டான். வீட்டுக்காரனுக்குத் தகுந்தபடி தானும் நடிப்பது என்று தீர்மானித்துச் செயல் புரியலானான்; தின்பண்டங்

களைச் சுவைத்து அனுபவிப்பதுபோலவும், குடி வகை களின் சிறப்பில் சொக்கிவிட்டவன் போலவும் அவன் திறமையாக நடித்தான். அது மாத்திரமா! விருந்தாளி வீட்டுக்காரனைவிட மிஞ்சியும் விட்டான்! 'குடி...குடி' என்று போலியாக உபசரித்தான். அவனே குடி போதையே ஏறிவிட்டதுபோல, நல்ல சமயம் பார்த்து பிரபுவை ஓங்கி ஒரு அறை விட்டான்!

பிரபு கோபித்துக் கொண்டான் என்று நினைக்கிறீர்களா! அதுதான் இல்லை. புகழ்ந்தான்.

வீட்டுக்காரனே வியந்து போகிற அளவுக்கு அமைந்தது அவன் நடிப்பு. வீட்டுக்கார வீணன், விருந்தாளி வீணனைத் தழுவிக்கொண்டான். 'நீதான் நமக்கு ஏற்ற ஆள். இன்று முதல் நீ நமது நண்பன்' என்றெல்லாம் புகழ்ந்தான். பிறகு உண்மையாகவே ருசி மிக்க உணவு வகைகளைக் கொடுத்து அவனை உபசரித்து மகிழ்ந்தான்.

அராபியக் கதைகளைப் படிக்கிறபோது, மனிதனது கற்பனை என்னென்ன மாதிரி எல்லாம்தான் வேலை செய்திருக்கிறது என்ற வியப்பு ஏற்படாமல் போகாது.

வேறொரு வீணச்சிகாமணி பற்றிய கதையையும் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன்.

கஞ்சப் பிரபு ஒருவன். அவனைக் கண்டு, பரிசு பெறலாம் என்ற நம்பிக்கையோடு ஒரு சங்கீத வித்வான் வந்தான். பிரபு முகம் மலர்ந்து வரவேற்றான். பாடகன் உற்சாகமாகப் பாடினான். கஞ்சன் பலமாகத் தலையசைத்து, 'ஆகா' போட்டு, ரசித்தான். ஒரு பாட்டு முடிந்ததும், 'பாகவதருக்கு ஒரு பவுன் எடுத்து வை' என்று உத்திரவிட்டான்.

பாடகன் மகிழ்ச்சியோடு மேலும் பாடினான். 'இந்தப் பாட்டுக்காக இவருக்கு ஒரு சால்வை கொடு!'

என்ருன் பிரபு. இப்படி வித்வான் பாடப் பாட, கஞ்சன், ‘மோதிரம் கொடு...சங்கிலி எடுத்து வை. நூறு ரூபாய் கொடு’ என்று சொல்லிக் கொண் டிருந்தான்.

நேரம் ஆகிவிட்டது என உணர்ந்த பாடகன் தனது சங்கீத விருந்தை முடித்துக்கொண்டான். பிரபு உத்திரவிட்டபடி பரிசுப் பொருள்களும் பணமும் வந்து சேரும் என்று ஆசையோடு எதிர்பார்த்துக் காத்திருந் தான். ஆனால் எதுவும் வரவில்லை.

‘ஐயா, எனக்கு விடை தருகிறீர்களா?’ என்று பணிவுடன் கூறினன் பாடகன்.

‘ஆகா, போய் வாரும்!’ என்று கும்பிடு போட்டான் பிரபு

பாகவதர் தயங்கி நின்றதைக் கண்டு, ‘என்ன? ஏன் இன்னும் போகாமல் நிற்கிறீர்?’’ என்று கஞ்சன் கேட்கவும், ‘பணமும் பரிசும் வரவில்லையே’ என்ருன் பாடகன்.

‘பணமா! பரிசா? உமக்கா! ஏனே?’ என்று பிரபு ஆச்சரியப்பட்டான்.

‘நான் பாட்டுப் பாடியதில் மகிழ்ச்சி அடைந்து தாங்கள் பவுனும் சால்வையும் மோதிரமும் சங்கிலியும் ரூபாயும் கொண்டு தரும்படி உத்திரவிட்டீர்களே? அவற்றை உங்கள் ஆள் எடுத்து வந்து தரவில்லையே...’

அற்புதமான நகைச்சுவையை உணர்ந்து விட்டவன்போல், கடகடவெனச் சிரித்தான் கஞ்சப் பிரபு. ‘பளாபளா! பவுனும் பட்டும் பிறவும் நான் உமக்குக் கொடுக்க வேண்டும் என்று நீர் எதிர்பார்ப்பது

பெரிய வேடிக்கைதான். எனக்கு நீர் என்ன ஐயா செய்தீர்? காதுக்கு ஏதோ இனிமையாகப் பாடினீர். பாவம், மனுஷன் கஷ்டப்பட்டுக் கத்துகிருனே என்று, நானும் உமது காது குளிரும்படி அவ்வப்போது சில வார்த்தைகள் சொன்னேன். நீர் பாடியதைக் கேட்டு எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது என்று நீர் நினைக்கிறீர். நான் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு நீர் அதிக மகிழ்ச்சி அடையவில்லையா, என்ன? ஆகவே, இரண்டும் சரியாகிவிட்டது. நீர் போகலாம்' என்று சொல்லி, பிரபு அவனை அனுப்பி வைத்தான்.

பாகவதர் தான் ஏமாந்ததை எண்ணி வருத்தப் பட்டு வயிற்றெரிச்சலோடு பிரபுவை மனசுக்குள் ஏசியபடி போயிருப்பார்! வேறு என்ன செய்யமுடியும் பாடகனல்?

உலகம் பலவிதம்; மனிதர்கள் ரகம் ரகம்! வேடிக்கை மனிதர்களின் விந்தைச் செயல்களைச் சுவையாக சொல்லும் கதைகள் ரசமானவை. அதனல் கதை சொல்லும் கலை வெற்றிகரமான வரவேற்பைப் பெற்று வாழ்ந்து வளருகிறது என்று கூறலாம்.

# உதிரிப் பூக்கள்

'ஜெர்மினல் நாவலை மூன்ருவது (அல்லது, நான்காவது?) தடவையாகப் படிக்கிறேன். ஒவ்வொரு தடவை படிக்கிறபோதும் புதுப்புது நயங்கள் தோன்று கின்றன. எமிலி ஸோலாவின் மேதைக்கு இதுவே சான்ருகும்' என்று ஆன்ரீ கைட் தனது 'ஜர்ன'லில் குறித்திருப்பதாக 'ஜெர்மினல்' என்கிற நாவலின் முகவுரை கூறுகிறது.

நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் வாழ்க் கையை உண்மைத் தன்மையோடு சித்தரிக்கும் அருமையான நாவல் 'ஜெர்மினல்'

சில புத்தகங்களின் நயங்களை உணர்வதற்கு— உய்த்துணர்ந்து ரசிப்பதற்கு—அவற்றைத் திரும்பத் திரும்பப் படிக்க வேண்டியது அவசியம் என்றே நானும் கருதுகிறேன்.

எமிலி ஸோலாவின் 'நாநா' முதல் வாசிப்பின் போது நல்ல பெயர் பெற முடிவதில்லை. பத்து வருஷங் களுக்கு முன்பு அதை நான் முதலில் வாசித்தபோது, 'இதில் பிரமாதமாக என்ன இருக்கிறது? ஒரு தேவடியாள் ஒவ்வொரு பணக்காரனைக் பார்த்துப் பிடித்து நாசப்படுத்தி வருகிருள். இவ்வளவுதானே!' என்று எண்ணினேன்.

'நாநா, நாநா என்கிருர்களே என்று ஒரு புத்தகம் வாங்கினேன். படித்து முடித்தேன். பிரமாதமாக அதிலே ஒண்ணுமில்லை' என்று அதே சமயத்தில் ஒரு அன்பர் என்னிடம் சொன்ஞர்.

'ஸோலாவின் நாநா சுத்த போர் என்பதுதான் என் கருத்து' என்று இலக்கிய ரசிகர் ஒருவர் சென்ற வருஷம் எனக்கு ஒரு கடிதம் எழுதி அறிவித்தார்.

அநேக ரசிகர்கள் இவ்விதமே உணர்ந்திருப்பார்கள்.

நீண்டகால 'இடைவேளை'க்குப் பிறகு, சமீபத்தில் நான் 'நாநா' நாவலை அவசரம் எதுவுமின்றி, அத்தியாயம் அத்தியாயமாகப் படித்தேன். சில இடங்களில் அந்த நவீனம் 'போர்' ஆகத் தோன்றினாலும், அநேக இடங்களில் மிகுந்த நயம் காணப்படுகிறது.

நாநா எனும் வேசையின் குணங்களையும், பண்பாட்டையும், வேசைகளுக்கு உரிய மனோதத்துவ ரீதியான வக்கிரங்களையும், அவளை நாடி வருகிறவர்களின் பண்புகளையும் நுணுக்கமாகவும் திறமையாகவும் சித்தரித்திருக்கிறான் ஸோலா. பல இடங்கள் வெகு நேர்த்தியாக விளங்குகின்றன. நாநா வயது முதிராத இளைஞன் ஒருவனின் காதல் வெறியை அங்கீகரித்து, அவனோடு அனுபவித்து விளையாடுவது — வயது முதிர்ந்த கிழவர்களைத் தன் இஷ்டம்போல் ஆட்டி வைப்பது — அழகும் சதைப் பிடிப்பும் மிகுந்த தனது உடலைத்தானே காமுற்று, அதில் மயங்கி, கண்ணாடி முன் நின்று தன்னைத்தானே ரசித்து அனுபவித்து மகிழ்வது — பெண் இன்பம் பெறக் காத்திருக்கும் பித்தர்களைப் பழி வாங்குவதற்காக, அவர்கள் கண் முன்னால் அவள் வேறு ஒரு பெண்ணோடு கொஞ்சிக் காதல் விளையாட்டு பயில்வது — இவ்வாறு எத்தனையோ அம்சங்கள் திறமையாகக் கையாளப்பட்டுள்ளன.

'ஸெக்ஸ் ஸைக்காலஜி'க்கு ஆதாரமாக விளங்கக் கூடிய விஷயங்கள் ஸோலாவின் நாவல்களில்

மிகுதியாக இருப்பதனுல்தான், அவனது நாவல்கள் சிலவற்றை ஹேவ்லக் எல்லிஸ் ஆங்கிலப்படுத்தியிருக்கிருன் என்று கொள்ள வேண்டியிருக்கிறது.

* * *

விபசாரிகளின் வாழ்க்கையை 'உள்ளது உள்ள படி' சித்தரிக்கும் நாவல்கள் பல உள்ளன. ஆயினும், விபசாரத்தையும் விபசாரிகளையும் பற்றிய தனிரகமான— குறிப்பிடத் தகுந்த — ஒரு புத்தகம் என்று நான் சொல்லக்கூடியது இலக்கியப் பேராசிரியன் எவனும் எழுதாத ஒன்றே ஆகும்.

அமெரிக்காவில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்த விபசார விடுதிகளை நிர்வகித்த பாலிஆட்லர் என்பவள் எழுதிய 'விடுதி ஒரு வீடு ஆகாது' (House is not a home) என்ற புத்தகம் மிகவும் சுவாரஸ்யமானது. துணிச்சலோடும் திறமையாகவும் அவள் அதை எழுதி இருக்கிருள்.

"செக்ஸ் என்பதை நானு கண்டு பிடித்தேன்? இல்லையே! எனது விடுதிக்கு வர விருப்பம் இல்லாதவர் எவரும் அங்கே வந்துதான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை. உண்மையில் அவர்களுக்கு நான் ஒரு உபகாரம்தான் செய்து வந்தேன்.

"என்னைப் பொறுத்தவரை அது நல்லொழுக்கங்கள் பற்றிய பிரச்னை அல்ல; பொருளாதார விவகாரமும் தான். பணத்தின் மதிப்பை நான் அறிவேன். ஒரு நல்ல பெயரின் மதிப்பை நான் எவ்வாறு கணிக்க முடியும்?"

"விபசாரியும், காலேஜ் புரபஸர் அல்லது பூட்பாலிஷ் போடுகிற ஒருவன் போலவே, இன்றையக் கலாசாரம் என்கிருர்களே அதனுடைய விளைவுதான்.

அவர்களைப்போலவே தான், அவளுடைய தொழில் முறையும் சுற்றுப்புறங்கள், செயல் புரியும் நபர்கள் ஆகிய புறக் காரணங்களினுல் அவளுக்குக் கிட்டியிருக் கிறது. இந்த உண்மையை எனது வாடிக்கைக்காரர் களில் அநேகர் உணரவில்லை என்றே தோன்றுகிறது.''

'' நான் 'மேடம்' ஆக வாழ்ந்து என் பிழைப்பை நடத்த வேண்டும் என்ருகிவிட்ட பிறகு, விபசாரம் ஒழுங்கானதா — தவருனதா என்ற பிரச்னையைப்பற்றிய அக்கறை எதுவும் எனக்குக் கிடையாது. தார்மீக நோக்கிலோ, குற்றம் என்று கூறும் சட்ட நோக் கிலோ நான் அதை ஆராய்ந்து கொண்டிருக்க முடியாது. அதை நான் வெறுமனே வாழ்வின் ஒரு அம்சமாக — இன்று இருக்கின்ற, நேற்று இருந்த, நிகழ்காலத்தில் திட்டமிடப்படுகிறவற்றைப் பார்க்கினும் ஆழ்ந்த உறுதியான மாறுதல்கள் ஏற்படாதவரையில், நாளைக்கும் இருந்தே தீரக்கூடிய ஒரு அம்சமாகத்தான் — கவனிக்க வேண்டும். எந்த ஒரு பிஸினசும் 'ஸப்ளை அன்ட் டிமாண்ட்' என்கிற நியதியைப் பொறுத்தே செயல்படுகிறது. வாடிக்கைக்காரர்கள் இல்லை என்ருல், நிச்சயமாக விபசார விடுதிகளும் இல்லைதான். காமத்தினவைத் தணித்துக்கொள்வதற் காக ஆண்கள் பணம் கொடுக்கத் தயாராக இருப்பதனுல் தான் விபசாரமும் வாழ முடிகிறது. மனிதர்கள் பணம் கொடுத்துப் பெற விரும்புவது எதுவாக இருந் தாலும் சரியே; அது அவர்களுக்குக் கிடைக்கும்படி கவனிப்பதற்குச் சிலர் தயாராகவே இருப்பர்.''

''விபசார விடுதிகள் எல்லாம் — சென்ற காலத் தில் இருந்தனவும், இன்று இருப்பனவும் — அவை எங்கே இருந்தாலும் சரிதான் — மனிதனுக்கு இயற்கை யாக உள்ள ஒரு பசிக்கு உரிய உணவை அளிப்பதற் காகவே வாழ்கின்றன. வயிற்றுக்கு உணவு அளிக்கக்

காத்திருக்கும் சகலவிதமான சாப்பாட்டுக் கடைகளையும் போல் தான் இவையும்.''

''ஆண்கள் ஆண்கள் தான். பெண்கள் பெண்கள்தான். இரு ரகத்தினரும் எங்காவது ஒரு இடத்தில் கூடத்தானே வேண்டும்? ஒவ்வொரு நாளும் நாடு முழுவதிலுமுள்ள ஒவ்வொரு ஓட்டலிலும், ஒவ்வொரு போர்டிங் ஹவுசிலும், ஒவ்வொரு ஜாகையிலும் நடைபெருத விசித்திரம் எதையும் ஜனங்கள் விபசார விடுதியில் செய்வது இல்லையே! பின்னே என்ன?''

இவை அந்த அம்மையாரின் அழுத்தமான அபிப்பிராயங்களாகும். இத்தகைய ஆணித்தரமான கருத்துக்கள் இன்னும், ஏராளமாக இருக்கின்றன அவள் எழுதியுள்ள புத்தகத்திலே.

* * *

தென்னிந்தியாவின் தெற்கு மூலையில் உள்ள ஒரு சிற்றூரில் பிறந்து விட்டதற்காக எனக்கு நானே அனுதாபம் அறிவித்துக் கொள்வது உண்டு.

பனிப்பாலைகள், மலைகள், காடுகள் முதலியவைகளை நேரில் கண்டு உணர்ந்து, அவற்றிடையே சஞ்சரித்து, அனுபவம் பெறும் வாய்ப்புகள் கிட்டுவதில்லையே என்பதற்காகத்தான்.

காடுகள்—பெரிய பெரிய மரங்கள்—அவற்றிடையே தொங்கும் சிலந்திப் பூச்சி வலைகள்—அவற்றூடு பாயும் சூரிய கிரணங்கள் பற்றி எல்லாம் நான் கற்பனை செய்து களிப்பதுண்டு.

இவ்விதமான சூழ்நிலைகளை வர்ணிக்கும் கதைகளைப் படிக்கும்பொழுது, அவற்றில் அலைந்து திரிந்து

அனுபவித்த உணர்வுகளை எழுதும் எழுத்தாளர்களை எண்ணும்போது, 'இவர்கள் அதிர்ஷ்டசாலிகள்!' என்று நான் நினைப்பது வழக்கம்.

ருஷ்ய எழுத்தாளர்களான கே. பாஸ்டோவஸ்கி, மிக்கெயல் பிரிஷ்வின் ஆகியோர் தங்கள் கதைகளில் காடுகளைப் பற்றி அதிகமாகவும், அழகாகவும் வர்ணித்திருக்கிறார்கள். 'இவர்களைப் போல் காடுகளில் திரியும் வாய்ப்பு எனக்கு எங்கே கிடைக்கப் போகிறது!' என்ற வருத்தம், இவர்கள் எழுதிய கதைகளைப் படித்ததும் எனக்கு ஏற்பட்டது.

பிறகு, 'நம் நிலைமை அம்மா பெரிது என்று அக மகிழ்க!' என்று எனக்கு நானே போதித்துக்கொள்ள வேண்டிய ஒரு சந்தர்ப்பமும் ஏற்பட்டது, ருஷ்யாவைச் சேர்ந்த ஓய். ரிட்கூ என்ற எழுத்தாளனின் எழுத்துக்களைப் படித்தபோதுதான்......

அவன் 'சுக்ஷி' (Chukchi) இனத்தைச் சேர்ந்தவன். இவ் இனத்தினர் தூந்தரப் பிரதேசத்தில் வசிப்பவர்கள். 'அலிடெட் கோஸ் டு தி ஹில்ஸ்' என்கிற சோவியத் நாவலில் சித்தரிக்கப்பட்டுள்ள இடமும் இனமும் இவர்களுடையதே......

—பூதத்துவ உண்மைகள் 'ஜியாகரபி' படித்த நமது அறிவிலே நிலைத்து நிற்கலாம். ஆழப் பதியாமல் மங்கி மறைந்தாலும் மறைந்திருக்கலாம். எனினும், அவை பற்றி மனித உணர்வுகள் எடுத்துச் சொல்லும் போது நமக்கு விசேஷமான வியப்பு உண்டாகாமல் போவதில்லை......

அந்தப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் ஓங்கி உயர்ந்து நிற்கும் மரம் ஒன்றைக்கூடப் பார்த்ததில்லை. மர நிழல் பூமியில் படியும் அழகைக் கண்டதேயில்லை.

சினிமாப் படங்களில் மரங்களைக் கண்டிருப்பதுதான் அவர்களுடைய தரிசன அனுபவம்.

அங்கு பயிர் எதுவும் முளைத்து வளர்வதில்லை. எங்கு பார்த்தாலும் வெண்ணிறப் பனிக்கட்டிப் பரப்பே தான். ஒரு பெண்—வேறு பிரதேசம் சென்று படித்தவள்—ஊருக்குத் திரும்பி வரும்பொழுது, ஒரு பெட்டியில் மண்ணை நிரப்பி, அதில் ஆறு வெங்காயங்களை ஊன்றி எடுத்து வருகிறாள். அவை முளைத்து, பசுமையாய் வளர்வதை வயசு அதிகமான பெரியவர்கள் கூட 'அதிசயம்' என்றே கருதுகிறார்கள்.

அவள் 'மேல் படிப்பு'க்காக வேறொரு இடம் சேர்கிறாள். இரவு நேரம். அவள் தங்கிய அறைக்கு வெளியே ஏதோ ஒருவித 'சர்சர்ர' ஓசை நீடிக்கிறது. தரை மீது நிழற்கோலம் அசைகிறது. இவை எல்லாம் அவளுக்குப் புரியவேயில்லை. காலையில் கண் விழித்ததும் அவள் பெரிய மரங்களைக் காண முடிகிறது. மிகவும் ஆச்சர்யம் அடைந்துவிடுகிறாள்......

ஆகவே, காடுகளில் அலைந்து திரிய முடியாத நிலையில் இருப்பதற்காக நான் வருத்தப்படுவது சரியல்ல. ஓங்கி நிற்கும் ஒற்றை மரத்தைப் பார்க்க முடியாத நிலையில் வாழ்கிற மனிதர்களும் உலகத்தில் இருக்கிறார்களே !—இவ்விதம் எனக்கு நானே ஆறுதல் கூறிக் கொண்டேன்.

* * *

தமிழில் 'மலிவுப் பதிப்புகள்' ஸீசன் வரவர டல்லடிச்சுப் போச்சு! அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. மலிவுப் பதிப்பு வெளியிடுவோர் போட்டி போட்டுக்கொண்டு, பல பல புத்தகங்களை வெளியிட்டதனால், புத்தகங்களை விலை கொடுத்து

வாங்குவோர் மலிவாகவும் லாபகரமாகவும், அரிய நூல்கள் பலவற்றை வாங்குவது சாத்தியமாயிற்று.

வை. கோ. வெளியிட்ட நூல்கள் உண்மையிலேயே உயரிய 'மலிவு வெளியீடு'களாகும். அவற்றை விடக் 'கொள்ளை மலிவு' என்று சொல்லும்படியான நல்ல புத்தகங்களும் கிடைத்தன. இந்த ரகத்திலே 'சித்தர்களின் பாடல் தொகுப்பு'ம் (ஞானக் கோவை) சேரும்.....

வாழ்க்கையை வெறுத்து, உடலின்பங்களையும் சுகபோகங்களையும் துறந்து, உலகின் நிலையாமையையும் பயனற்ற தன்மைகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகப் பாட்டுப் பாடிக்கொண்டு, கிடைத்தால் உண்பது — கிடைக்காவிட்டால் கவலையற்றுத் திரிவது, கண்ட கண்ட இடங்களில் படுத்துறங்குவது என்று திரிந்தவர்கள் சித்தர்கள்.

சித்தர் பாடல்களில் பட்டினத்தார், சிவவாக்கியர் போன்றவர்களது பாட்டுக்கள் பகுத்தறிவு வாதத்தின் பாற்படுவதாகும். சிவவாக்கியர் சரியான அறிவியல் வாதி. பாம்பாட்டிச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகணிச் சித்தர் போன்ற சிலரது பாடல்கள் எளிமையும் இனிமையும் இசை நயமும் கலந்து தொனிப்பன. ஆறு, ஏழு சித்தர்களுக்கு அப்பால்பட்ட சித்தர்களின் ஓலங்களும் ஒப்பாரிகளும் படிப்பதற்கு இனிய தமிழில் இருந்தபோதிலும், புரியாத புலப்பங்களாகவே உள்ளன — பெரும்பாலும் சித்த பரிபாஷை அளவுக்கு அதிகமாகக் கலந்து கிடக்கிறது அவற்றிலே.

நமது அருமைத் தமிழ் கூட நமக்கே, கிரீக்கும் லத்தீனும் போல, விளங்காத மொழியாக மாறவும்

முடியும். இதற்கு சித்தர் பாடல்களும், பழம் பாடல்கள் பலவும் சாட்சி' என்கிறது என் மனம்.

சித்தர்கள் 'முறையாகத் தமிழ் பயின்று' பாடல் எழுதத் தொடங்கியவர்களாகவும் இருந்திருக்கலாம். 'கண்டது கற்றுப் பண்டிதர் ஆன' மேதைகளாகவும் இருந்திருக்கலாம். உண்மைத் தெளிவும் உள்ளத் துடிப்பும் கொண்டு பாடியவர்களாகவும் இருந்திருக் கலாம்.

இது எப்படி இருந்திருப்பினும், அவர்களில் அநேகர் பாடல்களில் நயம் இருக்கிறது; உள்ளத்தின் உண்மை ஒளி வாக்கிலே நாதமிடுவதை உணர முடிகிறது. பிற்காலக் கவிகளான பாரதியாரும் யோகியாரும் சித்தர்களின் பாடல்களால் வசீகரிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பதற்கு அவர்களது கவிதை களே சான்று கூறும்.

* * *

'விநோத ரச மஞ்சரி' எனும் புத்தகத்தின் ஆசிரியரான வீராசாமி செட்டியார் ஒரு ரசமான ஆசாமிதான்! இதற்கு அவர் எழுதியுள்ள கட்டுரை களே சாட்சி.

கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, காளமேகம், காளிதாசன் முதலியோரது வாழ்க்கையைப்பற்றி அவர் விரிவான கட்டுரைகள் எழுதியிருக்கிறார். கம்பர் வாழ்ந்தது, ராமாயணத்தை அரங்கேற்ற அரும்பாடு பட்டது முதலியவைகளைப்பற்றி எழுதும்போது, செட்டியார், தாமே கூட இருந்து பார்த்து ரிப்போர்ட் பண்ணுவதுபோல, மிக விரிவாகவும் விளக்கமாகவும் 'அளந்து' வைத்திருக்கிறார். 'இஷ்டம் போல் அடிச்சு விடுதல்' என்கிற உத்தி செட்டியாருக்கு வெகுவாகக் கைவந்த சரக்கு!

செட்டியார் பிரிட்டிஷாரிடமும், பிரிட்டிஷ் ஆட்சியிடமும் மிக்க நன்றி உடையவர் என்று 'காட்டுவான் வேண்டி' இரண்டு கட்டுரைகள் எழுதியிருக்கிருர். வாசகர் என்ன எண்ணுவார்கள் என்ற தயக்கம் சிறிதும் இல்லாமலே, அளவுக்கு அதிகமாக உயர்வு நவிற்சிகளைக் கையாண்டிருக்கிருர்.

மெத்தப் படித்த செட்டியார் தாம் அறிந்தவற்றை எல்லாம் ஒரே கட்டுரையில் திணிக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர் என்று புரிகிறது. ஆகவே, எந்த விஷயம்பற்றி எழுதத் தொடங்கினுலும், விரிவாகவும் ஏகப்பட்ட பழமொழிகளையும் குட்டிக் கதைகளையும் திணித்தும் எழுதாமலிருக்க முடியவில்லை அவரால். இந்த வகையில் வேதநாயகம் பிள்ளை இவருக்கு வழிகாட்டியாக இருந்திருப்பாரோ என்னவோ!

# சொல் ஆராய்ச்சி

'உமது தமிழ் நடை மிக அழகாக இருக்கிறது. அதில் இனிமையும் உணர்வும் நிறைந்துள்ளன. ஆனால் உம்மிடமுள்ள ஒரு பெரிய குறை என்னவென்றால், பிறமொழிச் சொற்களை ஆங்காங்கே கலந்துவிடுகிறீர். வடச் சொல்லோ, ஆங்கிலச் சொல்லோ கலவாதபடி உம்மால் எழுதமுடியாதா என்ன?'

இவ்வாறு எப்போதாவது ஒரு சிலர் என்னிடம் கேட்பது உண்டு. நேரிலும் கேட்கிறார்கள். கடிதங்களிலும் எழுதியிருக்கிறார்கள். தமிழ்ப் பற்று தங்களுக்குத்தான் அதிகம் இருப்பதாக எண்ணம் உடையவர்கள் இனியும் குறைகூறத்தான் செய்வர்.

உணர்ச்சிகளையும் அனுபவங்களையும் உயிருள்ள தமிழில் எழுதவேண்டும் என்ற எண்ணம்தான் எனக்கு உண்டு. தமிழுக்கு வளமும் வளர்ச்சியும், உயிர்ப்பும் உணர்வும் அளிக்கும் சொற்களின் மூலத்தை ஆராய்ந்து கொண்டிருப்பது என் வேலை அல்ல.

'சொல் ஆராய்ச்சி' மிகச் சுவை உடையதாகவே இருக்கலாம், பயன் தருவதாகவும் இருக்கலாம். ஆனால், அதில் முழுமூச்சுடன் ஈடுபடுகிறவர்கள்தான் எவ்வளவோ பேர் உளரே!

*　　*　　*

சொல் ஆராய்ச்சிக்காரர் ஒருவரைக்கண்டு பேசிவிட்டு வந்த என் அண்ணா அசோகன் ஒருநாள் சொன்னார்:

'சொல் ஆராய்ச்சி என்பது மிகவும் ரசமான விஷயம்தான். இன்று அவர் பல சொற்களைப்பற்றிக் குறிப்பிட்டார். முகம் என்கிற சொல் தமிழ்ச் சொல் இல்லையாம். அது சமஸ்கிருத வார்த்தையாம்......'

நான் சிரித்தேன். 'நமது தனித்தமிழ் அன்பர்கள் கூட முகம், முகம் என்றுதானே எழுதி வருகிருர்கள்! திருவள்ளுவர்கூட முகம் என்ற பதத்தை உபயோகித் திருக்கிருரே?' என்றேன்.

'அதனுல் அது வடசொல் இல்லை என்ருகி விடுமா? சொல் ஆராய்ச்சிக்காரர்கள்தான் ஆதாரத்தோடு சொல் கிருர்களே' என்ருர் எனது அண்ணு.

'முகம் என்கிற வடசொல் திருவள்ளுவர் காலத்தி லேயே தமிழாகிவிட்டது. சரி. அப்படி அந்தச் சொல் தமிழில் கலப்பதற்கு முன்பு, தமிழர்கள் முகம் என்ற அங்கத்தை எச் சொல்லால் குறித்திருப்பார்களோ?' என்று நான் சொன்னேன்.

—'மூஞ்சி' என்றுதான் அன்றும் குறிப்பிட்டிருப் பார்களோ என்னவோ என என்மனக் குறளி சிரித்தது.

*　　　*　　　*

''தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில் திருவள் ளுவர் காலம் ஏறத்தாழக் கி. மு. 1 முதல் கி. மு. 300க்கு உட்பட்டது என்று கோடலே அமைவுடையதாகும்'' என்று புலவர் மா. இராசமாணிக்கனுர் 'கால ஆராய்ச்சி' எனும் நூலில் எழுதியிருக்கிருர்.

எனவே, கி. மு. 300க்கு முந்தியே தமிழில் வேற்று மொழி கலந்துவிட்டது என்று கொள்ளலாம்.

—வேற்று மொழியை நீக்கிவிட்டு, தனித்தமிழில் தான் எழுதவேண்டும் என்று திருவள்ளுவர்கூட

எண்ணியதில்லை எனவும் கொள்ளலாம்! இது என் மனக்குறளியின் கூற்று.

'அவர் அப்படி ஒரு கொள்கை வகுத்திருந்தால் முகம் என்ற சொல்லுக்கு பதிலாக, பழந்தமிழ் சொல்லையே உபயோகித்திருப்பாரே!' என்றும் கூறுகிறது அது.

* * *

கவி ச. து. சு. யோகியாருடன் பேசிக் கொண்டிருந்தபோது, 'முகம்' விஷயம்பற்றி நான் குறிப்பிட்டேன்.

'இதில் என்ன சந்தேகம்? முகம் சம்ஸ்கிருத பதம் தான்' என்று அறிவித்த யோகியார் ரசமான ஒரு விவரமும் தெரிவித்தார் :

'பரிதிமாற்கலைஞன்' என்ற சூரியநாராயண சாஸ்திரியாருக்கும் சம்ஸ்கிருதப் பண்டிதர் ஒருவருக்கும் ஒரு சமயம் வாதம் ஏற்பட்டுவிட்டது. 'யாம் நுமது தமிழ்த்தாயை நோக்கிய காலை அவள் முகமற்று நின்றாள்' என்று பண்டிதர் சொன்னார். அதாவது, தமிழில் 'முகம்' என்ற சொல் கிடையாது என்பதை அவர் அப்படிக் குறித்தார். அதே போல சம்ஸ்கிருத்தில் வாய் என்பதற்குத் தனிச் சொல் கிடையாது. ஆகவே, பரிதிமாற்கலைஞன் சொன்னார்—'ஆரிய அணங்கினை யான் நோக்குங்கால் அவள் மூங்கையாய் நின்றாள்'! 'ஆரிய அணங்கு' ஊமை, அம் மொழியில் 'வாய்' இல்லை என்று சாஸ்திரியார் சொன்னார்......

சொல் ஆராய்ச்சி மட்டும்தானா சுவை உடையது? சொல் விஷயமாக எழுகிற சண்டைகளும் ரசமானவை தான்!

* * *

மூலப் பெயரைப் பொருள் பிரித்துப் புதுப் பெயர் காண்பதில் தமிழன்பர்களுக்கு என்றுமே ஆர்வம்

அதிகம் உண்டுதான்! இல்லையென்றால் சுநீதிகுமார் சட்டர்ஜி என்பவர் தமிழ் கற்றவுடன் தமது பெயரை 'நன்னெறி முருகன்' என்று மாற்றிக்கொள்வாரா என்ன?

அவர் 'வங்காளிகளும் தமிழர்களும்' என்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் காணப்படும் சுவையான விஷயம் இது—

'வங்காளத்தில் உள்ள நாங்கள், தென்னிந்தியர்களைப் போலவே பல விஷயங்களிலும் சம்பிரதாயங்களையும் தேசாச்சாரங்களையும் காப்பாற்றி வந்திருக்கிறோம். உதாரணமாக, நாங்கள் இன்னமும் வேட்டிதான் கட்டுகிறோம். தென்னிந்தியாவில் போலவே இன்னமும் எங்கள் பிராந்திய ஆடை வேட்டியும் சட்டையும் காலில் செருப்புமாகவே இருக்கிறது. கிராமங்களிலும், இன்றும் எங்களுடைய சடங்கு விருந்துகளிலும் நாங்கள், தமிழர்களைப் போலவே, வரிசையாகக் கீழே உட்கார்ந்து சாப்பிடுகிறோம். எங்கள் உணவும் அரிசிதான். வாழை இலை போட்டுத்தான் சாப்பிடுகிறோம். தெற்கே தமிழர்கள் சாப்பிடுவதுபோலவே நாங்கள் எங்கள் உணவின் கடைசி அம்சமாகத் தயிர் சாப்பிடுகிறோம். தயிர் இல்லாமல் உணவு பூர்த்தியாவதில்லை. அது தவிர்க்க முடியாத உணவு அம்சம். பழங்காலத்திலிருந்து நமக்கு வந்துள்ள விசேஷங்களில் இதுபோன்ற சின்னக் காரியங்கள் நூற்றுக் கணக்கில் நமக்குள் பொதுவாக இருக்கின்றன. ஒரு மாறுதலும் இல்லாமல் இன்றும் இருக்கின்றன. இவை மாறுபடாமல் தமிழர்களும் வங்காளிகளும் காப்பாற்றி வந்துள்ளனர். இவை எல்லாம் மேலெழுந்தவாரியான விஷயங்கள். ஆனால் ஆழத்திலே, அறிவுத்துறையிலும் ஆன்மீகத் துறையிலும் ஒரு ஒற்றுமையும் ஒரே பண்பாடும் இரண்டு பிரதேசங்களிலும் இன்னமும் காணக் கிடக்கின்றன என்பதுதான் பெரிய விஷயம்!'

இந்த 'மேலெழுந்தவாரியான விஷயங்கள்,' பெரிய விஷயங்களில் எல்லாம் வங்காளிகளுக்கும் தமிழர்களுக்குமிடையே காணப்படுகிற ஒற்றுமைகளைக் குறித்து எனது நண்பர் சுப. நாராயணன் மிக உற்சாக மாகப் பேசுவது வழக்கம். பதினன்கு வருஷங்களுக்கு முன்பு, இவ்விஷயம் பற்றி அவர் விரிவாகவே ஒரு கட்டுரை எழுதியிருக்கிருர்.

'மேலெழுந்தவாரியான விஷயங்கள்' அநேகருக்கு சுவையானவையாக விளங்குவதும், ஆச்சர்யம் அளிப்பதும் இயல்புதான். காலகாலமாக இவை மாறுபடாமல் காப்பாற்றி வரப்பட்டுள்ள விஷயம் நமக்குக் கூட சில சமயம் அதிசய உணர்வு உண்டாக்காமல் போகாது. மார்கோ போலோ எனும் யாத்ரிகனின் எழுத்தைப் படிக்கிறவர்கள் தங்களுக்கு ஏற்படும் அதிசய உணர்வை வாய்விட்டுச் சொல்லத் தவறுவதுமில்லை.

மார்கோ போலோ வெனிஸ் நகரிலிருந்து கிளம்பி ஆசிய நாடுகளில் சுற்றி அலைந்தான். ஒவ்வொரு நாட்டு மக்களின் பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் கவனித்தான். அவன் எங்கும் எதிலும் புதுமைகளைக் கண்டான். சிறு பிள்ளை உற்சாகத்தோடும் ஆசையோடும் விழிப்போடும் கண்டு அனுபவித்தவைகளை விரிவாக எழுதி வைத்தான். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னுடியே, அவன் எழுதிவைத்த குறிப்புகள் இன்றும் பசுமையாய், இனிய நினைவுகளைத் தரக் கூடியனவாக உள்ளன.

தமிழர்களைப் பற்றி — முக்கியமாக, பாண்டி நாட்டினர் பற்றி—அவன் எழுதியிருப்பது குறிப்பிடத் தகுந்தது—

அவர்கள் இடுப்பில் கட்டியுள்ள வேட்டியோடு தான் காட்சி தருகிருர்கள். உடம்பு மீது சட்டை

போன்ற துணி எதுவும் இல்லை. மன்னர்கள்கூட இவ்வாறே காணப்படுகிறார்கள். எல்லோரும் தரைமீது தான் அமருகிறார்கள். உயர்ந்த ஆசனங்கள் உபயோகிப்பதில்லை. பாண்டி நாட்டில் உள்ளவர்கள் அநேகமாக தினம் இரண்டு வேளை நீராடுகிறார்கள். வீடுகளைச் சாணமிட்டு மெழுகுகிறார்கள்...கண்ணாடிப் பாத்திரங்கள் இங்கு அறிமுகமாகியுள்ளன. பெண்கள் கண்ணாடி வளையல்கள் அணிவது வழக்கம். அவை நீல நிறத்திலும் கறுப்பு வர்ணத்திலும் உள்ளன...

தமிழர்கள் சோறு சாப்பிடும் முறை பற்றியும் அவன் எழுதி வைத்திருக்கிறான்...

நாகரிக வளர்ச்சி காரணமாக, சட்டை அணிவது, சட்டைக்கு மேலே சட்டை, கோட்டு—ஸூட்டு என்று சுமப்பது, நாட் கணக்கில் குளிக்காமலிருப்பது போன்ற வழக்கங்கள் தமிழ் நாட்டிலும் படிந்துவிட்டன. இருப்பினும், கிராமங்களில் வசிப்பவர்கள் மார்கோ போலோ காலத்தில் வாழ்ந்தவர்களைப் போல் தான் இன்றும் வாழ்க்கை நடத்துகிறார்கள்.

# இலக்கிய உலகம்

'என்னுடைய இந்த ஒரு நாவலைப் படித்துப் புரிந்து கொள்வதற்காக இலக்கிய ரசிகர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவிடலாமே!' என்று ஜேம்ஸ் ஜாய்ஸ் ஒரு சமயம் சொன்னானும்.

'யுலிஸிஸ்' என்ற நாவலுக்குப் பிறகு அவன் எழுதிய 'ஃபின்னிகன் வேக்' எனும் நாவல் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதாக இல்லை என்று சில ரசிகர்கள் தெரிவித்தபோதுதான் அவன் அப்படிச் சொன்னான்.

அவனுடைய தன்னகங்காரத்தைக் குறை கூறுவோர் கூறலாம். அவனது தற்சிறப்பு மோகத்தைப் பாராட்டுவோர் பாராட்டலாம். நான் அந்த நாவலைப் பார்க்கும் வாய்ப்பைக் கூடப் பெறவில்லை. அதனால், அவன் கருத்தைப் பற்றியோ அந்த இலக்கியப் படைப்பு பற்றியோ எதுவும் சொல்வதற்கில்லை.

உலக இலக்கியத்தில் மிகுந்த பரிச்சயமுடைய நண்பர் க. நா. சுப்ரமண்யத்திடம் ஒரு சமயம் நான் கேட்டேன், 'நீங்கள் ஃபின்னிகன் வேக் படித்திருக்கிறீர்களா ?' என்று.

'பார்த்திருக்கிறேன்' என்றார் அவர்.

அந்தப் பதிலிலிருந்து அவர் அந்நாவல் முழுவதையும் படித்துப் பார்த்தாரா இல்லையா என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

'அது எளிதில் புரியாது என்று சொல்கிறார்களே? அதை விளங்க வைப்பதற்காக அநேகர் கீ (Key) பல எழுதியிருக்கிறார்களாமே?' என்று கேட்டேன்.

'ஊம் ஊம்' என்றார் நண்பர்.

ஜேம்ஸ் ஜாய்ஸ் சொன்ன அபிப்பிராயத்தை நான் அறிவிக்கவும், க. நா. சு. சொன்னார்: 'உண்மையிலேயே தகுதியான புத்தகம் என்றால், அதற்காக வாழ் நாள் பூராவையும் செலவு செய்யலாமே. வாழ்வு முழுவதையும் செலவிட்டு ஒரு புத்தகத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டும் என்றால், அதற்குரிய தகுதி அந்தப் புத்தகத்துக்கும் இருக்க வேண்டுமல்லவா? உண்மையிலேயே உயர்ந்த நூலானால், அதற்காக நம் வாழ்வை தாராளமாகச் செலவு செய்யலாம்!'

அது எவ்வளவுதான் உயர்ந்த நூலாக இருந்த போதிலும், அதை மட்டுமே படித்துக் கொண்டிருப்பதில் என் வாழ்நாளைச் செலவிட நான் ஆசைப்பட மாட்டேன்.

தங்கள் தங்களுடைய மத நூலை மட்டுமே படித்துப் புரிந்துகொள்வதில் வாழ்வை அர்ப்பணிப்பதே சிறந்த செயல் என்று மதவாதிகள் கூறுகிறார்கள். மதவாதிகளின் வெறிக்கும் குறுகிய நோக்குக்கும்—அளவிலும் தரத்திலும்—சற்றேனும் பின்னிடாத தமிழ்ப் பண்டிதர்களில் சிலர் திருக்குறளை மட்டுமே படித்துக்கொண்டிருந்தால் போதும் என்கிறார்கள்......

இதெல்லாம் அவரவர் மனப்பண்பையும் அறிவுப் பசியையும் பொறுத்து அமையும்.

* * *

ஜேம்ஸ் ஜாய்ஸ் 'யுலிஸிஸ்' எனும் பெரிய நாவலை எழுதி, இலக்கிய உலகத்தில் புதுமையை ஸ்தாபித்தான்,

பரபரப்பை உண்டாக்கினுன்; தனக்கெனத் தனி இடம் பெற்றுக்கொண்டான்.

'யுலிஸிஸ்' என்ற நாவல் பெரியது. அளவிலும் தரத்திலும்தான். ஒரு மனிதனின் ஒருநாள் வாழ்க்கையை—அவனுடைய செயல், எண்ணம், ஏக்கம், உயர்ந்த சிந்தனை, 'தரக்குறைவான' நினைப்பு, அவன் சந்திக்கிற நபர்கள் பற்றி எல்லாம்—அழகாகவும் இலக்கிய அழுத்தத்தோடும் சித்திரிக்கிருன் அதில். அந்த நாவலில் ஆபாசம் அதிகமாக இடம் பெற்றுள்ளது என்று தடை விதிக்கப்பட்டதும், வழக்கு தொடரப்பெற்றதில் நீதிபதி அளித்த தீர்ப்பும் சரித்திரம் ஆகும்.

அயர்லாந்தைச் சேர்ந்த ஜாய்ஸ், டப்ளின் நகர வாசிகளைப்பற்றி எழுதியுள்ள புத்தகம் 'டப்ளினர்ஸ்' என்பது. ஜாய்ஸின் சிறுகதைகள் அவை. பார்க்கப் போனுல் அவை கதைகளே அல்ல. தமிழ் நாட்டுப் பத்திரிகை ஆசிரியர்கள், ரசிக சிகாமணிகள் நோக்கிலே கவனித்தால் அவை 'கதையுமல்ல, கட்டுரையுமல்ல, ஒண்ணுமேயில்லே'! டப்ளின் நகர மக்களின் வாழ்க்கையை,—அவர்கள் பேச்சு, செயல் முதலியவற்றை—விரிவாகச் சொல்கிற 'ரிப்போர்ட்டேஜ்' அது.

'உணவு விடுதியில் ஐவி டே' ('ஐவி டே அட் தி இன்') என்ற கதை இக் கூற்றுக்கு நல்ல உதாரணமாக அமையும்.

தேர்தல் காலம். மழையும் குளிரும் அதிகமான நாள். உணவு விடுதியில் சிலர் இருக்கிருர்கள். தேர்தலில் போட்டியிடும் பெரியவர் ஒருவருக்காக உழைக்கும் பிரசாரகர்கள் அவர்கள். வாக்காளர்களின் பண்பு, தேர்தல் நிலே, கட்சிகளின் போக்கு, இங்கிலாந்து மன்னர் பற்றி எல்லாம் மனம் விட்டுப் பேசுகிருர்கள். அவ்வப்போது ஒன்றிருவர் வருவதும், போவதும், குடிப்

பதும் நிகழ்கின்றன. முடிவில் ஒருவர் தேசவீரன் ஒருவனைப்பற்றிய பாடலை உணர்ச்சியோடு பாடுகிறார்— இவ்வளவுதான் விஷயம்.

'இறந்தவர்' ('தி டெட்') என்றொரு கதை. நூறு பக்கங்களுக்கும் அதிகமாக வருகிறது. இதன் முதல் பாதி வெறும் வம்பளப்புதான். ஒரு வீட்டில் நிகழும் விருந்தில் கலந்து கொள்வோரின் நடவடிக்கைகள், உரையாடல்கள் பற்றிய 'ரிப்போர்ட்டு' தான். பின் பகுதியில் உணர்ச்சியும் அழகும் அமைந்த கதை இருக்கிறது.

ஜாய்ஸின் சிறு கதைகளில் மூன்று—நான்கு நல்ல கதைகளும் இருக்கின்றன.

'டப்ளினர்ஸ்' என்கிற கதைத் தொகுதி பற்றிய ரசமான உண்மை ஒன்று உண்டு. இதுவரை அது டப்ளின் நகரில் பிரசுரிக்கப்படவே இல்லையாம்.

தனது கதைகளை அச்சில் கொண்டு வருவதற்கு ஜாய்ஸ் அரும்பாடு பட்டான். பிரசுரகர்த்தர் எவருமே அவன் எழுத்துக்களைப் புத்தகமாக்க முன்வரவில்லை. அச்சிட ஒப்புக்கொண்டு, பின் முடியாது என்று மறுத்து விட்டார்கள் சிலர். ஒரு பதிப்பகம் 'டப்ளினர்ஸ்' தொகுதியை வெளியிட ஏற்றுக் கொண்டது. அதன் அதிபரே பிரசில் புரூப் பார்க்கத் தொடங்கினார். வந்தது வினை. 'ஐவி டே' கதையில் எழுதப்பட்டுள்ள கருத்துக்களையும், டப்ளின் வாசிகள் சிலர் பற்றிய பிரஸ்தாபங்களையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே கடைசி நேரத்தில் அவர் ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டார்.

ஜாய்ஸின் கதைகளில் அநேகம், அவன் எழுதத் திட்டமிட்டு வந்த பெரிய நாவலின் (யுலைஸிஸ்)

ஆரம்ப முயற்சிகளாகவே அமைந்துள்ளன; இக் கதைகளில் வரும் கதாபாத்திரங்களை அவன் பிறகு நாவலில் திறமையாக இணைத்துவிட்டான் என்று விமர்சகர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

*　　*　　*

பெங்களூரில் வசிக்கும் நண்பர் ஒருவர் எனக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் காணப்படும் வரிகள் இவை:

''ஹிரோஷிமா எனும் படம் பார்த்தேன். சில மாதங்களுக்கு முன்புதான் பெங்குவின் புத்தகம் ஹிரோஷிமா படித்திருந்தேன். கற்பனை நவீனங்களை விட, சில வேளைகளில் பிரத்தியட்ச சத்தியம் நம் உள்ளத்தை உலுக்கிவிடுகிறது. படம் பார்த்தபோது, எனக்கு எரிக் மரியா ரிமார்க்கின் 'ஆல் கொயட் இன் தி வெஸ்டர்ன் ஃபிரன்ட்' விடாமல் நினைவுத் திரையில் நிழலிட்டது...''

எரிக் மரியா ரிமார்க்கின் நாவல் ஒன்று 'துன்பக் கேணி' என்ற பெயரில் தமிழில் வெளி வந்திருக்கிறது. நல்ல புத்தகங்களில் இதுவும் ஒன்று. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளில், இருக்க இடமின்றி எல்லைகளுக்கு அங்குமிங்குமாகத் தாண்டி அலைப்புண்டு அவதிப்படும் மக்களின் வாழ்க்கையைப் பற்றிய உருக்கமான கதை அது.

*　　*　　*

'யுத்த பீரங்கி மனித வைக்கோலையே தின்னும்.' இங்கிலீஷில் நினைத்துத் தமிழில் எழுதப்பட்ட வரி இது. 'கேனன் ஃபாடர்' என்பதை நினைவில் கொண்டு, இவ்வாறு தமிழில் எழுதியிருக்கிறார் ஒரு எழுத்தாளர்.

வாழ்வதற்கு ஆசைப்படுகிற மனிதர்களை யுத்த பலிகளாக மாற்றும் தொழில்கூட சுலபமாக நடந்துவிடு

வதில்லை. அதற்கும் எவ்வளவோ பயிற்சிகள், கட்டுத் திட்டங்கள், பணச் செலவுகள்!

மனிதரை 'பீரங்கித் தீனியாக' மாற்றுவதற்கு முந்தி, அவர்களிடம் மனிதத் தன்மை கொஞ்சம்கூட இல்லாதவாறு நசுக்கி வறளடிக்கும் திருப்பணியைத் தான் ராணுவ முறைகள்—ஒழுக்க விதிகளும் கண்டிப் பான கட்டுப்பாடுகளும்—நிறைவேற்றி வைக்கின்றன.

யுத்த தேவதைக்குத் தீவனமாக மாறத் தயாராகி விடுகிற மனித உருவங்கள் இயந்திரங்கள்போல் செயல் புரிந்தபோதிலும், அவர்களுடைய மனம் சும்மா ஒடுங்கி விடுவதில்லை. மனக்குறளி அதன் வேலையை ஒழுங் காகச் செய்து கொண்டுதானிருக்கும்!

மனிதனின் தனித்துவத்தை அழிக்க முயலும் நாகரிக அமைப்புகள் பலவற்றினுள் மிக முக்கியமானது ராணுவம். கொல்லுவதற்கும் கொல்லப்படுவதற்கும் ஊட்டம் கொடுத்து வளர்க்கப்படும் மனிதர்களை அடி மைப்படுத்தி அடக்கி ஒடுக்குவதற்குத் தேவையான விதிகளையும் உருவாக்கி வைத்திருக்கிறார்கள் பதவியில் இருப்பவர்கள்.

மேலிடத்து ஆசாமிகளின் சிறுமைப்புத்தி, பேராசை, பொருமை முதலிய பண்புகளையும், ராணு வத்தில் சேர்ந்தும் தனித்துவம் கெடாமல் போராடிப் பொருமுகின்ற சில நபர்களின் வாழ்க்கையையும் அழுத்தத்தோடு—புதுமையாகவும், நயமாகவும்—சித்தி ரிக்கும் நாவல்கள் உலக இலக்கியத்தில் பல உள்ளன. டால்ஸ்டாயின் 'டேல்ஸ் ஆவ் ஸெபஸ்டப்போல்', ஜேம்ஸ் ஜோன்ஸ் எழுதிய 'ஃப்ரம் ஹியர் டு எட்டர்னிட்டி', நார்மன் மெய்லரின் 'தி நேக்கட் அண்ட் தி டெட்' ஆகிய நாவல்கள் குறிப்பிடத்தக் கவை.

# பூத, பிரேத, பைசாசங்கள்

விஞ்ஞான யுகமான இந்த நூற்றாண்டிலேகூட பேய் பிசாசுகள் பற்றிய பயம் மனிதரிடமிருந்து விலகி விட வில்லை. பேய் வசிக்கும் வீடுகளைப் பற்றியும், பிசாசுகளின் சக்தி பற்றியும் இன்றுகூட மனிதர்கள் பேசிப் பொழுது போக்குகிறார்கள். பேய் பிசாசுகளைப் பற்றிய செய்திகளையும், பொய்களையும் ஆர்வத்தோடு கேட்கிறார்கள்.

தான் புரிந்துகொள்ள முடியாதவற்றைப் பற்றி இஷ்டம்போல் கதை அளப்பதில் மனித மனம் எப்பொழுதும் ஈடுபாடு உடையதுதான். வெறும் பேச்சில் பொழுது போக்கு அம்சமாக இருந்த பேய் பிசாசு விவகாரம், சுவையான கதைக் கலையாக வளர்ந்து, கற்பனை உள்ளமும் எழுத்தாற்றலும் பெற்ற வர்கள் கையில் நல்ல இலக்கிய சிருஷ்டியாகப் பரிண மித்து, ரசிகர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் விஷயமாக விளங்குவது புதிய செய்தி அல்ல.

ஆங்கிலத்தில் பேய்-பிசாசு இலக்கியம் வளமாகத் திகழ்ந்து வருகிறது. பயங்கரக் கதைகள் மிகுந்த திறமைசாலிகளால் உயர்வான முறையில் எழுதப் பட்டுள்ளன. குறிப்பிடத் தகுந்த பேய்-பிசாசு நாவல் களுக்கும் குறைவில்லை.

இத்தகைய கதைகளின் தொகுதிகள் ஆங்கிலத்தில் நிறையவே இருக்கின்றன. அவ்வப்போது புதிது புதி தாக வந்து கொண்டுமிருக்கின்றன.

பெர்லின் நகரிலிருந்து, உயர்ந்த நூல்களை அழகான முறையில் பதிப்பித்து வழங்கும் 'ஸெவன்

ஸீஸ் பப்ளிஷர்ஸ்' 1959-வருஷத்திய சிறந்த தயாரிப்புகளில் ஒன்ருக 'சிறு கதைத் தொகுதி'யை வெளியிட்டிருக்கிருர்கள். பயங்கரக் கதைகளைத் தேர்ந்தெடுத்து, 'Ghosts, Ghouls and other Nuisances' என்ற 'பெயரோடு பிரசுரித்திருக்கிருர்கள். (Edited by Maxim Liber. 272 Pages.)

ஒன்பது பேர் எழுதிய கதைகள் இந்தப் புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இவர்களில் எட்டுப்பேர் அமெரிக்கர்கள். 'காணுமல் போன பீட்டர் ரக்' 'பீட்டர் ரக் பற்றி அதிகமான விவரம்' என்பவற்றை தனித் தனிக் கதையாகக் கொள்வதானுல், இப் புத்தகத்தில் பத்துக் கதைகள் இருக்கின்றன என்று கணக்கிடலாம்.

ஆனுல், 'பீட்டர் ரக்—காணுமல் போன மனிதன்' 'பீட்டர் ரக் பற்றிய அதிகமான விவரம்' இரண்டும் ஒரே கதையின் இரு பகுதிகள்தான். வில்லியம் ஆஸ்டின் அற்புதமாகக் கதை எழுதியிருக்கிருர்.

மழையோ புயலோ வருவதற்குரிய அறிகுறி எதுவுமே இல்லை. எனினும், ரஸ்தாவில் பிரயாணம் சென்ற வண்டிகளின் குதிரைகள் தங்கள் காதுகளை நிமிர்த்தி, உடல் சிலிர்க்கச் செய்கின்றன. 'இப்ப கட்டாயம் பெரு மழையும் புயலும் வரும். புயல் எழுப்புகிறவன் இவ்வழியே வருகிருன். அதை குதிரைகள் உணர்ந்துவிட்டன' என்று வண்டிக்காரன் சொல்கிருன். சிறிது நேரத்தில் அந்த மனிதன் ஆஜராகிருன். காலத்தால் அடிபட்ட மனிதன் அவன். அவனருகே ஒரு குழந்தை. பழமை படிந்த வண்டி ஒன்று. பெரிய கறுப்புக் குதிரை வண்டியை வெகு வேகமாக இழுத்துச் செல்கிறது. சோர்வு படிந்த முகத்தோடு காட்சி தரும் மனிதன் 'காத்திருக்க நேரமில்லை. இன்று இரவுக்குள் நான் பாஸ்டன் நகரை அடைந்தாக

வேண்டும்' என்று சொல்லி மறைகிறான். அவன் பின்னாலேயே புயலும் மழையும், அவனைத் துரத்திச் செல்வது போல், ஓடுகின்றன.

அந்த மனிதனைப் பற்றி அவரவர் அறிந்த விஷயங்களை இதர பிரயாணிகள் பேசிக்கொள்கிறார்கள். அவன் எங்கெங்கோ தென்பட்டிருக்கிறான். பாஸ்டன் நகரத்தை விட்டுப் பல நூறு மைல்கள் தள்ளிய இடங்களில் திரியும்போதுகூட, 'நான் இன்று இரவுக்குள் பாஸ்டன் போய்ச் சேரவேண்டும்' என்றே சொல்வான். 'நீ போகிற வழி தவறானது. இது என்ன நகரம்' என்று பிறர் சொன்னாலும் அவன் நம்பமாட்டான். அவனும் அவனது கறுப்புக் குதிரையும் இவ்வுலகைச் சேர்ந்தவர்கள்தானா? ஆவிகளா? அதீத சக்தி பெற்ற ஆத்மாக்களா? யாரே அறிவர்! அவனைப்பற்றி விதம்விதமான செய்திகள் கூறப்படுகின்றன.

அவன்தான் பீட்டர் ரக். பாஸ்டன் நகரவாசி. அவனைப் பற்றிய கதைகளைக் கேட்டறிந்த ஜோனதான் என்பவன் பாஸ்டன் சென்று விசாரிக்கிறான்.

'முன்னொரு காலத்தில்' பாஸ்டன் நகரில் வாழ்ந்தவன் பீட்டர் ரக். சுகவாசி. மிகுந்த கோபக்காரன். கோபம் வந்தால் மனம் போன விதத்தில் சபித்து, வசை கூறும் பண்பு உடையவன். ஆனாலும், நல்ல மனிதன். ஒருநாள் அதிகாலையில் அவன், தனது சிறு மகளுடன், குதிரை வண்டியில் கிளம்பினான். கறுப்புக் குதிரை பூட்டிய வண்டி. அவன் திரும்பி வரும்போது மழையும் புயலும் வந்தன. ஒரு இடத்தில் அவன் சிறிது தங்கியபோது, அவனுடைய நண்பன் 'புயல் வருகிறது. இரவு நேரத்தை இங்கேயே கழிப்பது நல்லது' என்று வற்புறுத்தினான். அதனால் கோபம் கொண்டான் ரக். 'புயல் வரட்டும். நாசமாய்ப் போகட்டும். எப்படியும் இன்று இரவு நான் என்

வீட்டை அடைவேன். இல்லாதுபோனல், நான் என்றுமே என் வீட்டைச் சேரமுடியாமல் போகட்டும்!' என்று கத்தினன்.

துடிப்பு மிகுந்த குதிரை அவனை இழுத்துச் சென்றது. பாஸ்டன் நகரில் புயல் வந்தது. ஓய்ந்தது. ஆயினும், குழந்தையோடு வெளியே சென்ற ரக் வீடு திரும்பவே யில்லை. அவன் என்ன ஆனன் என்றும் அந்நகரினர் அறியமுடியவில்லை.

பலப்பல வருஷங்களான பிறகும், பீட்டர் ரக் பாஸ்டனில் உள்ள தன் விட்டை அடைய முடியாமல் எங்கெங்கோ சுற்றித் திரிவதாகச் செய்திகள் அடிபட்டன. வழியில் தென்படும் பீட்டர் ரக், குழந்தை குதிரை எல்லாம் மர்மத்தை வளர்க்கும் விஷயங்கள் தான் என்று மட்டுமே ஜோனதானுக்குப் புரிகிறது.

இதுதான் முதல் கதை. இது திறமையோடு எழுதப்பட்டிருக்கிறது. இதைவிட சாமர்த்தியமாகவும் சுவையோடும் வளர்க்கப் பட்டுள்ள பகுதிதான் 'பீட்டர் ரக் பற்றி அதிகமான விவரம்.'

ஜோனதான் பீட்டர் ரக் பற்றி விசாரித்துக் கொண்டே இருக்கிருன். வேறு சில இடங்களில் ரக் தென்படுகிருன். முரட்டுக் குதிரை அவனை நியூயார்க் நகர் வீதிகளில் கூட இழுத்துச் செல்கிறது. 'நான் பீட்டர் ரக்கையும் அவன் மகளையும் பார்த்தேன்' என்று சொன்ன ஜோனதானிடம், 'இருக்கலாம். அவன் பெரிய தாத்தாவாகியிருக்க வேண்டுமே. அவன் மகள் கூடக் கிழவியாகியிருப்பாள்' என்று பாஸ்டன் வாசிகள் கூறுகிருர்கள். ஆனல் வழியில் தென்படும் பீட்டர் ரக் கிழவனல்ல. அவன் மகளோ சிறுமியாகத்தான் காட்சி அளிக்கிருள்.

பாஸ்டனில் உள்ள ரக்கின் வீடும் பெரிய நிலமும் ஏலத்துக்கு வருகின்றன. அரசாங்கம் அதைச் செய் கிறது. 'முன்பு எப்பொழுதோ இங்கு வாழ்ந்த பீட்டர் ரக் இவ்வூரை விட்டுப்போய் ஐம்பது வருஷங்கள் ஆகின்றன. அவனைப்பற்றிய தகவல் எதுவுமே கிட்ட வில்லை. அவனுக்கு உற்றார் உறவினர் எவருமில்லை. அவன் உயிரோடு இருப்பதாகச் சொல்வதை நாம் எப்படி நம்புவது? அவன் உயிரோடு இருந்தால் அவனுக்கு இப்ப நூறு வயசு ஆகவேண்டும்......' என் றெல்லாம் சொல்லி, ஏலம் கூறப்படுகிறது.

ஏலம் முடிவடையும் தருணம், பேரோசை இடி யென எழுகிறது. நெருங்கி வருகிறது. திடுமென வந்து சேருகிறது. கறுப்புக் குதிரை பூட்டிய பழங்கால வண்டி. அதில் குழந்தையோடு காணப்படுகிறன் பீட்டர் ரக். தனது வீடு இடிந்து சிதைந்து கிடப்ப தையும், அதைச் சுற்றிலும் மனிதர்கள் கும்பலாக நிற்ப தையும் கண்டு திகைக்கிறன் அவன். எல்லோரும் அவனை வேடிக்கை பார்க்கிறார்கள்.

அவனுக்குப் பழக்கமான மனிதர்கள் அங்கில்லை. அவர்கள் சாயலை உடைய புதிய தலைமுறையினரை அவன் காண்கிறன். அதிசயிக்கிறன்.

'இதில் அதிசயம் ஒன்றுமில்லை. உண்மையில் நீர்தான் பெரிய அதிசயம், மிஸ்டர் ரக்! அழிப்பன அழித்து, புதியன புகுத்தும் காலம்தான் உமது வீட்டை அழித்தது; எங்களை இங்கே சேர்த்தது. பல வருட காலம் நீர் ஒரு மாயையில் சிக்கி அவதியுற்றீர். அன்றெரு நாள் நீர் துணிவோடு இழித்து வசை கூறினீரே அந்தப் புயல் இன்றுதான் ஓய்ந்திருக்கிறது. ஆனாலும் என்ன? உமது வீட்டை நீர் ஒருபோதும் காணமாட்டீர். உம் வீடும், உமது மனைவியும், உமக்குத் தெரிந்த அண்டை அயலினரும், மக்கி

மறைந்து போனார்கள். உமது சொத்து இருக்கிறது. ஆனால், சுகம் தரும் வீடு இல்லை. கடந்த காலத்திலிருந்து அகற்றப்பட்ட நீர் நிகழ்காலத்தோடு பொருந்தப் போவதில்லை. உமது வீடு போய்விட்டது. இந்த உலகத்திலே இனி மற்றொரு வீடு நீர் பெறப் போவதுமில்லை' என்று யாரோ சொன்ன பேச்சு மேலெழுந்தது.

அருமையான முறையில் பின்னப்பட்டுள்ள கதை இவ்விதம் அழகாக முடிகிறது. வில்லியம் ஆஸ்டின் என்பவரின் கதைகூறும் நயத்தைப் படித்துத்தான் புரிந்து கொள்ள வேண்டும்.

வாஷிங்டன் இர்விங் என்பவர் அமெரிக்காவின் பெயர் பெற்ற கதாசியர்களில் ஒருவர். அவர் எழுதிய 'ஆவி மாப்பிள்ளை' கதைச் சுவை உடையது.

சிறு கதைக்கு உருவம் அமைத்துக் கொடுத்தவர் என்றும், இலக்கியநயம் மிகுந்த கதைகளைப் படைத்தவர் என்றும், மர்மக் கதைகள் எழுதுவதற்கே மூல காரணமானவர் என்றும் புகழப் படுகிறவர் எட்கார் அலன் போ. அவச் எழுதிய சிறந்த சிறு கதைகளில் 'அஷர் வீட்டின் வீழ்ச்சி' என்பது மிகுந்த கவனிப்பைப் பெற்றது. பல தொகுதிகளில் இடம் பெற்ற பெருமையும் அதற்கு உண்டு. மர்மம், பயங்கரம், கதைச் சுவை, நடை நயம், சொல்வளம் முதலியன நிறைந்த அருமையான கதை இது.

நதானியல் ஹாத்தார்ன் எழுதிய 'ரப்பாஸினியின் மகள்' விஞ்ஞான உண்மையை அடிப்படையாகக் கொண்டது. அறிவுப் பசியும் ஆராய்ச்சி வெறியும் பெற்ற ஒரு பேராசிரியரின் கன்னெஞ்சப் போக்கையும், விஷ கன்னிகையாக வளர்க்கப்பட்டு விட்ட மகளின் மென்மையான இதயப் பண்பையும், அவளைக் காதலித்த வாலிபனின் உணர்ச்சிக் குமுறலையும், ஆராய்ச்சியாளரை முறியடிக்கத் திட்டமிட்டு வெற்றி பெற்றுவிட்ட

அறிஞர் ஒருவரின் தன்மையையும் இனிய முறையில் சொல்கிறது இக்கதை.

கண்ணுக்குப் புலனுகாத ஒன்றைக் கட்டிப்பிடித்து, அதனோடு சண்டை பிடித்து, அதைச் சிறைப் படுத்தி பட்டினி போட்டு சாகடித்த சாகசம் பற்றியது 'அது என்ன?'—பிட்ஸ் ஜேம்ஸ் ஓபிரியன் எழுதிய ரசமான கதை.

ராபர்ட் லூயி ஸ்டீவன்சன், பிராங்க் ஸ்டாக்டன், ஆம்ப்ரூஸ் பீயர்ஸ் ஆகியோர் கதைகளும் உள்ளன. மார்க் ட்வெய்ன் (சாமுவேல் லாங்ஹார்ன் கிளமன்ஸ்) எழுதியுள்ள 'துப்பறியும் கதை' தனிச் சிறப்புடையது; மிகவும் ரசமானது.

'ஸெவன் ஸீஸ்' புத்தகமான இது அருமையான சிறு கதைகள் கொண்ட நல்ல புத்தகம் என்பதை இலக்கிய ரசிகர்கள் எளிதில் உணர்வர். 'கதைத் தொகுதி' வெளியிடுகிறேம் என்று பெயர் பண்ணி உப்புச் சப்பற்ற கதைகளைத் தேடிப்பிடித்து நல்ல காகிதத்தையும், வாசகர்களின் காலத்தையும், பாழ்படுத்துகிற தமிழ்நாட்டுத் 'தொகுப்பாசிரியர்'களும், பதிப்பகத்தாரும் அயல் நாட்டினர் வெளியிடும் சிறுகதைத் தொகுதிகளை என்றைக்காவது புரட்டிப் பார்த்தால் நல்லது. தமிழ்நாட்டில் இருந்து கொண்டு தமிழுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் நல்லன செய்யும் விசால மனேபாவம் பெற்றிராத இப் பெருமக்கள் ஜெர்மனியில் உள்ள ஸ்தாபனம் ஒன்று ஆங்கில இலக்கியத்துக்குச் செய்து வருகிற நற்பணியை எண்ணிப் பார்க்கவாவது இந்தப் புத்தகம் உதவக் கூடும்!

# அறியும் ஆவல்

ஒரு கதை —

இரண்டு சிறுவர்கள் ஒரு இடத்திற்குப் போய்விட்டுத் திரும்பி வந்தார்கள். அவர்களிடம் 'விசேஷம் ஏதாவது உண்டோ?' என்று பெரியவர் ஒருவர் கேட்டார்.

'ஒன்றுமில்லை' என்று ஒருவன் சொன்னான். மற்றொரு சிறுவன் உற்சாகத்தோடு கூறினான்:

'வழியில் பல அதிசயங்களை நான் பார்த்தேன். ஒரு மரத்தில் முன்பு இலைகளே நிறைந்திருந்தன. இப்போது ஒரு இலைகூட அதில் இல்லை. சில செடிகளில் புதிது புதிதாகப் பூக்கள் பூத்து ஜோராக இருந்தன. வண்டி ஒன்று மெதுவாகப் போயிற்று. மாட்டின் கழுத்தில் புண் ஏற்பட்டிருந்தது. அப்படியிருந்தும் வண்டிக்காரன் மாட்டை வண்டியில் பூட்டி அதை ஈவு இரக்கம் இல்லாமல் அடிக்கிறானே என்று எனக்கு வருத்தம் உண்டாயிற்று...'

இவ்வாறு அந்தப் பையன் விவரித்துக் கொண்டே போனான். பெரியவர் அவனைப் பாராட்டினார். பல விஷயங்களையும் கூர்ந்து கவனிக்கும் பண்பு ஒவ்வொருவருக்கும் தேவை; அது 'அவதானிக்கை' எனப்படும் என்றும் அவர் சொன்னார்.

இதை 'அறியும் அவா' என்றும் சொல்லலாம்.

'வழியே போய் வழியோடு திரும்புவதை விட்டு விட்டு, பராக்குப் பார்த்துக் கொண்டு போன பையனைப்

பாராட்டியது தப்பு' என்று சில பெரியவர்கள் சொல்லக் கூடும்.

என்ன நடக்கிறது என்று அறிய வேண்டும் என்ற ஆசையோடு அங்குமிங்கும் பார்க்கிற பையன்களின் காதைப் பிடித்துத் திருகும் உபாத்தியாயர் ஒருவர் இருந்தார். காதைக் கவனிப்பதோடு அவர் விட்டுவிடுவாரா என்ன? 'கையை முறிக்க வேண்டும்' என்ற ஆசையோடு அவர் 'இம்போசிஷன்' வேறு எழுதச் சொல்லுவார். 'அறிய வேண்டும் என்கிற ஆசை பூனையைச் சாகடிக்கிறது' ('க்யுரியாஸிடி கில்ஸ் தி கேட்') என்று முன்னூறு – நானூறு தடவைகள் எழுதிக் கொண்டு வரும்படிச் செய்வார்.

இத்தகைய பெரியவர்களைப் பற்றித்தான், 'தாத்தாவும் பேரனும்' எனும் புத்தகத்தில் வரும் அனுபவஞானியான ஒரு தாத்தா குறிப்பிடுகிறார்—

'பெரும்பாலானவர்கள் நோக்குகிறார்கள்; ஆனால் ஒருபோதும் எதையும் பார்ப்பதில்லை. பெரும்பாலார் கண்கள் திறந்திருந்தும் குருடராய் வாழ்க்கையைக் கழிக்கிறார்கள். சிஞ்ச் பூச்சி முதல் இப்பி வரை எதுவும்—நீ அதை உண்மையாகவே கவனித்து, அது பற்றிச் சிந்தித்தால்—சுவாரஸ்யமானது தான்...ஆராயும் ஆவல் அறிவுக்கு அவசியமானது. அறிந்து கொள்ளும் ஆவல் ஒருபோதும் பூனையைக் கொன்றதில்லை. மந்த புத்தியால் பூனை செத்திருக்கும். அல்லது, எலிகளை அதிகம் தின்றதால் இருக்கலாம்.'

ஒவ்வொரு பொருளையும் நன்கு கவனித்து, அது பற்றி எண்ணினால், ஒவ்வொன்றும் ஒரு அற்புதம் என்பது விளங்கும்.

'வண்டி அற்புதப் பொருளாம்—வண்டி மாடு அற்புதப் பொருளாம்—வண்டி பூட்டும் கயிறு, அதுவும் அற்

புதப் பொருளாம்' என்று கவி தேசிகவிநாயகம் பிள்ளை பாடியிருக்கிறார்.

கவிகளுக்கு மட்டும் தான் எல்லாம் அற்புதப் பொருள்களாகத் தோன்றும் என்பதில்லை. ஒவ்வொன்றிலும் அற்புதத்தைக் காணும் பசுமை மனோபாவம் சிறு பிள்ளைகளுக்கு இருக்கிறது. அதனால்தான் குழந்தைகள் 'ஏன்? ஏன்?' என்று கேள்வி கேட்டுக்கொண்டே இருக்கின்றன.

குழந்தைகளின் கேள்விகளுக்குத் தகுந்த பதில்களை — அவர்களுக்குத் திருப்தி தரும் விதத்தில் — சொல்ல முடியாதபோது, அல்லது சொல்வதற்குப் பொறுமை இல்லாதபொழுது, பெரியவர்கள் எரிந்து விழுகிறார்கள்; ஏசுகிறார்கள். 'என்ன இது சும்மா தொணதொணத்துக்கொண்டு!' என்று கோபித்து, முதுகில் இரண்டு 'பூசைக் காப்பு'ம் கொடுக்கிறார்கள். இதனால் நாளடைவில் குழந்தைகளின் உள்ளம் வறண்டு போகிறது.

பெரியவர்கள் பதில் சொன்னால் சொல்லட்டும், சொல்லாது போனால் போகட்டும் என்ற தன்மையில், 'ஏன் இது இப்படி இருக்கிறது? ஏன் அது இவ்வாறு தோன்றுகிறது? ஏன் இது வேறு விதமாக இல்லை?' என்று ஓயாது கேள்விகளை எழுப்பி, தாங்களாகவே விடை காண முயலும் சிறுவர் சிறுமியரும் இருக்கிறார்கள். அவர்கள் உள்ளம் சதா உணர்வுத் துடிப்போடு திகழ்கிறது.

'இது இப்படித்தான் இருக்கும். எல்லாம் அதனதன் இயற்கை' என்று பெரும்பாலாரைப் போல, அறிவுக் குறுகுறுப்பு பெற்றவர்களும் எண்ணி, தங்கள் காரியங்களைச் செய்துகொண்டு போயிருந்தால், அறிவு வளர்ச்சி ஏற்பட்டிராது. 'ஏன் இப்படி? இது ஏன் இப்

படி இல்லை ?' என்ற கேள்விகளே ஆராய்ச்சிக்கு அஸ்திவாரமாகும்.

ஜேம்ஸ் வாட் என்ற சிறுவன் அடுப்பு மீதிருந்த கெட்டிலில் கொதிக்கும் நீரையும், நீராவியின் சக்தியையும் வேடிக்கையாகப் பார்த்தான். அற்புதமாகத் தோன்றிய அது 'ஏன் இப்படி நடக்கிறது?' என்று சிந்திக்கும்படி அவனைத் தூண்டியது...அதை ஒட்டிய வரலாறுதான் உங்களுக்குத் தெரியுமே!

நியூட்டன் பற்றி நீங்கள் அறிவீர்கள். மரத்தடியில் அமர்ந்திருந்தார் அவர். மேலே இருந்து ஒரு பழம் விழுந்தது அதை எடுத்து அவர் தின்று விட்டோ, அல்லது 'இப்படி விழுவது தான் பழத்தின் இயல்பு' என்று எண்ணியோ சோம்பி இருந்திருப்பின் அவரைப் பற்றி நீங்களும் நானும் அறிந்துகொண்டிருக்கவே முடியாது. 'ஏன் இந்தப் பழம் கீழே விழ வேண்டும்? மரத்திலிருந்து பிரியும் பழம் ஏன் மேல் நோக்கிப் போகக் கூடாது? மேலே வீசி எறியப் படுகிற பொருள் தரைக்கே திரும்புவது ஏன்?' என்றெல்லாம் சிந்தனைக்கு வேலை கொடுத்தார். அறிவுலகம் லாபம் அடைந்தது.

இந்த விதமாக எத்தனையோ பேர் 'ஏன்? ஏன்?' என்று கேட்டு, விளக்கம் காண முயன்று போராடியதனால்தான், துறைதோறும் புதுப் புது அற்புதங்கள் பிறந்துள்ளன. புற உலக இருட்டும், மனித அறிவில் படிந்த இருளும் அகன்று, ஒளி பரவ வாய்ப்புக்கள் கிட்டியிருக்கின்றன.

'வானத்துச் சந்திரனுக்கு வடமுனை உயர்ந்திருந்தால் என்ன! தென்கோடி தாழ்ந்து கிடந்தால் நமக்கு என்ன!' என்று பேசிவிட்டு, திண்ணையில் படுத்துத் தூங்குவதில் ஆர்வம் காட்டிய பெரியவர்கள் அறிவு வளர வகை செய்யவில்லை. ஏன், எப்படி, எதனால்,

என்ன?—என்று தாங்களாகவே கேள்விகளைக் கேட்டு கொண்டு விடை காண முயன்றவர்களால்தான், விண்ணுலக மர்மங்கள் எல்லாம் தெள்ளத் தெளிந்த பாடங்களாக நமக்குக் கிடைத்துள்ளன. இவ்வித அற்புத ஆற்றல் பெற்ற மனிதர் பலரின் சாதனைகளின் புதிய வளர்ச்சியாக அமைந்திருக்கிறது ருஷிய ராக்கெட் சந்திரனை எட்டிவிட்ட அற்புதம்.

இந்தத் தலைமுறையிலே வாழும் நாம் 'பாக்கிய சாலிகள்' என்றே சொல்ல வேண்டும். நமக்காக 'ஒளி' எப்போதும் காத்திருக்கிறது. நாம் 'கண்டுபிடிக்க'க் கஷ்டப்பட்டு அலைய வேண்டியதில்லை. ஆராய்ச்சியின் விளைவுகளும், அறிவு நூல்களும் எளிதில் கிடைக்கின்றன.

ஒரு ஸ்விட்சைத் தட்டினால் போதும். எலெக்ட்ரிக் பல்புகள் உள்ள இடமெங்கும் ஒளி சிரிக்கிறது. ஒரு குமிழைத் திருகினால் ரேடியோ இன்னிசை வழங்குகிறது. நினைத்தவுடன் காரிலும், ரயிலிலும் — வசதி இருந்தால் ஏரோப்ளேனிலும்-ஏறி, எளிதில் தூரத்தை வென்றுவிட முடிகிறது. ஆகவே, 'இவை எல்லாம் இயல்பானவை. ரொம்ப காலமாக இப்படியே இருப்பவை' என்று எவ்வளவோ பேர் நம்பியிருக்கிறார்கள். இவை இல்லாத காலமும் இருந்தது; இவை எல்லாம் ஒரே நாளில் தோன்றிவிடவில்லை; அறிவுப் பசியும், ஆராயும் வேகமும், சிந்திக்கும் ஆற்றலும், செயல்திறமும் பெற்றிருந்த பலப்பலரின் ஓயாத உழைப்பின் விளைவுகளே இவை.

இவற்றைப் பற்றி எல்லாம் படிக்கிறவர்கள் 'பரீட்சையில் பாஸ் மார்க் வாங்குவதற்காக மட்டும்' படிப்பதோடு திருப்தி அடைந்துவிடக் கூடாது.

சௌகரியங்களை உண்டாக்கித் தந்திருக்கிற காலம் சோம்பலை வளர்க்கவும் துணை செய்துவிட்டது.

இப்போதெல்லாம் அறிவு வளர்ச்சிக்காக அனைத்தையும் படித்தாக வேண்டும் என்ற துடிப்பு அதிகமாக இல்லை. 'பரீட்சைக்குப் படிக்கிறவர்கள்' பாடங்கள் முழுவதையும் படிக்க வேண்டும் என்கிற அவசியமும் இல்லை. 'நோட்ஸ்' என்று கிடைக்கிற சுலப வழிகளைப் பின்பற்றுவதில்தான் ஆர்வம் மிகுந்திருக்கிறது. அவற்றிலேகூட, முக்கியம்—மிக முக்கியம் என்று சிலர் சொல்லும் பகுதிகளை மாத்திரம் படித்தால் போதும் என்ற மனோபாவமும் மாணவர்களிடையே வளர்ந்துவிட்டது.

பரீட்சைகளில் பெறுகிற 'மதிப்பு எண்கள்' முக்கியமானவைதான். ஆயினும், அவற்றைவிட அதிகமான மதிப்பு உடையது அறிவு அபிவிருத்தி.

'அறிவை விரிவு செய்; அகண்டமாக்கு. விசாலப் பார்வையால் விழுங்கு உலகத்தை' என்று ஒரு கவிஞர் கூறுகிறார். இதுவே ஒவ்வொரு மாணவனின் குறிக்கோளாக அமையுமானால், எவ்வளவு சிறப்பாக இருக்கும்! மனித வாழ்வு எத்துணை மாண்புடையதாகும்!

'எண்ணிய முடிதல் வேண்டும்,
நல்லவே எண்ண வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்;
தெளிந்த நல்லறிவு வேண்டும்.'

— பாரதியார்.

# ஆகாசக் கோட்டை

ஒவ்வொரு மனிதனும் தன்னைப்பற்றிப் பிரமாத மாக எண்ணிக் கொள்கிறான். 'தான் பெரிய ஆளு' என்று மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்றும் ஆசைப் படுகிறான்.

இரண்டுபேர் இருந்தாலும் சரி; ஒருவன் அடுத் தவன் பாராட்டையும் வியப்பையும் பெறவேண்டும் என்பதற்காகப் பெரும் பேச்சுப் பேசுவதில் உற்சாகம் காட்டுகிறான். புகழ் ஆசை என்பது யாரையும் எதுவும் செய்யத் தூண்டும்.

பிறரது பாராட்டுதலையும் வியப்புரையையும் பெற வேண்டும் என்ற ஆசையோடுதான் அநேகர் அளப்பு களில் ஈடுபடுகிறார்கள். தாம் செய்யாததை எல்லாம் செய்து முடித்து விட்டதாக அளப்பார்கள். கோபுரத்தி லிருந்து குட்டிக்கரணம் போட்டேன்; ஆகாயத்தில் பறந்தேன் என்று அளந்து தள்ளுவார்கள்.

அந்தக் காலத்து நாடக மேடைக் கள்ள பார்ட் காரன் பாடிக்கொண்டு குதிப்பானே-உங்களுக்குத் தெரியுமல்லவா? 'கோட்டைக் கொத்தளம் மீதிலேறிக் கூசாமல் குதிப்பேன்; பலபா, கூசாமல் குதிப்பேன்! ஒரு நீச்சல் கப்பலைப் பிடிப்பேன் பலபா! கல்கத்தா துறைமுகம் பார்ப்பேன்' என்று. அந்த ரீதியில் பெருமை அடிக்க வேண்டும் எனும் துடிப்பு ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறைகிறது.

ஒவ்வொரு மனிதனுள்ளும் இரண்டு பண்புகள் குடியிருக்கின்றன; நல்ல பண்பும், தீய சுபாவமும்.

ஒன்று தெய்வப் பண்பு. மற்றது அசுர குணம். இப்படி பொதுவாகச் சொல்லப்படுவது உண்டு. உண்மையில், ஒவ்வொருவர் உள்ளும் இரண்டு பண்புகள் அல்ல, பலப்பல சுபாவங்கள் பதுங்கிக் கிடக்கின்றன என்றே சொல்லவேண்டும். 'ஆளுக்குள்ளே ஆளு, எத்தனையோ ஆளு!' என்பது சரியான கூற்று. ஒவ்வொருவனையும்—ஒவ்வொருத்தியையும்—ஒவ்வொரு குழந்தையையும் கூட, நன்கு கவனித்து வந்தால்; வெவ்வேறு சமயங் களில் வெவ்வேறு சூழ்நிலைகளில் யார் யார் எப்படி எப்படி நடந்து கொள்கிருர்கள் என்று கூர்ந்து நோக் கிஞல், இதன் உண்மை நன்கு புலனுகும்.

புகழ்பெற வேண்டும்—பிறரது பாராட்டுதலைப் பெற வேணும்-எனும் ஆசை பெரிய பெரிய காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது. அவ்வாறு செயல் புரிவதற்குப் போதுமான திராணியும் துணிச்சலும் இல்லாமல் போனால்-தேவையான வாய்ப்புகளும் வசதிகளும் கிட்டாமல் போகுமானால்-அந்த ஆசை மனிதரை வெறும் அளப்புகளில் மூழ்கிக் களிப்புறும்படி செய்கிறது. தனது பேச்சைக் கேட்கவோ-சொல்வதைக் கேட்டு நம்புவதற்கோ—ஆள் இல்லாமல் போகுமானல், தன்னிலே தானே ஆழ்ந்து, கனவுகளை வளர்க்கும்படி தட்டிக் கொடுக்கிறது மனித மனம்.

தூக்கத்தில் மட்டும்தான் மனிதன் கனவுகளை வளர்க்கிருன் என்றில்லை. விழிப்பு நிலையிலும் ஆசை யோடு கனவுகளை வளர்க்கிருன். பகற்கனவு,-'ஆகாசக் கோட்டை' என்றெல்லாம் சொல்லவில்லையா? அதே தான்.

கையாலாகாத்தனமும், நிகழ்கால வறட்சியும், எதிர்காலம் நன்ருக அமைய வேண்டும் என்ற ஆசையும் 'ஆகாசக் கோட்டை' கட்டத் தூண்டு கின்றன.

அல்நாஷர் என்கிற கண்ணுடி வியாபாரியின் கதையும், பால்காரி ஒருத்தியின் கதையும் உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும்.

அல்நாஷர் என்பவன் ஒரு சோம்பேறி. சின்ன வயசில் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போனதில்லே; பாடம் படித்ததில்லே. பிறகு வேலே செய்து உருப்படக் கற்றுக் கொள்ளவுமில்லே. தனது நிகழ்கால வறுமைக்கு தன்னுடைய அப்பன்தான் காரணம் என்று குறை கூறலானுன். 'துள்ளித் திரிகின்ற காலத்தே எந்தன் துடுக்கடக்கி, என்னேப் பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே!' என்று ஏசிக்கொண்டிருந்தான். பிழைப்பு நடத்த வேண்டுமே? யாரோ சொன்னுர்கள் என்று, கண்ணுடிப் பாத்திரங்களே வாங்கி, ஒரு கூடையில் வைத்துக் கொண்டு, தெருத்தெருவாகச் சுற்றி வியாபாரம் செய்ய முன் வந்தான் அவன்.

பல தெருக்களேச் சுற்றிய பிறகு, சோம்பேறித்தனம் குரல் கொடுத்தது. ஒரு வீட்டின் திண்ணேயில் உட்கார்ந்தான். அவன் மனம் வேலே செய்தது. அவன் காலடியிலிருந்த கூடையைப் பார்த்தபடியே, மனக்கோட்டை கட்டினுன். இவ்வளவையும் விற்றுவிட்டால் எவ்வளவு லாபம் கிடைக்கும்; மீண்டும் பாத்திரங்கள் வாங்கி அதிக லாபத்துக்கு விற்ருல் எப்படிப் பணம் சேரும் என்றெல்லாம் கணக்குப் பண்ணினுன். நிறைய பணம் சேர்ந்ததும் அல்நாஷர் பெரிய மாளிகை கட்டிக் கொள்கிருன். சுகபோக வாழ்வைத் தொடங்குகிருன். அவனது செல்வத்தையும் பெருமையையும் பற்றி அறிய நேர்ந்த அரசன் தன் மகளே அவனுக்கு மணம் முடித்து வைக்கிருன். இளவரசியோடு இன்ப வாழ்வு நடத்துகிருன் அவன். ஒரு நாள் ஊடல் எழுகிறது. அவளோடு கோபித்துக் கொள்கிருன். அவள் அவன் காலடியில் விழுந்துகெஞ்சுகிருள். 'ராசா மகளாக இருந்தால் நமக்கென்ன! போடி கழுதை என்று எட்டி உதைப்பேன்'

என்று எண்ணியவாறே அல்நாஷர் காலால் கூடையை பலமாகஉதைத்தான். கூடை உருண்டு, கண்ணாடிப் பாத்திரங்கள் உடைந்து சிதறின. 'உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணு!' என்றாகி விட்டது.

பால்காரி கதையும் இதேதான். தலைமீது பால் பானையைச் சுமந்து சென்றாள் ஒருத்தி. போகிற போதே, கனவு வளர்த்தாள். இந்தப் பானை பால் பூரா வும் விற்றால் இவ்வளவு லாபம் கிடைக்கும் என்று ஆரம் பித்து, இனிய கோட்டைகள் கட்டினாள். முடிவில், தலைமீதிருந்த பானை கீழே விழுந்து பால் முழுவதும் கொட்டிப் போகிறது.

கையில் இருக்கிற கொழுக்கட்டையைச் சுவைத்து மகிழத் தெரியாமல், தடபுடல் கபேயில் கண்ணாடி அலமாரியில் இருக்கிற குஞ்சாலாடு, பாதாம் அல்வாக் களை எண்ணி ஏங்கியவாறே, கிடைத்த கொழுக்கட்டை யையும் இழந்து விடுகிறவர்கள் இல்லாமலில்லை. நிகழ் கால வறட்சி மனித மனசை எப்படி எப்படி எல்லாமோ பாதிக்கிறது.

காய்ந்த ரொட்டியாகவே இருந்தாலும், அதுதான் மிகச் சுவையான, விலை உயர்ந்த தின்பண்டம் என எண்ணிக்கொண்டு ரசித்துத் தின்னும் புத்திசாலிகளும் உண்டு.

பால்ஸாக் என்கிற பெயர்பெற்ற நாவலாசிரியன் ஆரம்ப காலத்தில் மிகவும் கஷ்டப்பட்டான். நல்ல சாப்பாடு சாப்பிட வேண்டும் என்ற ஆசை அவனுக்கு இருந்தது. ஆனால் வாங்கித் தின்பதற்குக் கையிலே காசு இராது. அவன் ஓட்டலில் மேஜை முன் அமர்ந்து, அங்கு என்னென்ன தின்பண்டங்கள் அன்று தயாராக இருக்கின்றன என்கிற பட்டியலைக் கவனமாகப் படிப் பான். தான் அன்று எதைச் சாப்பிட்டால் நன்றாக

இருக்கும் என்று ஆசைப்பட்டுக் கொள்வான். எனினும், வெறும் ரொட்டியும் தண்ணீருமே வரவழைப்பான். அந்த ரொட்டியையே, மிக விலை உயர்ந்த தீனியாகக் கற்பனை செய்து கொண்டு, சிறிது சிறிதாகச் சுவைத்து மகிழ்வான். உண்மையிலேயே, அவனுக்குக் கற்பனை அதிகம் தான்! அழகு மிக்க மங்கையரையும், பாரீஸ் மாநகரின் ஆடம்பரவல்லிகளையும் கூடி மகிழ வேண்டும் என்று ஏங்கினன் அவன். ஆரம்ப நாட்களில் அதற்குத் தேவையான பொருளும் புகழும் வாய்ப்பும் வசதிகளும் அவனுக்குக் கிட்டியதில்லை. இரவு நேர நடைபாதை நங்கையரைக் கூடும் வசதி தான் இருந்தது. அப்படி அழகற்ற, குரூபியான, கோரங்களைக் கூடிச் சுகிக்கின்ற காலத்திலும் அவன் செல்வச் சரசாங்கிகளையும், ஆடம்பர அழகு சுந்தரிகளையும், மேனிமினுக்கி மோகனங்கிகளையும் கொஞ்சிக் குலாவுவதாகவே எண்ணுவது வழக்கமாம்.

இவ்வாறு நிகழ்கால வாழ்வின் வறட்சியை மறக்கக் கற்பனை எனும் போதையின் துணையை நாடுகிறவர்கள் நிறையவே காணப்படுவர். மனித சமுதாயத்திலே எதிர் காலப் பசுமையையும், புகழ் ஒளியையும் எண்ணி ஏங்கிக்கொண்டு, நிகழ்காலத்தில் விந்தை செயல்களையும் விசித்திரப் போக்குகளையும் அனுஷ்டிக்கிற அப்பாவிகள் நல்ல வேடிக்கை மனிதராகத் திகழ்வர். இத் தகைய மனிதர்களை சில ஆசிரியர்கள் வெற்றிகரமான கதாபாத்திரங்களாக இலக்கியத்தில் உலாவ விட்டிருக்கிருர்கள்.

பல சிறந்த நாடகங்களைப் படைத்துள்ள இப்ஸன் எனும் ஆசிரியர் 'பீயர் ஜைன்ட்' என்றெரு நாடகமும் எழுதியிருக்கிருர்.

பீயர் எனும் வாலிபன் மகா சோம்பேறி. குடிகாரனுக வாழ்ந்து சொத்து முழுவதையும் அழித்து விட்ட

ஒருவனின் மகன். இவனும் அதிகமாகவே குடிப்பது உண்டு. மனக்கோளாறு வேறு. தனது அம்மா சொன்ன கதைகள், தான் படித்த-கேட்ட-கதைகள் முதலியவைகளில் உள்ள சம்பவங்களை எல்லாம் தானே அனுபவித்து ரசித்ததாக அளப்பான். இரண்டு மூன்று நாட்கள் காணுமல் போய்விடுவான். திரும்பி வந்ததும் கயிறு திரிப்பான்.

'நான் மலைப் பக்கம் போயிருந்தேன். நெடுங் கொம்புகளை உடைய கலைமான் தென்பட்டது. அதைத் துரத்தினேன். அது வேகமாக ஓடியது. ஒரு இடத்தில் வசமாகச் சிக்கிக் கொண்டது. அதன் முதுகு மேலே ஏறி உட்கார்ந்தேன். உடனே அது ஓடத் தொடங் கியது. மலைமுடிக்கு மலைமுடி தாவியது. ஒரு பெரிய பள்ளம் தென்பட்டது. அதைத் தாவும் பொழுது மான் பள்ளத்தில் விழுந்துவிட்டது. நானும் விழுந்தேன். மண்டையில் அடிபட்டு மயங்கிக் கிடந்தேன். இன்று தான் எனக்கு உணர்வு வந்தது. எழுந்து வருகிறேன்' என்று அவன் சொல்லுவான். அவனைப் பொறுத்த வரையில் எல்லாம் உண்மையில் நிகழ்ந்ததாகவே அவனுக்கு ஒரு மயக்கம்.

உள்ளூர்த் தடியனிடம் இவன் செம்மையாக 'உதை தின்று இருப்பான்!' ஆனுல், 'அந்தத் தடியனை நான் வெளுத்து வாங்கிவிட்டேன். அவன் கை இனி மேல் தம்பிடிக்குப் பிரயோஜனப்படாது. பயலைச் சட்னி பண்ணி யிருப்பேன். பாவம், போருன் போ என்று விட்டுவிட்டேன்' என்று பலரிடமும் கூறுவான்.

வன கன்னியரோடு கூடிக் கும்மாளியிடுவான்; அப்படி அவன் நம்பிக் கொள்வான்! குகை ஜீவிகளின் மன்னர் மகளை மணம் புரிகிருன். பாலைவனத்தில் போகிற போது, கொள்ளைக் கூட்டத்தார் பதுக்கி வைத் திருந்த பொன்னையும் பொருளையும் சுலபமாக அடை

கிறான். நல்ல குதிரை வேண்டும் என்று நினைக்க வேண்டியதுதான். உடனே அவனுக்குக் குதிரை கிடைத்து விடும்!—அனைத்தும் மனக் குறளியின் மயக்கு வித்தைகள் தான்.

இந்த வேடிக்கை மனிதனின் விந்தை நினைப்புகளையும் விசித்திர அனுபவங்களையும், பயனிலாப் பண்பையும், வீணத்தனத்தையும், முடிவில் அவன் பெற்ற ஞானோதயத்தையும் சுவையாக விளக்குகிறது நாடகம்.

எச். ஜீ. வெல்ஸ் என்கிற ஆங்கில நாவலாசிரியன் 'பல்பிங்டன் ஆவ் பிளப்' என்றொரு நாவல் எழுதியிருக்கிறான். அதுவும் இந்த ரகமான—பிரமாதமாக எண்ணிக் கனவுகளை வளர்க்கும்—அப்பாவி ஒருவனைப் பற்றியதே யாகும்.

# வழங்கிவரும் கதை

இரவில் அமுத ஒளி வீசி உலகை அழகு மயமாக்கும் சந்திரன் தினந்தோறும் மாறிக்கொண்டே இருப்பது கவிஞர்கள், கலைஞர்கள், கதைஞர்கள் ரசனைக்கும் கற்பனைக்கும் வேலை கொடுத்து வருவது போலவே சாதாரண மக்களின் கற்பனைக்கும் வேலை தருகிறது. உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் மனித உள்ளம் கதை கட்டுவதில் உற்சாகம் காட்டத் தவறுவதில்லை. அம்புலி வளர்வது தேய்வது பற்றியும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமான கதைகள் இருக்கலாம். புராதனமான கதைகள் இரண்டு ஒரே தன்மை உடையனவாக இருக்கின்றன. இரண்டும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் பற்றிய கதைதான்.

ஒன்று-இந்தியாவில் உள்ள சந்தால் இன மக்களிடையே வழங்கி வரும் கதை:

ரொம்ப ரொம்ப காலமாக-பாட்டன் முப்பாட்டன்மார்கள் காலத்துக்கும் முன்பிருந்தே—எல்லோருக்கும் தெரிந்த விஷயம் இது. சூரியன்தான் கணவன். அம்புலி அவன் மனைவி. இரண்டு பேரும் சேர்ந்து ஏகப்பட்ட குழந்தைகளை உற்பத்தி செய்துவிட்டார்கள். அவர்களில் ஆண் பிள்ளைகள் எல்லோரும் அப்பாவைச் சுற்றிக் காணப்படுவார்கள். பெண் குழந்தைகள் அம்மா கூடவே இருந்தார்கள்.

அப்பாவும் பையன்களும் பகலில் ஆகாய வீதியில் உலா வருவது வழக்கம். அம்மாவும் பெண்களும் இரவு நேரத்தில் வானவெளியில் திரிவது உண்டு.

குழந்தைகள் எல்லாருமே போக்கிரிகள் தான். பூமியில் உள்ளவர்களுக்குப் பெரும் தொல்லைகளாக விளங்கினர். பூமியின் மக்கள் உஷ்ணத்தால் அவதிப் படும்படி பையன்கள் தொந்தரவு கொடுத்தனர். இரவில் குளிரால் நடுங்கும்படி பெண்கள் படுத்தினர்.

ஆகவே, ஒருநாள், பூமியில் வசிக்கும் ஜனங்கள் எல்லோரும் ஒன்றுகூடி, சூரியனையும் அம்புலியையும் நோக்கி முறையிட்டார்கள். 'உங்கள் குழந்தைகளை அடக்கி ஒடுக்குங்கள். பகலும் இராவும் எந்நேரமும் அவர்கள் எங்களுக்குத் தொல்லை தருகிறார்கள். எங்களுக்கு அமைதி என்பதே இல்லாமல் பண்ணு கிறார்கள். எங்கள் சாப்பாட்டைக் கூட நாங்கள் அமைதியோடு சாப்பிடமுடியவில்லை' என்றார்கள்.

இதைக் கேட்டதும் சூரியனும் அம்புலியும் மிகுந்த கோபம் கொண்டனர். தங்கள் குழந்தைகள் பேரில் தான்.

'இப்படி மனிதருக்குத் துன்பமும் தொல்லையும் தரு கிறார்கள் என்றால், என் குழந்தைகள் இல்லாமலே தொலையட்டும். என் மகள்களை எல்லாம் நான் விழுங்கி விடுகிறேன். உன் பையன்களை நீ விழுங்கி விடு!' என்று அம்புலி சொன்னாள்.

சூரியன் அவள் பேச்சைக் கேட்டு, ஆண்களின் சுபாவம் எப்படியோ அப்படியே—பெண்களின் வஞ்ச கத்தை நினைக்கவும் செய்யாமல்—உடனடியாகச் செயல்

புரிந்தான். தனது பையன்களை ஒருவர் பாக்கி விடாமல் தின்று தீர்த்தான்.

ஆனால், அம்புலி தன் பெண்களை விழுங்கவில்லை. எல்லோரையும் ஒரு பெரிய கூடையைப் போட்டு மூடி வைத்தாள். அவர்களை ஒழித்துக்கட்டி விட்டதாகத் தன் புருஷனிடம் சொன்னாள்.

அந்தி வந்தது. அவ்வளவுதான். வழக்கப் பிரகாரம் ஒவ்வொரு மகளாய் குதித்து வந்தாள். கூடையைத் திறந்து கொண்டு எல்லா மகள்களும் வந்து விட்டதை சூரியன் பார்த்தான். அவனுக்குப் பொல்லாத கோபம். இவள் நம்மை ஏமாற்றிவிட்டாள், பார்த்தாயா என்று. அவன் கைத்தடியை வேகமாக ஓங்கிக் கொண்டு, அம்புலியின் மண்டையில் போடுவ தற்காகப் பாய்ந்தான்.

அவள் நடுங்கி விலவிலத்துப் போனாள். அவனை சமாதானப் படுத்தும் வகையில் அவனுக்கு தன் மகள் களில் இரண்டு பேரை கொடுத்தாள். சூரியனும் திருப்தி அடைந்தான்.

சூரியன் அம்புலி இருவர் குழந்தைகளைத்தான் மனிதர்கள் நட்சத்திரங்கள் என்று குறிப்பிடுகிறார்கள். சூரியன் தன்னைக் கொன்று போடுவானே என்று பயந்து நடுங்கி, அம்புலி அவனுக்கு அளித்த இரண்டு குழந்தை களும் இன்னும் அப்பாவுக்குப் பணிவிடை செய்து கொண்டுதான் இருக்கின்றன. ஒன்று சூரிய உதயத் துக்கு முந்தியும், மற்றது சூரிய அஸ்தமன சமயத்திலும் தந்தைக்கு உதவுகின்றன.

இந்தச் சண்டை ஏற்பட்டதிலிருந்து, சூரியனும் அம்புலியும் ஒன்று சேருவது கிடையாது. அதனால்,

ஒன்று வானத்தில் தலைகாட்ட வேண்டியதுதான், மற்றது உள்ளே போய் மறைந்து கொள்ளும். அம்புலியின் துரோகம் நினைவில் எழுந்துவிட்டால் போதும்; சூரியன் தடியைத் தூக்கிக் கொண்டு அதைத் துரத்துவான். அதனால்தான் சில தினங்களுக்கு ஒருமுறை அம்புலி ஆகாயத்தில் தலைகாட்டாமல் பதுங்கிக் கொள்கிறது. பயம்தான் காரணம்.

இது இந்தியக் கதை. மற்றது ஆப்பிரிக்காவைச் சேர்ந்த நைஜீரியாவில் வசிக்கும் யோருபா இன மக்களிடம் அடிபடுகிற கதை ஆகும்–

ரொம்ப ரொம்ப காலத்துக்கு முன்பு, சூரியனும் சந்திரனும் மிகநெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். ஒருநாள் சந்திரன் சூரியனிடம் சொன்னான், 'நண்பனே, நாம் நமது பிள்ளைகளைத் தொலைத்து தலைமுழுகிவிடலாம். அதோ அந்த ஆற்றில் அவர்களைத் தள்ளி விடுவோம்' என்று.

சூரியன் இதற்கு இணங்கினான். மின்னிமினுக்கும் தன் குழந்தைகளை எல்லாம் ஒரு சாக்கில் போட்டுக் கட்டினான். ஆனால் சந்திரன் தனது பிள்ளைகளை மறைத்து வைத்தான். கோணிப்பை நிறைய கூழாங் கற்களைப் போட்டு கட்டி எடுத்து வந்தான். சூரியன் பேச்சு வார்த்தை தவறாமல், தன்னுடைய சாக்கு மூட் டையை, குழந்தைகளோடு ஆற்றில் வீசிவிட்டான். சந்திரன் கற்கள் நிறைந்த சாக்கையே தண்ணீரில் விட் டெறிந்தான்.

பொழுது விடிந்ததும், சூரியன் வழக்கம் போல் வானவீதியில், பவனி வரக்கிளம்பினான். அவனைச் சுற்றிலும் பிரகாசிக்கக் கூடிய அவனது குழந்தைகள் இல்லாமலே அவன் நடந்தான்.

பிறகு, மாலை வந்தது. சந்திரனும் வந்தான். அடாடா, அவனைச் சுற்றிலும் மின்னிமினுக்குகிற குழந்தைப் பட்டாளம் தான் எவ்வளவு பெரியது!

சூரியனுக்கு ஆத்திரமாவது ஆத்திரம்! வெகுண்டு கத்தினுன். ஆனுல் சந்திரன் அமைதியாக அவனிடம் சொன்னுன்: 'என்மீது கோபம் கொள்ள வேண்டாம். அதோ கீழே நோக்கு. ஆற்றில் உன் குழந்தைகள் மின்னி மினுமினுப்பதைப் பார்!'

உண்மைதான். சூரியனின் குழந்தைகள் எல்லாம் மின்னுகின்ற சிறுசிறு மீன்களாக மாறிவிட்டன.

கிட்டத்தட்ட ஒரே மாதிரி அமைந்துள்ள இந்த இரண்டு கதைகளும், செக்கோஸ்லோவேக்கியாவில் பிரசுரமாகும் 'நியூ ஓரியண்ட்' எனும் பத்திரிகையில் வெளிவந்தன. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் புராதன, நவீன கலாசாரங்களைப் பற்றி அக்கறை காட்டும் சஞ்சிகை அது.

# இலக்கிய மணிகள்

உலகத்திலே எந்தக்காலத்திலும் 'மூளை பிரதர்' களுக்குக் குறைவு கிடையாது. குறுக்கு வழியில் பணம் சம்பாதித்து, உல்லாசமாக வாழ்வதற்கு என்னென்ன வழிகள் உண்டு என்பதில் இவர்கள் மூளை தீவிரமாக வேலைசெய்யும். எப்படியாவது யாரையாவது ஏமாற்றி, தாம் உயர்ந்து விடவேண்டும் என்று செயல்புரிகிற 'ஐடியா மாஸ்டர்' களில் சுவாரஸ்யமான மனிதர்களும் உண்டு.

இந்த ரக ஆசாமி ஒருவன் மிகுந்த தோரணையோடு, ரஷ்யாவைச் சேர்ந்த ஒரு நகரத்தில் பிரவேசித்தான். மக்கள் விழித்தெழுந்து, போராடி, 'புதியதோர் உலகம்' செய்ய முனைந்திராத காலம் அது. ரஷ்யாவில் பஞ்சமும், கொடுமையும், சுயநலமும், சிறுமைகளும், சோம்பேறித்தனமும் சுகவாச மோகமும் மலிந்திருந்த காலம் அது. வீணர்களும் வெறும் பயல்களும் பெருத்துக்கிடந்த காலம் அது. ஊதாரித்தனமும் ஊழல்களும், வெளிப்பூச்சும் படாடோபமும் மண்டி வளர்ந்த காலம் அது. பண்ணை அடிமைமுறை அமுலில் இருந்தது. அடிமைகள் மனிதர்களாக மதிக்கப்பட்டதில்லை. அவர்களுடைய உழைப்பின் பலனை முழுவதும் ஆண்டு அனுபவித்த பண்ணையார்களும், மனிதர்கள் போல் வாழவில்லை. 'தடிப்பண்ணி' களாகத்தான் காலம் ஓட்டினர். அரசாங்க அலுவலகங்களில் லஞ்சமும் ஊழல்களும் ஆனந்தக் கூத்து ஆடிக்களித்தன.

இச்சூழ்நிலைகளைப் பயன் படுத்திக் கொண்டு சுலபமாக முன்னேறிவிடலாம் என்று நம்பினான் ஒரு

'ஐடியா மாஸ்டர்'. ஒவ்வொரு பண்ணையாரும் பலநூறு அடிமைகள் வைத்திருந்தார்கள். ஒரு ஆளுக்கு இவ்வளவு பணம் என்ற விகிதத்தில் அரசருக்கு வரியும் கட்டிவந்தார்கள். 'ஜனத்தொகைக் கணக்கெடுப்பு' எடுத்து பல ஆண்டுகள் ஓடிவிட்டன. அடுத்த கணக்கெடுப்புக்கு இன்னும் எவ்வளவோ காலம் பிடிக்கும். இடைக்காலத்தில், அடிமை ஆட்களில் எத்தனையோ பேர் செத்திருக்கலாம். அநேகர் ஓடிப்போயிருக்கலாம். கொள்ளை நோய் பலரை விழுங்கியிருந்தது. ஆயினும், அவர்கள் பெயர்கள் அரசாங்கப் பட்டியலிலிருந்து நீக்கப்படாத காரணத்தால், அவர்களும் உயிரோடிருப்பவராகக் கருதப்பட்டு, அவர்களுக்கும் வரிப்பணம் வசூலிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டான் அந்த வீணன்.

நகரத்தில் தடபுடலாக வந்து தங்கிய அந்த உல்லாசி நகர அதிகாரிகள், பிரமுகர்கள், பண்ணையார்களோடு தொடர்பு கொண்டான். அவன் தோற்றமும், உற்சாக குணமும், உல்லாசப் போக்கும் பலரையும் எளிதில் அவனது நண்பர்களாக்கின. பலரும் அவனைத் தம் வீட்டில் விருந்து உண்ண அழைத்தார்கள்.

பண்ணையார்கள் வீட்டுக்கு விருந்தாளியாகப் போனான் அவன் பேச்சோடு பேச்சாக தனது அதி முக்கிய 'பிஸினஸ்' பற்றியும் பிரஸ்தாபித்தான். 'உங்களிடமுள்ள செத்த ஆட்களை (Dead Souls) நான் விலைக்கு வாங்கிக்கொள்கிறேன். நியாயமான வியாபார முறையில்தான். பத்திரம் எழுதிப் பதிவு செய்வோம்' என்றெல்லாம் சுவையாக அளந்தான்.

ஜாலியான பண்ணையார் அவனிடமுள்ள 'இறந்த ஆட்கள்' அனைவரையும் அவனுக்கு அன்பளிப்பாகத்

தர முன் வந்தான். ஒரு பண்ணைக்காரன், கஞ்சன் போல் பேரம் பண்ணி எவ்வளவு பணம் கறக்க முடியு மோ அவ்வளவு பிடுங்கினன். சூதாடியும் குடிவெறி யனும் ஊதாரியுமான ஒருவன் அவனை மிரட்டி விரட்டு கிருன்.

இந்த விதமாக, பலரக வேடிக்கை மனிதர்கள். சித்தரிக்கப்படுகிருர்கள். வீணன் அவர்களோடு நடத்தும் வியாபாரம் பற்றி சுவையாக வர்ணிக்கப்படு கிறது. அளவுக்கு அதிகமான நிலமும் பணமும் உடை யவர்கள் எவ்வாறு நிலத்தையும் பணத்தையும், தங்கள் வாழ்வையும் தங்களை அண்டியிருப்போர் வாழ்க்கை யையும் பாழ்படுத்துகிருர்கள் என்கிற உண்மை கதைச் சுவையோடு மலர்கிறது.

எவரையும் நம்பாத மனிதர்கள், யாரிடமும் கல கலப்பாகப் பழகும் தன்மையுடையவர்கள், எரிந்து விழும் பண்பினர், புதுமை மோகத்தோடு சூழ்நிலைக்குப் பொருந்தாத முறைகளை அனுஷ்டிக்கத் தவித்து எல்லா வற்றையும் உருப்பட விடாமல் செய்கிறவர்கள், பெருந்தீனிப் பிண்டங்கள், சாப்பிடாமலே கிடந்து பணம் திரட்ட முயல்வோர்-இப்படி விந்தை மனிதர்கள் பலரையும் சந்திக்கிருன் கதாநாயகன். எதற்கு, ஏன் என்று சொல்லாமலே ஏகப்பட்ட 'செத்த ஆட்கள்' வாங்கிவிட்டான். அதிகார பீடத்தில் உள்ளவர்களின் நட்பின் பலத்தால் பத்திரங்களைப் பதிவு செய்துமாயிற்று.

ஆரம்பம் முதல் நகரம் முழுவதும் அவனை வியந்து பாராட்டிக் கொண்டிருந்தது. அவன் பேரத்தில் சிறு சந்தேகம் கொண்ட ஒரு பண்ணைப் பெருமாட்டி—நாட்டுப்புறக் கிழவி—நகரம் வந்து சேர்ந்து, அவனைப் பற்றி அவதூறு பரப்பிச்செல்கிருள். வீணனுக்கு 'வேண்டாத பப்ளிஸிட்டி' சூருவளி வேகத்தில் பரவு

கிறது. அரசாங்க அதிகாரிகள் திடுக்கிடுகிறார்கள். தலைமை அதிகாரியின் மகளை அவன் கடத்திச் செல்லத் திட்டமிட்டு விட்டான் என்ற வதந்தி வேறு! அதன் விளைவுகள் கதை வளர்ச்சிக்கு வேகமும் சுவையும் தரு கின்றன. அவன் 'செத்த நபர்களை' மட்டுமே விலைக்கு வாங்கியது ஏன் என்று புரியாமல் தவிக்கிறார்கள் எல் லோரும்.

அந்த ஆடம்பரக்காரன் நிலைமையை உணர்ந்து, சாமர்த்தியமாக அந்த ஊரைவிட்டே ஓடிவிடுகிறான். வேறு ஒரு வட்டாரத்தில் போய் தன் வியாபாரத்தை ஆரம்பிக்கிறான்.

அந்நாளைய ரஷ்யாவில் பண்ணை வைத்திருந் தவன்—பல நூறு அடிமைகளின் சொந்தக்காரன்-பெரு மதிப்பு பெற்று, இஷ்டம்போல் வாழமுடிந்தது. சமூகத் தில் அவனுக்கு அதிக கௌரவமும் கிட்டியது. அதற் காகவா அந்த வீணன், 'செத்த ஆட்கள்' பட்டாளம் சேர்த்தான்? இல்லை, இத்தனை அடிமைகள் இருக்கிறார் கள், இவ்வளவு நிலம் இருக்கிறது என்று பத்திரத் தைக் காட்டி, அரசாங்கத்திலிருந்து பெருந்தொகை கடனாகப்பெற வாய்ப்பும், வசதியும் இருந்தன. இதை அறிந்த வீணன், உயிரோடு இல்லாத அடிமைகளை மலிவு விலைக்கு வாங்கி, பத்திரங்களைக் காட்டி-இல்லாத ஒரு பண்ணைக்கு ஆதாரங்களும் காட்டி—பெரும்பணம் பெற ஆசைப்பட்டான். முன்பு பல தில்லுமுல்லுகள் செய்து, அனுபவித்து, பேராசை வளர்த்து பெரும் தகிடுதத்தங்களில் ஈடுபட்டு தண்டனையும் பெற்றவன் தான். அதனால் என்ன? கூரிய அறிவும், சுறுசுறுப்பும், வாழும் ஊக்கமும் மேற்கொண்ட காரியத்தில் முழு மூச் சுடன் ஈடுபடும் உற்சாகமும் உடையவன் அவன். இத்தகைய மூளைபிரதர்கள்-ஐடியா மாஸ்டர்களின் அறிவும் ஆற்றலும் எனோ நேரிய வழிகளில் முன்னேறு வதே இல்லை.

அவன் நிலம் வாங்குவதற்காகச் சில பண்ணையார்களைச் சந்திக்கிறான். அவர்களும் விந்தை மனிதர்கள் ரதன்! உழைக்காமலே வாழ்ந்து, சமூகத்தையும் நாட்டையும் நாசமாக்கும் வீணர்களின் போலிப் பகட்டுகளை—பொம்மை வாழ்வை—அம்பலப்படுத்துவதற்காகவே நிக்கோலே கொகோல் 'டெட் ஸோல்ஸ்' என்ற அருமையான நையாண்டி இலக்கியத்தை உருவாக்கி இருப்பார் என்று தோன்றுகிறது.

நாட்டினரின் வாழ்விலும் ஆட்சி முறையிலும் மண்டிக்கிடந்த சிறுமைகளையும் சீரழிவுகளையும், சிரிக்க வைக்கும் முறையில் சித்தரித்துக்காட்டி சிந்திக்கத் தூண்டியிருக்கிறார் கொகோல்.

ரஷ்யாவின் அன்றைய இழி நிலையை—நாட்டு மக்களின் சிறுமைப் பண்பை—கண்டு, எண்ணி மனம் குமைந்து, வேதனைப்பட்டவர் அவர். எத்தகைய மகத்தான ஆற்றல் செயலுருப்பெறாது பாழடைந்து கிடக்கிறது! மக்கள் தங்கள் சக்தியை உணராமல் இப்படி அவல வாழ்வு வாழ்கிறார்களே!—என்ற அங்கலாய்ப்பு அவர் எழுத்துக்களில் பல இடங்களில் ஒலிசெய்கிறது. 'ஆனாலும் பேராற்றல் மிக்க இப்பெரிய நாடு என்றும் இதே நிலையில் இருந்துவிடாது என்பது உறுதி. என்றேனும் ஒருநாள் அதன் சுயத்தன்மையை அதற்குச் சுட்டிக்காட்டி அதைத் தீவிரமாகச் செயல்படவைக்கும் திறமை பெற்றவன் ஒருவன் தோன்றுவான். இது உறுதி' என்றும் அவர் 'டெட் ஸோல்ஸ்' நாவலில் எழுதியிருக்கிறார்.

இது 'தீர்க்க தரிசனம்' போல் நிறைவேறிவிட்டது தான் வரலாறு ஆயிற்றே!

ரஷ்யாவின் பழங்கால இழிநிலை பற்றி மனம் குமுறி, வேதனையோடு புலம்பாத இலக்கியாசிரியன் அன்று

இருந்ததில்லை என்றே தோன்றுகிறது. ஒரு நாடு விழிப்புற்று, செயல் திறம் பெறவேண்டும் என்றால், அந்நாட்டினர் தங்கள் குறைபாடுகளையும் தவறுகளையும் சிறுமைகளையும் உணர வேண்டியது அவசியம். பழம் பெருமை பேசி, நம் முதுகில் நாமே தட்டிக் கொண்டு மகிழ்ந்து போவதனால் உண்மை நிலையை மறைத்துவிடமுடியாது என்பதை நன்கறிந்த சிந்தனையாளர்கள் சிருஷ்டித்த இலக்கிய மணிகள் உலகப்புகழ் பெற்று, கால இருளிலும் மங்கிப்போகாமல், ஒளிவீசித் திகழ்வதில் வியப்பேகிடையாது.

# இலக்கியச் சித்திரங்கள்

புகழ்பெற்றுவிடுகிற 'பெரிய எழுத்தாளர்' களைக் கண்டுபேச| வேண்டும் என்ற ஆசை பலருக்கு ஏற்படுவது உண்டு, 'அவரும் நம்மைப்போல் ஒரு மனிதர் தானே, எல்லா விஷயங்களையும்பற்றி சகஜமாக அவரிடம் பேசலாம்' என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. 'ரொம்பப் படித்தவர் மாதிரி காட்டிக் கொள்ளவேண்டும். நமது அறிவுப் பிரகாசத்தை வெளிச்சமிட வேணும். இல்லையென்ருல் அவர் நம்மை மோசமாக மதிப்பிட்டுவிடுவார்' என்ற தூண்டுதல் அவர்களை விசித்திரமாக நடந்து கொள்ளச் செய்யும்.

எல்லா நாடுகளுக்கும், எல்லாக் காலத்துக்கும் பொதுவான உண்மை இது.

ஆண்டன் செகாவ் இலக்கிய உலகத்தில் மிகுந்த கீர்த்தி பெற்ற ரஷ்ய ஆசிரியர். அவர் அற்புதமான சிறுகதைகளும், உயர்தர நாடகங்களும் எழுதி இருக்கிருர். அவர் உயிரோடிருந்த காலத்தில், எளிய வாழ்க்கையே வாழ்ந்தார். அவர் ஆத்ம சுதந்திரத்தோடு, தனது தனித் தன்மை ஒளிவீசும் விதத்தில் வாழ்ந்தார் என்று மாக்ஸிம் கார்க்கி குறிப்பிட்டிருக்கிருர். 'அவர் அழகிய எளிமையினுல் ஆனவர். எளிய, யதார்த்தமான, உண்மை நிறைந்த அனைத்தையும் அவர் நேசித்தார். மற்றவர்களையும் எளியராய் மாற்றும் தனி வழி ஒன்றும் அவர் பெற்றிருந்தார்' என்று கார்க்கி கூறுகிருர்.

செகாவை கண்டுபேச அவ்வப்போது யாராவது வருவது வழக்கம். ஒருசமயம் மூன்று அலங்காரவல்லிகள்

அவரைத்தேடி வந்தார்கள். மிகவும் ஆடம்பரமாக ஆடை அணிகள் பூண்டவர்கள். அவர்கள் வந்ததுமே அந்த அறை பூராவும் ஆடைகளின் மென் சரசரப்பும், நாசியைத் துளைக்கும் வாசனைகளும் நிறைந்துவிட்டன. அவர்கள் செகாவின் முன்னே மிடுக்காக அமர்ந்தார்கள். அரசியலில் ஆர்வம் உடையவர்கள் போல் காட்டிக்கொண்டு, செகாவை கேள்விகள் கேட்கத் தொடங்கினார்கள்.

'யுத்தம் எப்படி முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?'

அவர் இருமினார். யோசிப்பதுபோல் சும்மா இருந்தார். மென்மையும் கருணையும் கலந்த குரலில் சொன்னார்: 'சந்தேகமில்லாமல் சமாதானத்தில்தான்.'

'அது நிச்சயம்தான். ஆனால் யார் ஜெயிப்பார்கள்? கிரேக்கரா, துருக்கியரா?'

'பலம் மிகுந்த கட்சி வெற்றி பெறும் என்று எனக்குத் தோன்றுகிறது' என்று செகாவ் சொன்னார்.

'எந்தக் கட்சி பலம் மிக்கது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?' என மூன்று சிங்காரிகளும் ஒரே குரலில் கேட்டார்கள்.

'நல்ல போஷாக்கும் நல்ல பயிற்சியும் பெற்றுள்ள கட்சிதான்' என்றார் அவர்.

'எவ்வளவு சாமர்த்தியமாகப் பேசுகிறார் பாரேன்!' என வியந்தாள் ஒருத்தி.

'நீங்கள் எதைப் பெரிதும் விரும்புகிறீர்கள், கிரீக்கா, துருக்கியா?' என்று அடுத்தவள் கேட்டாள்.

செகாவ் அவளைப் பரிவுடன் நோக்கினர். எளிய, மரியாதை கலந்த புன்னகை பூத்தார். 'எனக்குப் பழவற்றல் ரொம்பவும் பிடிக்கும். உங்களுக்குப் பிடிக் குமா?' என்ருர்.

'ஓ!' என்று உற்சாகமாகக் கூவினுள் அவள்.

'பழ வற்றல்களில் இனிய சுவை உண்டு' என்று இன்னெருத்தி சொன்னுள்.

அதன்பிறகு மூன்று மங்கையரும் கலகலப்பாக உரையடலானுர்கள். பழவற்றல் தயாரிக்கும் முறைக ளைப்பற்றி ரசமாகவும் திறமையோடும் பேசினுர்கள். பெரிய எழுத்தாளரோடு பேசுகிருேம் என்ற தயக்கமும் அச்சமும் இல்லாமல்—என்ன விஷயம்பற்றி எப்படிப் பேசுவது என்று மூளையைக் குழப்பிக்கொள்ளவேண்டிய அவசியமில்லாமல்—தாராளமாகப் பேசினுர்கள். 'நாங் கள் உங்களுக்கு ஒரு பெட்டி நிறையப் பழவற்றல் அனுப்பப்போகிருேம்' என்று உவகைப் பெருக்குடன் அறிவித்துச் சென்ருர்கள்.

செகாவுடன் இருந்த கார்க்கி அப்புறம் சொன்னுர், 'நீங்கள் நேர்த்தியாக சம்பாஷித்தீர்கள்' என்று.

செகாவ் லேசாகச் சிரித்துவிட்டு, 'ஒவ்வொருவரும் அவரவருடைய சொந்த பாஷையில்தான் பேச வேண்டும்' என்ருர்.

இந்தவிதமான அனுபவங்கள் பலவற்றைக் குறித்து கார்க்கி சுவையாக எழுதிவைத்திருக்கிருர். 'செகாவ் சிரிக்கிறபோது, அவர் கண்கள் வெகு அழகாக மிளிரும். அவற்றில் பெண்மையின் மென்மை — கனிவும் இள மையும் கலந்த எதுவோ ஒன்று—நிறைந்திருக்கும்.

அவரது சிரிப்பு ஓசையே இல்லாதது போன்றது — விசேஷமான ஏதோ ஒரு கவர்ச்சி பெற்றிருந்தது. சிரிப்பதில் அவர் உண்மையான ஆனந்தம் அடைவதுபோல் தோன்றும். ஆபாசக் கதைகள் அவருக்கு சிரிப்பு அளிப்பது கிடையாது' என்கிருர் கார்க்கி.

ஆனல், மாபெரும் புகழ்பெற்ற டால்ஸ்டாய் இருந்தாரே, அவருக்குக் கொச்சைப் பதங்களும் பச்சையான பேச்சுகளும் அதிகம் பிடிக்குமாம். அவருக்கு பெண்களைப்பற்றி — அதுவும், ரஷ்யக் குடியானவனின் முரட்டுத் தன்மை கலந்தவிதத்தில் பேசுவதில் ஆசை அதிகம்.

எழுத்தில் சொல் ஜாலங்கள் செய்வதை டால்ஸ்டாய் ஆதரித்ததில்லை. கார்க்கி எழுதிய 'அகலபாதாளம்' என்கிற நாடகத்தில் சில பகுதிகளை வாசிக்கக் கேட்டதும், டால்ஸ்டாய் அதுபற்றி விசாரித்தாராம். கார்க்கியின் விளக்கங்களை அறிந்துகொண்டதும், அவர் சொன்னது இது —

'நீ இளஞ்சேவல் மாதிரிச் சாடுகிருய். இன்னுமொன்று — இயல்பாக உள்ள வெடிப்புகள், பிளவுகள் மீதெல்லாம் உனது சொந்தச் சாயத்தைப் பூசிமறைக்கப் பார்க்கிருய். மேல்பூச்சு அழிந்துபடும்; உண்மையான தோல் பல்லிளிக்கும் என்று ஆண்டர்சன் ஒரு கதையில் சொல்கிருர். எல்லாம் போய்விடும், உண்மை மட்டுமே நிலைத்து நிற்கும் என்று நம் குடியானவர்கள் சொல்வார்கள். பூசி மெழுக ஆசைப்படாதே. அது உனக்கு நன்மை தராது. மேலும் உனது பாஷை அதிகத் துள்ளலும் பெற்று, பல ஜாலங்கள் நிறைந்துகாணப்படுகிறது. இது சரிப்படாது. நீ மிக எளிய முறையில் எழுத வேண்டும். மக்கள் எப்பொழுதும் எளிய தன்மையில்தான் பேசுகிருர்கள். அவர்கள் தங்கள் கருத்தை நன்ருகவே எடுத்துச் சொல்கிருர்கள்.

'நான்கு வந்து மூன்றைவிடப் பெரிதாக இருக்கின்ற போது, மூன்றிலொரு பங்கு நான்கில் ஒரு பகுதியை விட அதிகம் என்றுவது எப்படி ?' என்று எந்தக் குடியானவனும் கேட்பதில்லை? ஆனால் படித்த இளம் சீமாட்டி ஒருத்தி இப்படிக் கேட்டாள். எழுத்தில் தந்திர வித்தைகளுக்கு எவ்வித அவசியமும் கிடை யாது!'

மாக்ஸிம் கார்க்கி தமது அனுபவங்களை ஒளிவு மறைவு இல்லாமல் எழுதியிருக்கிறுர், 'லிட்டரரி போர்ட் ரெயிட்ஸ்' (இலக்கியச் சித்திரங்கள்) என்ற நூலில். டால்ஸ்டாய், அவர் மனைவி, செகாவ், கொரலங்கோ, அவர்கள் கால எழுத்தாளர்கள் – பிரபலஸ்தர்கள் பற்றி எவ்வளவோ உண்மைகளை உணரமுடிகிறது இதிலி ருந்து. கார்க்கியின் 'இலக்கியச் சித்திரங்கள்' ரசனைக்கு இனிய விருந்துமட்டுமல்ல; சிந்தனைக்கு நல்ல தூண்டு தலும் ஆகும். அறிவுப்பசி உடையவர்கள் அவசியம் படித்தாகவேண்டிய புத்தகங்களில் இதுவும் ஒன்று.

# மகத்தான உண்மை

கொம்படர்ந்த தேமாவில் குலைகுலையாய் காய்கள் தொங்குவதைக் கண்டால், கல்லெடுத்து எறிய வேண்டும் என்ற ஆசை பலருக்கு உண்டாகிறது. அள வுக்கு அதிகமாக, அழகு அழகான பூக்களைச் சுமந்து நிற்கும் செடிகொடிகள் 'எங்களைக் கிள்ளுங்கள்; கொய் யுங்கள்' என்று வழியே போவோரின் ஆசையைத் தூண்டுகின்றன.

இந்த உலகத்தையும், உயிர்களின் வாழ்க்கையை யும் இயக்குகிற சக்தியும் பார்க்கப் போனால் குறும்புத் தனம் பெற்றதுதான். நிறைவையும் மிகுதியையும் காண்கிறபோது, தாக்கிச் சீர்குலைய வைக்க வேண்டும் என்ற துடிப்பு அதற்குச் சில சமயம் ஏற்படுவது உண்டு. பூரணமும் பெரும் மகிழ்வும் பெற்றுவிடும் மனித வாழ்வு இயக்கும் சக்தியின் விஷமப் பண்புக்கு 'சாம்பிராணிப் புகை' போடுவது போலவும் அமையலாம்! தன்னிலே தானேயாகித் தனது இன்பத்தில் ஆழ்ந்து, களி துலங்கச் சிரித்தபடி விளங்கும் குழந்தையைச் சீண்டி, கிள்ளி, அழவைத்து வேடிக்கை பார்த்து மகிழும் ஆசை சில ருக்கு ஏற்படுகிறதல்லவா? அந்த மாதிரி ஆசை இயக் கும் சக்திக்கும் எழும். அப்போது மனிதர்கள்பாடு ஆபத்துதான்!

அலெக்ஸாண்டர் குப்ரின் என்கிற ரஷ்யக் கதாசிரி யர் அழகாக எழுதியுள்ள ஒரு சிறு கதை இந்த எண் ணத்தை வலியுறுத்துகிறது.

ஒரு பெரிய மனிதர். வெளியூரில் சிறிது காலம் தங்கியிருந்துவிட்டு, வீடு திரும்புகிறார். ஊரில் சொந்த

வீட்டில், அவருக்காக அவருடைய மனைவி, வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பாள். தந்தையின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்கள் அருமை மக்கள். குடும்பத் தலைவரின் வீடு திரும்பல் எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சி அளிக்கும். பெரிய மனிதருக்கு இந்த நினைப்பே அதிக ஆனந்தம் தந்தது. அவர் உள்ளம் கும்மாளி யிட்டுக் கொண்டிருந்தது. உணர்ச்சித் துடிப்பால் பரபரத்த அவர் எல்லோரிடமும் தன்னைப்பற்றியும், தனது மனைவி மக்கள் பற்றியும், அவர்கள் ஆவலுடன் ரயில் நிலையத்தில் காத்திருக்கக் கூடிய பெருமை பற்றியும் உற்சாகமாகப் பேசினார். ரயில் ஒவ்வொரு பெரிய ஸ்டேஷனை அடையும் போதும் அவர் பர பரப்புடன் இறங்கிப் போவார். சந்தோஷம் படர்ந்த முகத்தோடு திரும்புவார். 'இப்போது ரயில்வண்டி இந்த ஸ்டேஷனுக்கு வந்திருக்கிறது; இவ்வளவு நேரத்தில் அங்கு வந்து சேரும் என்று என் மனைவிக்கு தந்தி கொடுத்தேன்' என்று பூரிப்புடன் சொல்வார்.

அவருடைய உற்சாகமும் பரபரப்பும் மற்றவர் களுக்கு முதலில் வேடிக்கையாகவும் விசித்திரமாகவும் தோன்றியது. பிறகு பரிகாசத்துக்குரியது போல் பட்டது. அவரே பரிதாபத்துக்கு உரிய நபராகி விட்டார் இறுதியில்.

அவர் இறங்க வேண்டிய நிலையம் வந்தது. அவ ருடைய பரபரப்பும் உற்சாகமும் அதிகரித்தது. 'அதோ, அவர்கள் வந்து காத்து நிற்கிறார்கள். எல்லோரும் என்னை ஆவலோடு எதிர்பார்த்திருப்பார்கள் என்று நான் சொல்லவில்லையா?...' இப்படிப் பெருமை பேசி னார் அவர்.

அவருடைய மனைவியும் மக்களும் பிறரும் மகிழ் வோடு கைகளை ஆட்டிக்கொண்டு முன்னே வந்தார்கள். பிளாட்பாரத்தில் ஆரவாரித்து, குதூகலத்தின் உயிர்ச்

சின்னங்களாக நகர்ந்த அவர்கள் திடுக்கிட்டு அலறினார்கள்.

உற்சாகத்தோடு, உணர்ச்சி பரவசத்தோடு, தம்மை மறந்த நிலையில், கைகளை ஆட்டிக்கொண்டு வண்டியில் கதவோரத்தில் நின்ற பெரியவர், வண்டி நிற்பதற்கு முன்னரே இறங்கி விட்டார். மனைவி மக்களின் முகத்தையே பார்த்தபடி அடி எடுத்துவைத்த அவரது கால்கள் தவறி, பள்ளத்துள் போகவும், அவர் ரயிலுக்குள் விழுந்து கோரமாக அறைபட்டுச் செத்தார்.

அவர் எல்லோரையும் போல் இயல்பாக நடந்து கொண்டிருந்தால், அவருக்கு இத்தகைய முடிவு ஏற்பட்டாமல் இருந்திருக்கலாம். அவருடைய போக்கே இயக்கும் சக்திக்குக் குறும்புத்தனமாகச் செயல் புரியும் ஆசையைத் தூண்டியது போலும்!

இந்தக் கதை 'டெம்ப்டேஷன்' (ஆசையைத் தூண்டுதல்) என்று ஒரு புத்தகத்திலும் 'டெம்ப்டிங் தி பிராவிடன்ஸ்' (தெய்வ சக்தியை தீமை செய்யும்படி தூண்டுதல்) என்று ஒரு தொகுதியிலும், ஆங்கிலத்தில் காணப்படுகிறது. உலகத்துச் சிறு கதைகளில் அருமையான கதைகளுள் இதுவும் ஒன்று.

உணர்ச்சிகளைச் சொல்லோவியமாக்கும் கலையில் தேர்ந்த அலெக்ஸாண்டர் குப்ரின் புகழ்பெற்ற ஒரு நாவலும் எழுதியிருக்கிறார். 'யாமா—தி பிட்' என்பது அதன் பெயர். விபசாரத்தில் பெண்களை ஈடுபடுத்தி அதை வியாபாரமாக வளர்க்கும் விடுதிகளைப் பற்றிய நாவல் அது. விபசாரத்தைத் தொழிலாகக் கொள்கிற பெண்களின் அவல வாழ்வையும், விபசார விடுதிகளின் உண்மைத் தன்மையையும் சுட்டிக் காட்டும் ஒரு இலக்கிய சிருஷ்டி அது. அத்தொழிலில் வெறுப்பும், அத்தொழிலில் ஈடுபட்ட அபலைகளிடம் அனுதாபமும் கருணை

யும் கொண்டு, விபசாரத் தொழிற் பெண்களின் வாழ்க்கை முறைகளை அறிவதற்காக அவர்களோடு பல தினங்கள் விடுதியிலே தங்கியிருந்து ஆராய்ந்து, கலை நுணுக்கத்தோடு இந்நாவலைப் படைத்திருக்கிறார் குப்ரின்.

நாவலில் வருகிற ஒரு கதாபாத்திரம் மூலம் குப்ரின் குறிப்பிட்டிருக்கிறார்—"நமது வார்த்தைக் கலைஞர்கள் இதை எல்லாம் பற்றிச் சிறிதும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. விபசார விடுதிகள் பற்றி அவர்களில் யாரும் எதுவும் எழுதவில்லை. ஏதோ அசிங்கத்தைக் கண்டு ஒதுங்குவது போல் ஒதுங்கி விடுகிறார்கள். அல்லது பயமோ? எனக்குத் தெரியாது. விபசார எழுத்தாளன் என்று பிறர் நகைப்பார்களே என்கிற பயமும் இருக்கலாம், அல்லது சுயசரிதம் என்று நினைத்து கொண்டு கெட்டவன் என்ற பட்டம் சூட்டிவிடுவார்களோ என்றும் இருக்கலாம். காரணம் என்னவோ துணிச்சலும் தியாக புத்தியும் உள்ள எவரும் முன்வரவில்லை—நெருங்கி இந்த விபசார வாழ்க்கையைப் பார்த்து விருப்பு வெறுப்பு இல்லாமல் விஷயங்களை சீர் தூக்கி எழுத யாருமே முன்வரவில்லை. அசட்டுப் பரிதாபம் காட்டாமல், பயங்கரமான எளிமையை, தினசரி வாழ்வை விவரிக்க வல்லவன் வரவேண்டும். எவ்வளவு அற்புதமான மகத்தான உண்மையான புத்தகம் எழுதலாம் தெரியுமா!'

குப்ரின் எழுதியிருக்கும் 'யாமா' அற்புதமான, உண்மையான புத்தகம் என்பதை அதை படிப்பவர்கள் உணர்ந்து கொள்வர். இந்நாவலின் ஒரு பகுதியை புதுமைப்பித்தன் தமிழாக்கித் தந்திருக்கிறார்.

"'காதலும் பசியும் தான் உலகத்தை ஆள்கின்றன''.—மனிதனின் துயரங்களைக் கூறும் முடிவிலா

வரலாற்றுக்கு இதுவே மிக உண்மையும் அதிகப் பொருத்தமும் உடைய மூலவாக்கியமாகும். ஆனல், எங்கே காதல் ஆட்சி புரிகிறதோ அங்கே, சமீபகாலம் வரை வெறி மிருகங்களாக இருந்த நாம் கலாசாரம் கலை இன்னும் மகத்தானவை எல்லாம் கிடைக்கப் பெற்றுள்ளோம். அதற்காக நாம் நியாயமான பெருமை கொள்கிருேம். நமது செயலுக்கு எங்கே பசி தூண்டுதலாக அமைகிறதோ அங்கு, நாகரிகமும் அதைத் தொடர்ந்து வருகின்ற துன்ப துயரங்கள் பலவும், சமீபகாலம்வரை வெறி மிருகங்களாக இருந்த பிராணிகளுக்கு அத்தியாவசியமான சுமைகளும் வரையறைகளும் வரப்பெற்றிருக்கிருேம். மூடத்தனத்தின் மகா பயங்கரமான நிலை பேராசையே. இது ஒரு மிருகத்தனப் பண்பேயாகும். மக்கள் இவ்வளவு பேராசை உடையவர்களாக இல்லாவிட்டால், அவர்கள் இவ்வளவு பசி உள்ளவர்களாகவும் இரார்; இன்னும் அதிக அறிவு உடையவர்களாக இருப்பர். இது விந்தைப் பேச்சு அல்ல. பார்க்கப் போனல், இது மிகவும் தெளிவானதே—நம்மிடமுள்ள, இன்று நமது வாழ்வைப் பெரும் சுமையாக மாற்றுகிற அளவுக்கதிகமான விஷயங்களை எல்லாம் நமக்குள் பங்கிட்டு வாழக் கற்றுக் கொண்டால், உலகம் அதிக ஆனந்தம் நிறைந்ததாகி விடும்; அதன் மக்கள் அதிக விவேகம் பெற்று விடுவர். ஆனல், கலைஞர்களும் விஞ்ஞானிகளும் மட்டுமே உலகத்துக்கு தங்கள் ஆத்மாவின் பொக்கிஷங்களை எல்லாம் வாரி வழங்குகிருர்கள். மற்ற எல்லோரையும் போலவே அவர்களும் மரணத்தின் பிறகு மண்ணுக்கும் பூச்சிபுழுக்களுக்கும் இரையாகிருர்கள். உயிரோடு இருக்கும் பொழுதோ, அவர்கள் விமர்சகர்கள், தர்ம உபதேசியார்கள் ஆகியோருக்கு இரையாக நேரிடுகிறது.

—மாக்ஸிம் கார்க்கி.

# நாடோடிக் கதை

ஒரு கதை. நாடோடிக் கதை. உங்களுக்கும் தெரிந்திருக்கும்.

ஒரு பிள்ளையார் அரசமரத்தடியில் வீற்றிருந்தார். உழவன் அவரைச் சுற்றிவந்து விழுந்து கும்பிட்டான். 'பிள்ளையாரப்பா, பயிரெல்லாம் கருகுகிறது. இன்றுவது மழை பெய்யட்டும். இன்று மழை பெய்தால்தான் ஏதோ கொஞ்சமாவது தலையெடுக்கும்' என்று பிரார்த்தித்தான். அவன் போய் சிறிது நேரம் சென்றபிறகு ஒருவன் வந்தான். இவனும் பக்தி சிரத்தையோடு கும்பிட்டான். 'சாமி கடவுளே! இன்று மழை பெய்யப் படாது. கண்டிப்பாக மழை இன்று வேண்டவே வேண்டாம். இந்த ஊரில் நான் கூத்து நடத்தப் போகிறேன். இன்று மழையை அனுப்பி என் பிழைப்பைக் கெடுத்துவிடாதே பிள்ளையாரே' என்று கும்பிட்டான்.

பிள்ளையாரப்பன் பாடு தர்ம சங்கடமாகத்தான் இருந்திருக்கும். இதுபோல் நேர்மாறுன வேண்டுதல்களை கேட்டுக்கேட்டு யாருக்குத் துணைபுரிந்து அருளுவது என்று குழம்பி, எவருக்கும் எதுவும் செய்ய வேண்டாம் என்றுதான் பிள்ளையார் வகையராக்கள் கல்லாகச் சிலையாக உட்கார்ந்து விட்டார்கள் என்று என் மனக்குறளி அடிக்கடி குரல் கொடுப்பது உண்டு.

இதே மாதிரிச் சுவையான கதை ஒன்றை நான் படித்து மகிழ முடிந்தது. ரொம்பவும் ரசமான கதைதான். சோவியத் ரஷ்யாவிலிருந்து வந்த கதை.

லுட்விக் என்ருெரு பாதிரியார். ஒரு ஞாயிற்றுக் கிழமை வேர்வை கொட்டக் கொட்ட விழித்தெழுந்தார். அவருக்குக் கோபம் வந்தது. அன்றும் ஒரே நிலைதான். வானம் நீலமாய் பளிச்சிட்டது. புழுக்கம் வேறு. மழை வருவதற்குரிய அறிகுறியே இல்லை. சின்னஞ் சிறு மேகத்துணுக்குகூட வானவெளியில் மிதக்கவில்லை. ஆனல் மழையோ இன்றியமையாத் தேவை இப்போது.

சோளப்பயிர் அழியும் நிலையில் இருந்தது. ஓட்ஸ் எப்படியோ உயிரோடிருந்தது. பார்லி வெளிறிக்கொண் ருந்தது. நிறைய உரம் போட்டு, பாடுபட்டு, உழைத்த விவசாயிகள் வாழ்க்கை இவற்றை நம்பித்தானிருந்தது. அவர்கள் அனைவரும் பக்தி மிகுந்தவர்கள். தேவாலயக் காணிக்கை செலுத்தத் தவருதவர்கள். விளைவு இல்லாது போனல் அவர்கள் காணிக்கைதான் எவ்வாறு செலுத்த முடியும்? எல்லோரும் முறையிட் டார்கள். வறண்ட காலநிலை குறித்துப் புலம்பினர்கள்.

பாதிரியார் ஆறுதல் கூறினர். ஆண்டவன் கை விடமாட்டான்; புனித யோவான் புண்ணிய தினத்தை ஒட்டிவரும் ஞாயிறு அன்று விசேஷப் பிரார்த்தனை நடத்துவோம்; மழை அவசியம் வரும் என்று அவர் உறுதியாய் அறிவித்தார்.

அன்றுதான் அந்த ஞாயிற்றுக்கிழமை. அவர் உறுதிமொழி பொய்யாகுமானல், அவர் வாழ்வுதான் என்னகும்? பக்தர்களை நம்பித்தானே அவர் வாழ்க்கை நடத்தவேண்டியிருக்கிறது? அவருக்கு நாற்பது வயசாகி விட்டது. இன்னும் மணமாகவில்லை. இப்போதுதான் அதற்கு ஒரு வாய்ப்பு நெருங்கிக் கொண்டிருந்தது.

தனிவீடு அமர்த்தி, தேவையான கட்டில், நாற் காலி மாச்சாமான்கள் அனைத்தையும் கடனில் பெற்று-

வீட்டை அலங்காரம் செய்துவிட்டார். அவர் மனைவியாக மாறுவதற்குத் தயாராக இருந்த கன்னிதான் யோசனைகள் கூறி, எல்லாவற்றையும் தேர்ந்தெடுத்தாள். செயலான குடும்பத்தைச் சேர்ந்தவள் அவள்.

அவளை, தங்கள் திருமணத்தை, அதற்கான முன் ஏற்பாடுகளை, எதிர்காலச் சுகவாழ்வை எல்லாம்பற்றி எண்ணியவாறே பாதிரி எழுந்தார்; முகக்ஷவரம் செய்து, ஆலயத்துக்கான உடையணிந்து கிளம்பினார். 'இன்று மழைவராமல் போனால், இந்த ஊர்க்காரர்கள் என்னை மதிப்பார்களா என்ன?' என்ற ஏக்கம் அவருள் குடைந்தது. விண்வெளியில் தாவிய அவர் விழிகள் அங்கோர் மேகத்தைக் கண்டன. அவருக்கு ஆண்டவன் அருளில் நம்பிக்கை உண்டாயிற்று.

பக்தர்கள் பலர் வந்திருந்தனர். ஒரே ஒரு அம்மாள் மட்டும்தான் கையோடு குடை எடுத்து வந்திருந்தாள். அவளுடைய பக்தியையும் நம்பிக்கையை'யும் வியந்து போற்றினார் பாதிரியார். அவருடைய காதலி மாலியும், அவளைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தார்கள். எல்லோரும் தமது ஆற்றலை, பக்தியின் மாண்பை அன்று உணர வேண்டும்—உணரப் போகிறார்கள்—என்ற உள்ளக் களிப்பு பாதிரியாரை ஆட்டி வைத்தது.

ஒற்றை மேகம் கறுத்தது. பெருத்தது. கவிந்து கனத்தது. இடி இடித்தது. மின்னல் பளிச்சிட்டது. ஆண்டவன் உண்மையாகவே தனது பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து விட்டாரா?— பாதிரியால் நம்பமுடியவில்லை. நம்பாதிருக்கவும் இயலவில்லை.

அவர் உணர்ச்சி வேகத்தோடு உற்சாகத்தோடு பிரார்த்தனைச் சொற்பொழிவு ஆற்றினார். வானத்தின் உறுமல் வலுத்தது. மழை இறங்கியது. சோனமாரியாகப் பொழிந்து கொட்டியது. அனைவரும் தம்மை மறந்த பரவச நிலையிலே, பேச்சற்று அமர்ந்திருந்தனர்.

திடீரென்று லூகு குடும்பத் தலைவன்—மாலியின் தந்தை—தன் கையிலிருந்த வேதப் புத்தகத்தை வீசி விட்டு வேகமாக வெளியே ஓடினான். வெறிபிடித்தவன் போல் ஓடிச்செல்லும் அவனையே வியப்புடன் நோக்கி னர் அனைவரும். ஏன் இப்படி ஓடுகிறான் என்பதுதான் யாருக்கும் புரியவில்லை.

பாதிரிக்கும் விளங்கவில்லை. பிறகு திருவாளர் லூகுவைச் சிறிது கண்டிக்க வேண்டும் என்று எண்ணி னார் பாதிரி. தமக்கு மாமனாராக வரப்போகிற பெரிய மனிதர்தான். அதற்காக? தேவாலயத்தில் எப்படி நடந்துகொள்வது என்று தெரியாமல் போனால்? பாதிரி யாரை வீட்டு மாப்பிள்ளையாகப் பெறுவது என்பது அப்படி ஒன்றும் அல்ப விவகாரம் இல்லையே! அவர் சிறிது கொதிப்புற்றார். எப்படியோ பிரார்த்தனைக் கூட் டத்தை முடித்து வைத்தார்.

வழக்கமாக அவரைத் தேடிவந்து பாராட்டும் பண்புடைய லூகு அன்று வரவேயில்லை. மாலியும் காத் திருக்கவில்லை. அவள் அம்மாவும் காணப்படவில்லை. பாதிரியாருக்கு எல்லாம் ஏமாற்றமாகவும் எதிர்பாராதது ஆகவும் இருந்தன.

அவர் லூகு குடும்பத்தினரைத் தேடி நடந்தார். பெரு மழை பிடித்து விளாசியிருந்தது நெடுகிலும். இப்போது பொன்னொளிச் சூரியன் ஜாலம் செய்து கொண் டிருந்தது. பாதிரியார் நீரிலும் சேற்றிலும் அலைந்து செல்ல நேர்ந்தது.

லூகு வீட்டில் அவரை ஒருவரும் வரவேற்கவில்லை. வீட்டுத் தலைவி அவர் வருவதைப் பார்த்தும் பாராதது போல் உள்ளே போய்விட்டாள். தலைவர் தூங்குவது போல் பாசாங்கு செய்து கிடந்தார். அவர்களுடைய போக்கு புதுமையாக இருந்தது. புரியாததாகவும்

இருந்தது. பாதிரியார் பேச்சை ஆரம்பிக்க வேண்டுமே என்பதற்காகப் பேசலானார்: ‘இன்று மழை எப்படி?’

‘ஓகோ, பீத்திக்கொள்ள வந்துவிட்டாயோ?’ என்று சீறி எழுந்தார் ஸ்ரீமான் லுகு.

‘பெருமையடித்துக் கொள்ளமாட்டாரா பின்னே?’ என்று பக்கப்பாட்டு பாடவந்தாள் ஸ்ரீமதி.

‘எங்களைக் கேலிபண்ணவா இங்கு வந்தாய்?’ எனச் சிடுசிடுத்தார் அவர்.

‘நம்ம வீட்டிலே பெண் கொள்ளலாம் என்று எண்ணினாரே இவரு!’ என்று பழித்தாள் அவள்.

‘உனது நல்ல செயலின் பலனை நீயே பாரு’ என்று பாதிரியைப் பிடித்து இழுத்துக்கொண்டு நடந்தார் குடும்பத் தலைவர். ‘உன் கண்ணாலே பாரு!’

‘இவரு பெரிய பாதிரி! நம்ம வீட்டு வருங்கால மாப்பிள்ளை!’ என்று முனங்கினாள் அவர் மனைவி.

அவர்கள் ஆத்திரத்துக்கும் ஆங்காரத்துக்கும் காரணம் இல்லாமலில்லை. பெரும் பரப்பில் கண்டு முதலாகி யிருந்த கிளோவர் பூண்டு கண்ணெட்டும் தூரம்வரை வட்டம் வட்டமாகப் பரப்பப் பட்டிருந்தது வெயிலில் உலருவதற்காக! வயல்களிலும் புல்தரைகளிலும் வைக்கோல் குவிந்து கிடந்தது. எங்கு பார்த்தாலும் ஒரே வைக்கோல் மயம். வெயில் அடிக்கும் என்ற தெம்பில் எல்லாம் அலட்சியமாக விடப்பட்டிருந்தன. பெருமழை அனைத்தையும் பாழ்பண்ணி விட்டது.

‘துரதிர்ஷ்டம்தான்!’ என்றார் பாதிரி.

‘துரதிர்ஷ்டமல்ல. சீர்குலைவும் பாப்பர் நிலையும் தான். எல்லாம் போச்சு. பாழாச்சு. இன்று இரவுக்

குள் எல்லாம் போராகி முடிந்திருக்கும். நீ மழையை வரவழைத்துக் கெடுத்துவிட்டாய். முந்நூறு ஆயிரம் பாழ்...' என்று லுகுப் பெரியவர் தாக்கினர். ஸ்ரீமதி அழுது புலம்பினள்.

'பணமும் பொருளும் பாழ்! உன் மழைவந்து எங்கும் வெள்ளக் காடாக்கி, எல்லாவற்றையும் மூழ்கடித்தது...'

பாதிரியாரும் மனிதன் தானே? எவ்வளவு நேரம் பொறுத்திருப்பார்? அவரும் கோபம் கொண்டார். 'என்ன உளறல் இது? நானு மழையை வரவழைத்தேன்? ஆள் ஆளுக்கு வேண்டியதை எல்லாம் வரவழைத்துக் கொடுக்கும் சக்தி என்னிடம் இருப்பதுபோல் பேசுகிறீர்களே?' என்று எரிந்து விழுந்தார்.

'பின்னே கோயிலில் நீ பெரிசாக வாயாடினுயே? அது என்ன நாடகமா?' என்று தொடங்கி அவரை ஏசினர்கள் வீட்டுக்காரர்கள். அவரை வெளியே தள்ளிக் கதவடைத்தார்கள். நாய்கள் அவரைக் கடிக்க வந்தன. அனைத்திலும் மேலாக அவரைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்து எல்லா ஏற்பாடுகளிலும் கலந்துகொண்ட மாலி வேறொரு யுவனோடு காதல்பேசி, இளித்தபடி செல்வதை அவர் கண்டார்.

'எல்லாம் போச்சு. என் குடிதான் முழுகியது' எனக் குமைந்தார் பாதிரி. மரச்சாமான் விற்பனையாளருக்கும் பிறருக்கும் அவர் தரவேண்டிய மிகப் பெருந்தொகை பற்றியும் இதர குழப்பங்கள் பற்றியும் எண்ணி நடுங்கலானா. பாதிரியார் அப்பொழுதுதான் பேய் மழையில் சொட்டச் சொட்ட நனைந்து கூனிக்குறுகி உடல் வெடவெட என நடுங்குவதுபோல் தோன்றினர்.

இந்தக் கதையை இன்னும் விரிவாகச் சுவைகூட்டி எழுதியிருக்கிறர் ஆண்ட்ரே உப்பிட்ஸ் என்பார்.

# புகழ்ப் பசியன்

இலக்கிய உலகத்தின் இமயப் பெரும் சிகரம் லியோ டால்ஸ்டாய். மனித உலகத்தின் தன்மைகளையும் தவறுகளையும், பெருமைகளையும் சிறுமைகளையும், மனித வாழ்க்கையின் பலதரப்பட்ட சித்திரங்களையும், மனிதர் உள்ளத்தின் ஆழத்தையும், உணர்வுகளின் சுழற்சிகளையும் சூறைகளையும் அவர் அழகாகவும் அற்புதமாகவும் எழுத்தாக்கியிருக்கிறார். 'போரும் அமைதியும்' எனும் அவரது மகத்தான நாவலிலும், மற்றுமுள்ள நாவல்களிலும் விந்தை மனிதர் பலப் பலரின் வேடிக்கையான போக்குகளை அவர் பதிவு செய்திருக்கிறார். அன்பு, ஆன்மீக உயர்வு, லட்சிய வாழ்வு முறை முதலியவைகளைத் துதி பாடுவதற்கென்றே அவர் எழுதி வைத்த கதைகளிலும் வேடிக்கையான பாத்திரங்களை அறிமுகம் செய்திருக்கிறார்.

'இந்த மனிதனின் காம்பீர்யம்தான் என்ன! அவருடைய ஆத்ம பலத்தின் ஆச்சர்யகரமான சக்திதான் என்ன! எல்லாம் அற்புதமானவை. அவரைப் போன்ற இன்னொருவர் வாழ்வது சாத்தியம் எனத் தோன்றவில்லை என்ற எண்ணமே நமக்கு எழும், அவரைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினால்!' என்று மாக்ஸிம் கார்க்கி டால்ஸ்டாய் குறித்து வியந்து எழுதியிருக்கிறார்.

அத்தகைய மகத்தான ஆற்றல் பெற்ற டால்ஸ்டாய் படைத்து விளையாடவிட்டு, கண்டுகளித்து, நமக்கும் வேடிக்கைப் பொருளாய் திகழச் செய்துள்ள அதிசய சிருஷ்டிகளுள் 'அருள்தந்தை ஸெர்ஜியஸ்' (ஃபாதர் ஸெர்ஜியஸ்) ஒன்று ஆகும்.

மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் அருளுக்கு இலக்கான தளபதி ஒருவன் — அழகுத் தோற்றம் கொண்ட கோமகன் — தகத்தகாய எதிர்காலத்தை நிச்சய வெகுமதியாக எதிர் நோக்கி நின்றவன் — சக்கிர வர்த்தினியின் பரிவாரத்தைச் சேர்ந்த வசீகரக் கோமளாங்கி ஒருத்தியை அடுத்த மாதத்தில் மணம் புரிந்து கொள்ளவிருந்த பாக்கியசாலி...

திடீரென்று இராணுவ பதவியை உதறி எறிந்தான். நிச்சயிக்கப்பட்டிருந்த கல்யாணத்தை தேவையில்லை என முறித்தான். தனக்கிருந்த சொத்து பூராவையும் தன் தங்கை பேருக்கு மாற்றினான். 'சாமியார்' ஆகிவிடுவதற்காக ஒரு மடத்தை நோக்கிப் போய்விட்டான்.

சாதாரண மக்கள் அனைவருக்கும் இது பரபரப்பூட்டும் நிகழ்ச்சிதான். ஆனால் அவ்வாறு செயல் புரிந்த கோமகன் ஸ்டீபன் காஸட்ஸ்கிக்கோ இது சர்வ சாதாரணமான ஒரு தீர்மானமாகத் தோன்றியது.

அவன் ராணுவப் பயிற்சியில் அதிதீவிரம் காட்டி முன்னுக்கு வந்தவன். மன்னர்பிரானிடத்தும், தாய்நாட்டின்மீதும் அளவிலா பக்தி கொண்டிருந்தவன். அவன் தன் முன்னே ஏதோ ஒரு குறிக்கோள் இருப்பதாக எண்ணிக்கொள்வான். அது அல்பமானதாகவே இருக்கட்டுமே. அதை அடைய அவன் முழுமூச்சுடனும் தீவிர வேகத்தோடும் முனைவான். அதை அடைவதற்காகவே வாழ்வான். வெற்றி பெறுவான். அதை அடைந்த உடனேயே, அது இருந்த இடத்தில் வேறொரு குறிக்கோள் தலையெடுக்கும், அதை அடைய அவன் பாடுபடுவான். இப்படி ஒன்றை அடுத்து மற்றொன்றாகக் குறிக்கோள்களை வகுத்துக்கொண்டு, உயிரைக் கொடுத்து உழைத்து வெற்றிபெறுவதுதான் அவனுடைய வாழ்க்கை அம்சம். அதன் அடிப்படை

என்ன? தற்சிறப்பு மோகம்தான்: தனது பெருமையை உலகுக்கு உணர்த்து வதற்காகப் புகழ்பெறப் போராடு வது — புகழைச் சம்பாதிப்பது.

இந்த ஆசை தான் அவனை ராணுவத்திலும் உந்தி யது. ஏராளமான புத்தகங்களைப் படித்து அறிஞனாகும் படி தூண்டியது. உயர்குல மக்கள் கூட்டத்திலே ஒரு நட்சத்திரமாகப் பிரகாசிப்பதற்குரிய பண்புகளைக்கற் றுக் கொள்ளச் செய்தது.

அந்தக் காலத்தில் உயர்குலத்தார் சமூகம் நான்கு வகைகளாக விளங்கியது. பார்க்கப் போனால், எல்லாக் காலத்திலும் எங்கும் இதே தன்மைதான் என்கிறார் டால்ஸ்டாய் 1. பணபலம் பெற்றவர்கள்; ராஜசபையைச் சார்ந்தவர்கள். 2. செல்வம் இல்லாத போதிலும், பிறப் பினாலும் பயிற்சியினாலும் ராஜசபையைச் சேர்கிறவர் கள். 3. பணம் பெற்று, அந்தத் தகுதியைக் கொண்டு ராஜசபையில் இடம் பெற முயல்கிறவர்கள். 4. பண பலமோ, ராஜசபை அந்தஸ்தோ பெற்றிராத போதிலும்; பணக்காரர்களோடும் ராஜசபையைச் சேர்ந்தவர்களோ டும் கூடிக்குலாவ மோகம் கொண்டு திரிபவர்கள்.

காஸட்ஸ்கி இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவன். பின் இரு பிரிவினரும் அவனை நன்கு வரவேற்றனர். தன்னை கவனிக்காத உயர் சமூகத்து முதல் பிரிவில் எப்படியும் இடம்பெற்றாக வேண்டும் என்று திட்டமிட் டான் அவன் - அதற்குச் சுலபமானவழி முதல்பிரி வைச் சேர்ந்த மங்கை ஒருத்தியின் காதலனாக மாறு வதுதான். அவன் கருமமே கண்ணாக முனைந்தான். விரைவில் வெற்றியும் கண்டான்.

அவன் தேர்ந்தெடுத்த பெண் பேரழகி. பெரும் செல்வர்களாலும் வியந்து போற்றப்பட்ட கோமகள்.

ஆரம்பத்தில் அவள் அவனை ஆதரிக்கவில்லை. அவள் மீது உண்மையான காதல் கொண்டான் அவன். நாளடைவில் அவள் அவனிடம் பரிவு காட்டினுள். அவள் தாய் அவனை மகிழ்வுடன் வரவேற்று, ஆதரவு நல்கினுள். அவளை மணந்து கொள்ள அவன் விரும்பினுன். அவனது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வளவு எளிதில் இது நிறைவேறிவிட்டது அவனுக்கே வியப்பளித்தது. தாய், மகள் இருவர் பண்பிலும் விசித்திரமான — வழக்கத்தை மீறிய – ஏதோ ஒன்று கலந்து கிடந்ததாக அவனுக்குத் தோன்றியது. அவன் ஆழ்ந்த காதலில் சிக்கியிருந்ததால், உண்மையை உணர இயலாக் குருடன் ஆகவும், ஊரில் ஒவ்வொருவரும் பேசிக்கொண்ட விஷயத்தைக் கேட்டறியத் தெரியாத செவிடனுகவும் விளங்கினுன். அவனை மணந்து கொள்ளச் சம்மதித்த உயர்குல அழகி ஒருவருடக் காலமாக மன்னனின் ஆசை நாயகியாக உல்லாச வாழ்வு வாழ்ந்து வந்தாள்.

கல்யாணத்துக்கு இரண்டு வாரங்கள் இருந்த போது, இந்த உண்மையை அவன் அறிய நேர்ந்தது. புனிதத்தின் திருஉருவமே போலும், காதலின் களங்கமில்லாக் கற்கண்டுச் சிலை போலும் அவனேடு உரையாடி உவகை தந்த கட்டிளம் பெண் மன்னர் பிரானின் காமக்களியாட்டத்துணைவியாகக் காலம் கழித்தவளாம்! இதை அவள் வாயினுலேயே கேட்டுத் தெரிந்து கொண்ட அவன் கொதிப்புற்றுன். கோபம் கொண்டான். அவளது முதற் காதலன் சாதாரண பிரஜையாக இருந்தால் அவன் அப்போதே போய் அந்த நபரை தீர்த்துக் கட்டியிருப்பான். ஆனுல் அவனே மாண்பு மிக்க மன்னர் பிரான்! மன்னரிடம் அவனுக்குக் காதல் என்று சொல்ல வேண்டிய அளவுக்கு பக்தி உண்டு. என்ன செய்வான் பாவம்!

ஆகவேதான் அவன் வேலையை, காதல்பெண்ணை, ஒளிமயமான எதிர்காலத்தை, சமூக அந்தஸ்தை, சொத்து சுகத்தை எல்லாம் உதறி விட்டு சாமியார் மடத்துக்கு ஓடிப்போனான்.

ஃ ஃ ஃ

சாமியார் வாழ்க்கையிலும் பரிபூரணத்துவம் எய்தவே பாடுபட்டான் அவன். அது அவனது பிறவிக் குணம். வெற்றியும் பெற்றான். எல்லோரும் வரக்கூடிய பொது விடத்தில் தங்கி யிருப்பதால் உள்ளம் சஞ்சலம் அடையும், ஆசைகள் வளரும் என்று கருதி, முற்றிலும் தனியான இடம் ஒன்றை வேண்டினான் அவன். அத்தகைய ஒதுக்கிடம் அவனுக்கு அளிக்கப்பட்டது.

தானாகவே துறவை மேற்கொண்ட புகழ்ப்பசியனின் - தற்சிறப்பு மோகியின் — மனநிலையை, எண்ணங்களை, செயல்களை உள்ளக் களிப்பை அருமையாகச் சித்திரித்துள்ளார் டால்ஸ்டாய் 'அருள்தந்தை ஸெர்ஜியஸ்' எனும் நெடுங்கதையிலே. மன்னர் மன்னனின் காமினியாக விளங்கிய இளம் பெண்ணை மணந்து, மதிப்பும் பதவி உயர்வும் நல்வாழ்வும் பெற்ற ஒன்றிருவர் இருக்கத்தான் செய்தார்கள். அவர்களைப் போல அவனும் உயர்வடைந்திருக்க முடியும், அந்தப் பெண்ணை மனைவியாக ஏற்றுக் கொண்டிருந்தால். அந்த அவல ஆசையிலிருந்து தப்பி ஓடிவந்துவிட்டதற்காக அவன் மகிழ்வுற்றதும் உண்டு. சில சமயங்களில் மனம் வருந்தியதும் உண்டு. இந்நிலையில் தொடங்கி அவனது மனோ வளர்ச்சியையும், பண்பு மாற்றத்தையும் தெளிவாக விளக்கியிருக்கிறார் ஆசிரியர்.

உரிய காலத்தில், பல தேர்ச்சிகள் பெற்ற பின்னர், 'அருள் தந்தை ஸெர்ஜியஸ்' என்ற பெயர் அவனுக்குக்

கிடைத்தது. முற்றும் துறந்த ஏகாங்கியாக வாழ ஆசைப்பட்ட ஸெர்ஜியஸ், முன்பு ஒரு புனிதர் தங்கியிருந்து, தனித்தவம் புரிந்து, உயிர்விட்ட ஒரு குகைக் குடிலை அடைந்தான். கடும் தவவாழ்வை மேற்கொண்டான்.

அப்படி ஆறு வருஷங்கள் கழித்துவிட்டான் அவன். ஸெர்ஜியஸ் பெயர் நெடுகிலும் பரவி யிருந்தது. அந்தச் சமயத்தில் கொடிய சோதனை ஒன்று அவனை எதிர்நோக்கி வந்தது.

உல்லாச மாலை நேரம். ஒய்யாரி மகோவ்கினேவும் அவள் நண்பர்களும் ஆனந்தமாகப் பிரயாணம் செய்து ஸெர்ஜியஸின் குகை இருந்த தனிமடத்தின் அருகே வந்து சேர்ந்தார்கள். அருள் தந்தை ஸெர்ஜியஸ் தான் முன்னாள் ஆணழகன் காஸட்ஸ்கி என அறிந்த ஒய்யாரி கிளர்ச்சி யுற்றாள். அந்தச் சாமியாரோடு இன்று இரவைக் கழிப்பேன் என்று சூளுரைத்தாள். நடக்க இயலாத காரியம் என நண்பர்கள் கூறியும், அவள் அடம் பிடித்தாள். இதர பெண்களும் நண்பர்களும் அவளை குகைக்குடில் அருகே இறக்கிவிட்டு, பின்னர் வருவதாகச் சொல்லிப் பிரிந்தார்கள். அவள் தயவைப்பெற ஆசைப்பட்டு அவளுக்கு உபசரணைகள் செய்துவந்த ஒரு வக்கீல் மாத்திரம் அவளைக் கவனித்துக் கொள்ளும் எண்ணத்தோடு அங்கே இறங்கினான்.

'எப்போ பாரு, ஒரே தினுசுதான்! எல்லாம் ஒரே மாதிரி. ஒரு மாறுதல் கிடையாது. புதுமைகிடையாது. அருவருப்பு தரும்படியான வாழ்வு! குடிநாற்றமும் புகையிலை வீச்சமும் மண்டிய செம்மூஞ்சிகள். எப்பவும் ஒரேமாதிரிப் பேச்சு. அதேமாதிரி எண்ணம். சாக்கடை உள்ளம். அழுகல் வாழ்வு. அதிலேயே திருப்தி. எனக்கு இது பிடிக்க வில்லை. எனக்கு அதிர்ச்சி

வைத்தியம் தேவை. நான் பார்க்க அழகாகத்தான் இருக்கிறேன். அந்தச் சாமியார் எப்படி இருப்பாரோ, தெரியலியே. அந்த ஆசையை அவர் உண்மையாகவே இழந்திருப்பாரா என்ன ? நாற்பது வயசுக்குமேல் ஆகி விட்டால்தான் என்ன ? பெண் ஆசையை வென்றிருப் பாரோ ? அதைத்தான் நான் அறிந்தாக வேண்டும்...'

இவ்வாறு எண்ணிக்காண்டே குகை அறையின் கதவை நோக்கிச் சென்ருள் அந்தச் சிங்காரி.

அருள் தந்தை செர்ஜியசுக்கு அப்போது நாற்பத் தொன்பது வயசு. அவர் தனியராய் குகைக் குடிலுள் ஒடுங்கிக்கிடந்து ஆறு வருஷங்கள் ஓடிவிட்டன. அவர் அனுபவித்த மன உளைச்சலுக்கும் உணர்ச்சிப் போராட் டத்துக்கும் ஒரு அளவு கிடையாது. முக்கியமாக, சந்தேகம், காமம் ஆகிய இரண்டும் அவரைப் படாத பாடு படுத்தின. அப்படி அவர் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த ஒரு சமயத்தில்தான் அலங்காரி வந்து கதவை இடித்தாள்.

முதலில் அது வெறும் பிரமை என்று எண்ணினர் அவர். பேயோ, பிசாசோ எனக் கருதினர். வெளியே கொட்டும் பனி மழையில் நின்று விறைத்துப் போவதாக அவள் அழுது புலம்பினள். சாமியார் ஒருவாறு மன மிரங்கிக் கதவைத் திறந்தார்.

இனிய மணம் பரப்பியவாறே உள்ளே புகுந்தாள் சிங்காரி. அப்படி வந்து அவருக்குத் தொல்லை கொடுக்க நேர்ந்தது பற்றி ஒரு கதை கட்டினள். மன்னிப்பு கோரி னள். அவர் முன்னிலையில் பொய் சொல்ல முடியாமல் திணறினள். அவள் என்னவோ எதிர்பார்த்து வந்தாள். அவள் கற்பனை செய்தபடி இல்லையே இந்த சாமியார். இருந்தாலும், அவளுக்கு அவர் அழகுடையவராகத் தான் தோன்றினர்.

அவள் பேச்சை அவர் நம்பவில்லை என்பதை அவரது முகம் காட்டியது. 'சரிசரி. இங்கு சௌகரியமாய் தங்கி ஓய்வு எடுத்துக்கொள்' என்று கூறிவிட்டு அவர் தங்கிருந்த மற்றொரு இருட்டறைக்குள் சென்று பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

நேரம் ஓடியது. அவளுக்கு அந்தச் சூழ்நிலை மிகவும் பிடித்திருந்தது. இங்கு வசித்த விசித்திரமான—கவர்ச்சி பொருந்திய—ஆணை வசியம் செய்து வெற்றி கொள்ள வேணும் என்ற ஆசை அவள் உள்ளத்தில் குறுகுறுத்தது. அவள் குழைவு மொழி பேசினாள். கிண்கிணிச் சிரிப்பு சிதறினாள். சாமியார் ஒரு சொல்கூட எதிரொலி தரவில்லை. ஆயினும் அவளுக்குத் தெரியும், அவளது குரலும் சிரிப்பொலியும் அவர் உள்ளத்திலே கிளுகிளுப்பு உண்டாக்குகிறது, உணர்வைக் கிளறிவிடுகிறது என்று. 'ஆகா, இவரல்லவா சரியான ஆண்பிள்ளை!' என அவள் எண்ணினாள். அவரை நினைத்து மகிழ்வுற்று, அவரைத்தான் இருக்கு மிடத்துக்குக் கவர்ந்திழுக்க அவள் பெரிதும் முயற்சித்தாள்.

சாமியார் உட்புற அறையிலிருந்து அசையவே இல்லை. அவரை எப்படியும் வெற்றி பெறுவது என உறுதிபூண்ட ஒய்யாரி நாடகமாடத் தொடங்கினாள். தான் ஏதோ வியாதியில் சிக்கி அவதியுறுவதாகவும், தனது உயிர் போய்க்கொண்டிருப்பதாகவும் ஓலமிட்டு, ஈவு இரக்கமற்ற சாமியாரைக் குறைகூறிப் புலம்பினாள்.

செர்ஜியஸ் மன அமைதியோடு இருந்தாரில்லை. அவர் உள்ளத்தில் பெருங் குழப்பம். ஆபத்து—அழிவு—தன் தலைமீது விழக் காத்திருப்பதாக உணர்ந்தார் அவர். 'உம்மிடம் மனிதத் தன்மையே இல்லை' என்று அவள் புலம்பியது அவர் மனசை அறுத்தது. அவளுக்கு உதவிசெய்ய வேண்டியதுதான்; அவள் இருக்கும்

அறைக்குப் போகத்தான் வேண்டும். 'இதோ! ஒரு நொடியில் வந்துவிட்டேன்' என்று சொல்லி, அவளை ஏறெடுத்துப் பாராமலே கடந்துசென்று, விறகு தறிக்கும் கைக்கோடரி கிடந்த இடம் சேர்ந்தார் அவர். மன உறுதியோடு—உணர்ச்சித் தீக்கு பலியாகி நாசமாகக் கூடாது என்ற வைராக்கியத்தோடு—அவர் தனது இடது கையின் ஆள்காட்டிவிரலை துண்டாக வெட்டித் தள்ளினார். பொங்கிய வலியையும், பீறிட்டுப் பாயும் ரத்தத்தையும் மறைத்தபடி அவள் முன்போய் நின்றார். தாழ்த்திய கண்களோடு, 'உனக்கு என்ன வேண்டும்?' என்று பரிவுடன் விசாரித்தார்.

அவள் ஏதோ சொன்னாள்.

'அருமைச் சகோதரி, அழிவற்ற ஆத்மாவை நீயே ஏன் உனது செயல்களால் நாசப்படுத்திக் கொள்கிறாய்?' என்ற ரீதியில் போதனை புரிந்தார் சாமியார்.

இதற்குள் அவரது நிலையை, சொட்டும் ரத்தத்தை, வெட்டுண்ட விரலை எல்லாம் கண்டுகொண்ட அந்தப் பெண் பதறிப் போனாள். அவர் மீண்டும் இருட்டறைக்குள் போய் கதவடைத்துக் கொண்டார். அவள் கேட்டதற்கெல்லாம், 'போ. போய்விடு. கடவுள் உன்னை மன்னிப்பார்' என்றுதான் சொன்னார்.

அழுதுகொண்டே வெளியேறினாள் அழகி. அவளுக்காக காத்திருந்த வக்கீலிடம் எதுவுமே பேசவில்லை. அவள் உள்ளம் மிகுதியும் பாதிக்கப்பட்டு விட்டது. விரைவிலேயே அவள் துறவு வாழ்க்கையை ஏற்று, கன்னியாஸ்திரீ மடம் ஒன்றில் சேர்ந்தாள்.

ஃ ஃ ஃ

இந்நிகழ்ச்சியின் விவரம் நெடுகிலும் பரவியது. அவரை தரிசிக்க மக்கள் திரண்டனர். அதனால் அவர்

வசித்த இடத்தில் மாதா கோயிலும் மடங்களும் எழுந்தன. பாதிரிமார்கள் பெருகினர்.

அருள் தந்தை செர்ஜியஸின் கைபட்டால் போதும்; தீராத நோய்கள் பலவும் தீர்ந்து போகும் எனும் நம்பிக்கை மக்களிடம் உண்டாயிற்று. அவர் தொட்ட தனுல் அநேகருக்கு நோய் தீர்ந்தது. அவர் புனிதர்; புண்ணியர்; பூஜிக்கத் தகுந்தவர் என்று எல்லோரும் போற்றினுர்கள். மதமும் மதவாதிகளும் இவரை நன்கு பயன்படுத்தும் நிலைமை ஏற்பட்டு வளர்ந்தது. அது அவருக்கு வேதனை அளித்தது. ஆயினும் வேறு வழியில்லை.

இந்த விதமாகப் பல வருஷங்கள் ஓடிவிட்டன. ஒரு வசந்த காலம். புனிதர் செர்ஜியஸ் அடிக்கடி எண்ணு வது உண்டு: 'நான் தெளிந்த நீரூற்ருக இருந்தேன். அவள் ஆசைகாட்டி மயக்க வந்தாள். நீரூற்றின் புனி தம் அவளையும் புனிதமானவளாக மாற்றிவிட்டது. காலப்போக்கில், ஊற்றில் தூயநீர் ஊறுவதற்குள் ளாகவே, கும்பல் நெருக்கியடித்து முண்டுகிறது. குடிப்பதற்காகப் பாய்கிறது. ஊற்றையே சேற்றுக் குட்டையாக மாற்றிவிடுகிறது. இப்போது சேறுதான் மிஞ்சி நிற்கிறது!'

ஒருநாள் வியாபாரி ஒருவன் தன் மகளை அழைத்து வந்தான். அன்று பெரும் கும்பல். சாமியார் தனது களைப்பையும் கடும் உழைப்பையும் பெரிது படுத்தாது மக்களுக்கு சேவை செய்தார். புனித ஞானிகள் அனை வரும் இவ்வாறே பணியாற்றினர் என்று தற்பெருமை யோடு எண்ணும் சுபாவம் அவருக்கு ஏற்பட்டிருந்தது.

வியாபாரி அவர் நலனில் அக்கறை உடையவன் போல் கும்பலை விரட்டித் துரத்தினுன். ஸெர்ஜியஸ்

தனியாக இருக்கையில் தன் மகளைப்பற்றிச் சொன்னான், —அந்தப் பெண்ணுக்கு தீராத வியாதி. யாராலும் குணப்படுத்த முடியவில்லை. சாமிதான் அருள் புரிய வேண்டும். அப்போதான் அவளுக்குக் கல்யாணம் நடைபெறும். பெற்றோர் மனம் மகிழும். இப்படிப் புலம்பினான். அன்று மாலை அவளை அழைத்து வரும்படி சொன்னார் 'தந்தையார்'.

வழக்கமான முறையில் நாள் ஊர்ந்தது. மாலை வந்தது. மே மாதத்து அழகிய மாலை நேரம். இயற்கையும் சுற்றுப்புறமும் புத்தெழிலுடன், புது இளமையோடு மோகனமாக விளங்கிக் கொண்டிருந்தன.

ஸ்டீபன் காஸட்ஸ்கியாக இருந்த ஒருவன் அற்புதங்கள் செய்யும் ஞானியாய், புனிதராய் வளர்ந்துவிட்டான்; அவன் புகழ் நாட்டின் மூலைக்கு மூலை பரவியிருக்கிறது. மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் கூட அவனது அருள் திறம்பற்றி அறிவார். பத்திரிகைகள் துதி பாடுகின்றன. நாத்திகம் பரவிய நாகரிக ஐரோப்பா கூட தந்தை ஸெர்ஜியஸின் பெருமையை அறிந்துள்ளது—இவ்வாறு தற்பெருமையோடு அவர் எண்ணி மகிழ்வடைந்தார். இப்போது நெடுந் தொலைவிலிருந்து வியாபாரி வந்திருக்கிறான். அவன் மகளும் வந்திருக்கிறாள். என்ன நம்பிக்கை தன்னுடைய சக்தி பேரில்! அந்தப் பெண் எப்படி இருப்பாளோ? இருபத்திரண்டு வயசுப் பெண்ணாம். சதைப் பிடிப்பு உள்ளவள்; ஆனால் ஏதோ நரம்பு வியாதி! அவளிடம் பெண்மைக் கவர்ச்சி இருக்குமா இராதா என்று பார்க்க வேண்டும்...

சாமியார் திடுக்கிட்டார், தமது மனசின் போக்கை உணர்ந்து. பிறகு பிரார்த்தனையில் மூழ்கினார்.

வியாபாரி மகளுடன் வந்து சேர்ந்தான். அந்த இளம்பெண் கவர்ச்சியுடையவள்தான். பயந்த சுபாவம்

பெற்ற குழந்தை முகம்; முதிர்ச்சியுற்ற மங்கை உடல். புதுமலர். உணர்ச்சி மிகுந்தவள். மனோதிடம் இல்லா தவள்—பார்வையால் எடைபோட்ட அருள் தந்தை உணர்ந்த உண்மைகள் இவை. அவளை விட்டுவிட்டு வியாபாரி சென்றான்.

அவள் அறைக்குள் போய் ஒரு ஆசனத்தில் அமர்ந் திருந்தாள். சாமியார் உள்ளே போனார். அவரைக் கண்டதும் அவள் பயந்து, எழுந்து நின்றாள். 'வீட்டுக் குப் போகணும்' என்றாள்.

'பயப்படாதே உனக்கு என்ன செய்கிறது?' என்று அவர் விசாரித்தார்.

'எல்லாமே நோகிறது எனக்கு' என்றாள் அவள். திடீரென்று அவள் முகத்தில் ஒரு மலர்ச்சி.

பிரார்த்திக்கும்படி போதித்தார் அவர். அதில் பயனில்லை; அவர் தொட்டால் வியாதி பறந்துவிடும்; அவர் தனது மார்பகத்தைத் தொடுவதாகக் கனவு கண்டது உண்டு என்று கூறி, அவள் அவர் கையைப் பற்றி தன்னுடைய திரண்ட மார்பின்மீது பதித்து அழுத்தினாள்.

தான் தோல்வியுற்றதை அவர் உணர்ந்தார். ஆசை அடக்க முடியாததாகி விட்டது. அவளிடம் 'உன் பெயர் என்ன?' என்று கேட்டார்.

'மரியா, ஏன்?' என்றவள் அவர் கையை எடுத்து முத்தமிட்டாள். தனது கரத்தால் அவரை அணைத்து, அருகே இழுத்தாள்.

'நீ என்ன செய்கிறாய்? மரியா! நீ ஒரு சைத்தான்' என்றார் சாமியார்.

'ஆ, சரிதான்! அதனால் பேராபத்து ஒன்றுமில்லை' என்று குழறிய அவள் அவரை நன்றாக அணைத்தபடி படுக்கையில் அமர்ந்து, அவரையும் தனக்கருகே இழுத்துத் தள்ளினாள்.

ஃ ஃ ஃ

விடியும் நேரத்தில் விழித்தெழுந்த 'அருள் தந்தை' மிகுந்த ஆத்ம வேதனைக்கு ஆளானார். இனி அங்கே வசிக்க முடியாது. அந்தப் பெண்ணின் தந்தை முகத்தில் எப்படி விழிப்பது? பழைய உடுப்பு ஒன்றை அணிந்துகொண்டு, யாருக்கும் தெரியாமல் வெளியேறினார்.

நடந்து கொண்டிருந்த சாமியாரின் உள்ளத்தில் பாஷென்கா எனும் பெண்மணியின் நினைவு ஏனோ எழுந்தது. அவள் ஒரு அப்பாவி. ஸெர்ஜியஸ் சிறு பையனாக இருந்தபோது அவர்கள் வீட்டில் வேலை செய்தவள். பிறகு வாழ்க்கையில் பல துன்பங்களையும் அனுபவித்து எப்படியோ வாழ்கிறவள். அவளைக் கண்டு பேசினால், தனது வாழ்க்கையில் உள்ள தவறு என்ன; தான் செய்த பாவம் என்ன; அதற்கு நிவர்த்தி என்ன என்பதெல்லாம் விளங்கும் என்று அவருடைய 'அந்தராத்மா' உபதேசிக்கிறது. ஆகவே, அவர் அவளிருந்த ஊருக்கு யாத்திரை போகிறார்.

குடும்ப வாழ்வில் உழலும் முதிய பெண்மணியைக் கண்டு அவளது அன்றாட அலுவல்களை அறிந்து கொண்டு, திரும்பவும் தனிவழியே நடக்கத் துணிந்த ஸெர்ஜியஸ் சிந்திக்கிறார்: 'பாஷென்கா வாழும் முறைதான் சரியானது. கடவுளுக்காக வாழ்கிறேன் என்று ஏமாற்றிக் கொண்டு நான் மனிதனுக்காகவே வாழ்ந்தேன். அவளோ மனிதருக்காக வாழ்வதாக எண்ணிய

வாறே, கடவுளுக்காக வாழ்க்கை நடத்தியவள். பலனை எதிர்பாராமல் ஒரு கப் தண்ணீர் அளித்தாலும் போதும். மனிதர் பாராட்டிப் புகழ வேண்டும் என்று எதிர்பார்த்து நான் செய்த சேவைகள் அனைத்தினும் அது உயர்ந்தது. கடவுட் பணிபுரிவது என்பது நல்லதுதான். அதிலும் உண்மை உண்டு. ஆனால், மக்களின் போற்றுதலைப் பெறவேண்டும், மற்றவர்களை விட உயர்ந்தவனாக வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டால், எல்லாம் தொலைந்தது...'

இவ்வாறு எண்ணம் வளர்த்த ஸெர்ஜியஸ் ஊர் ஊராகத் திரிந்து, அன்போடு உதவி புரிந்து வாழ்வின் பல கஷ்டங்களையும் அனுபவிக்கிறார். இறுதியில், 'ஊர்சுற்றும் சோம்பேறி' என்று தண்டிக்கப்பட்டு, சைபீரியாவுக்கு அனுப்பப்படுகிறார். அங்கு குடியான வன் ஒருவன் தோட்டத்தில் பயிர் செய்து, பிள்ளைக்குப் பாடம் கற்றுக் கொடுத்து, நோயாளிகளுக்குப் பணி விடை செய்து காலம் கழிப்பதில் ஈடுபடுகிறார். வேடிக்கை யான மனிதன் ஒருவனின் விந்தைக் கதை இப்படி முடி கிறது.

# அதிசய நாடோடி

ரஷ்யக் கதாசிரியர் மாக்ஸிம் கார்க்கி ரகம் ரகமான வேடிக்கை மனிதர்களை தமது எழுத்துக்களில் வாழவைத்திருக்கிறார். அவர் சுட்டிக் காட்டியுள்ளவர் களில் பெரும்பாலோர் சமுதாயத்தின் அதல பாதா ளத்தில் காணப்படுகிறவர்கள். வாழ்க்கை வசதிகள் வஞ்சிக்கப்பட்டவர்களும், வாழ முடியாமல் போன தனால் மனநோய் உற்றவர்களும், குடிகாரர்களும், நாடோடிகளும் கார்க்கியின் கதைகளில் அதிகமாகத் தென்படுகிறார்கள். அவர்களில் ஏனையோர் பலரினும் தனிப்பட்டவன்-விசித்திர மனிதன்-நாடோடி கனேவ லோவ்.

'அவன் சிறப்பானவன். அவனைப் போன்ற மனிதர்களை இந்த உலகத்தில் நாம் அடிக்கடி சந்திக்க முடிவதில்லை' என்று குறிப்பிடுகிறார் கதாசிரியர்.

அவர் தமது பதினெட்டாவது வயதில், ஒரு ரொட்டிக் கிடங்கில் உதவியாளனாகப் பணி புரிந்து கொண்டிருந்தபோது, அந்த அதிசய மனிதனைச் சந்திக்க நேர்ந்தது. அவருக்குத் தலைவனாக இருந்த ஒரு குடிகாரத் தடியனை விரட்டிவிட்டு, திறமையும் தேர்ச்சியும், செயல்வேகமும் பெற்றிருந்த கனேவ லோவ் என்கிறவனை வேலைக்கு அமர்த்தினார் பேக்கரி முதலாளி.

நெட்டையானவன். தடந்தோளான். சரியான நாடோடி எனக்காட்டும் தோற்றத்தினன். மார்பு மீது ஒரு விசிறிபோல் பரந்து கிடந்த அழகான தாடி உடை யவன். நீண்ட, வெளிறிய, முகம் அனுபவத்தின்

கீறல்கள் பெற்றுக் காணப்பட்டது. ஆயினும் அதில் இடம் பெற்றிருந்த இருபெரிய நீலக்கண்களினால் அம் முகம் தனி ஒளியோடு விளங்கியது. மீசைக்கு அடியிலே நெளிந்து விளையாடும் இளமுறுவலைப் பிடித்துக் காட்டும் உதடுகளும் நேர்த்தியாகத்தான் இருந்தன. இப் புறத் தோற்றங்களைக் கொண்டிருந்த கனோவலோவின் உள்ளம் விசித்திரமானது. வேதனை மண்டும் காளவாய் அது!

அவனிடமும் குடிப்பழக்கம் உண்டு. ஆனால் அடிக்கடி குடித்து போதையேறித் திரியமாட்டான். வேதனை தாங்கமுடியாத சுமையாக அழுத்துகிறபோது, அதன் புழுக்கத்தைச் சகிக்க முடியாமல் அவன் சோகப் பாடல்களை உணர்ச்சியோடு பாடத் தொடங்குவான். பாடிப்பாடி, உணர்ச்சி முறுகிவிடவும், குடிக்கத் தொடங்குவான். சில சமயம் இதயவேதனையின் உறுத்த லால் குடிக்க ஆரம்பித்து, குடிவெறி எவ்வ எவ்வ, உளக்குமுறலோடு துயர கீதங்களை அவன் ஒலிபரப்பு வான்.

மாக்ஸிம் வேலைசெய்த பேக்கரிக்கு வந்து சேர்ந்த தும் கனோவலோவ் நல்ல நோக்கத்துடன் ஒரு காரியம் செய்தான். ஒரு சந்தர்ப்பத்தில் அவனுக்கும் விபசார விடுதியில் தொழில் புரிந்துகொண்டிருந்த ஒரு பெண் ணுக்கும் நேசம் ஏற்பட்டிருந்தது. அவளிடம் அனு தாபம் கொண்ட அவன், உரிய பணத்தைச் செலுத்தி அவளுக்கு விடுதலை பெற்றுத் தருவதாக வாக்களித் தான். அவன் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளுவான் என்று அந்த விபசாரி எண்ணியிருந் தாள். கனோவலாவ் அவளை மறந்துவிட்டதாகத் தோன்றியது. அவள் கடிதம் எழுதி அவனது கடமையை நினைவுறுத்தினாள். அவன் உரிய பணத்தை அனுப்பி, அன்பன் ஒருவன் மூலம் வேண்டிய ஏற்பாடு

கள் செய்தான். ஆயினும் அவளை மணந்துகொள்ளும் எண்ணம் அவனுக்கு இல்லை. அந்த இளம்பெண் மீது அனுதாபம் கொண்டு, அவளை நரக வாழ்விலிருந்து விடுவிக்க விரும்பியே அவ்விதம் செய்ததாகக் கூறுகிருன்.

'கல்யாணம் செல்து கொள்வதா? என்னைப்போன்ற குடிவெறியன் எப்படிக் கல்யாணம் செய்து கொள்ள முடியும்? பொம்பிளைகள் அப்படித்தான். கல்யாணம், குடித்தனம், கூடி வாழ்வது என்றுதான் நச்சரிப்பார்கள். நானும் எவ்வளவோ பொம்பிளைகளோடு பழகி விட்டேன்' என்று அவன் மாக்ஸிமிடம் தனது அனுபவங்களைச் சொல்கிருன்.

பொதுவாக, நாடோடிகளே பெரும் அளப்பர்கள் தான். பெரிய இடத்துப் பொம்பிளைகளும், சீமாட்டிகளும் பணக்காரன் மனைவிகளும் தங்களிடம் மோகம் கொண்டு விட்டது பற்றியும், அவர்களைத் தாங்கள் ஆட்டிவைத்த விதங்கள் குறித்தும் நாளுக்கு ஒரு தினுசாகவும், பொழுதுக்கு ஒரு விதமாகவும் அளந்து தள்ளுவார்கள். ஆனல் இவன் பேச்சில் உண்மை தொனித்தது. இவன் கூறிய சில அனுபவங்களில் நயமும் நளினமும் ரேகையிட்டு ஓடின.

'எப்பவாவது சில சமயங்களில் என்னுள் துயரம் மண்டி, உயிரோடு இருப்பதையே சகிக்க முடியாதபடி செய்கிறது. இந்தப் பரந்த உலகத்திலே நான் ஒரு ஜந்து தான் உயிரோடு இருப்பது போலவும், வேறு பிராணி எதுவுமே இல்லாதது போலவும் எனக்குப் படுகிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் நான் எல்லோரையும்—என்னையும் மற்றும் அனைவரையும் - வெறுக்கிறேன். ஒவ்வொருவனும்—எல்லோரும் செத்தொழிந்தால் கூட நான் கவலைப் படமாட்டேன். இது என்னுள் குடியிருக்கும் ஏதோ வியாதி என்றுதான் தோன்றுகிறது'

என்று அவன் சொன்னான். இதர நாடோடிகளைப் போல் அவன் ஜம்பமாகப் போலிப் பெருமை பேசுவதில்லை ; நடக்காத – நடக்க முடியாத – அளப்புகளைத் திரித்து மகிழ ஆசைப்பட்டதில்லை. அப்படிப் பேசும் குணமுடையவர்களைக் குறை கூறுவதுமில்லை ' அவர்கள் ஏன் அவ்வாறு சொல்லக்கூடாது ? வாழ்க்கையில் குறிப்பிடத் தகுந்தது எதையும் ஒருவன் கண்டிராவிட்டால், அவன் இனிய கதை ஒன்றை சிருஷ்டித்து அது உண்மையாக நடந்தது என்று ஏன் சொல்லக்கூடாது? அது யாருக்கும் எவ்விதமான தீங்கும் செய்வதில்லையே. அதைச் சொல்கிறபோது, அவனே அதை நம்பத் தொடங்குகிறான். நிஜமாகவே அது தன் வாழ்க்கையில் நடந்ததாக நம்புகிறான். அது அவனுக்கு மகிழ்ச்சியும் நல்ல உணர்வும் கொடுக்கிறது. எவ்வளவோ பேர் இப்படி உற்சாகம் பெறுகிறார்கள்' என்று அவன் சொல்லுவான். இவ்விதம் அனுபவ ஞான மொழிகளை ஒலி பரப்புவதிலும் அவன் தனிபட்டவன்தான்.

அவன் தொழிலில் ஒரு கலைஞன். நல்ல திறமையான உழைப்பாளி. அதே சமயம் விளையாட்டுத்தனம் கொண்ட சிறுபிள்ளை போலவும் காட்சி தந்தான். எளிதில் உணர்ச்சி வசப்படுகிற அப்பாவியாகவும் இருந்தான். அவன் மாக்ஸிம் புத்தகங்களில் உள்ள உணர்ச்சிகரமான வீரதீரக் கதைகளைப் படித்துக் காட்டுகிறபோது, கனேவலோவ் மிகுதியும் பாதிக்கப்படுவது வழக்கம். அவை வெறும் கதை, கதாபாத்திரங்கள் கற்பனைப் படைப்புகள், அவர்களுக்கு நேர்ந்த துன்ப துயரங்களும் சோதனைகளும் கொடுமைகளும் ஆசிரியர்களின் திறமையினால் தான் நிஜமாக நிகழ்ந்தவைபோல் சித்தரிக்கப் பட்டுள்ளன என்பதை அவன் புரிந்து கொள்ளவில்லை. கதாபாத்திரங்களின் அனுபவங்களை எண்ணி அவனே மிகுந்த மனக்கஷ்டம் அனுபவிப்பான். இப்படி மற்றவர்களின் வேதனைகளைக்கண்டு,

அவற்றை எழுத்தாக்கி வைத்த எழுத்தாளர்களுக்காக அவன் அனுதாபப்படுவதுமுண்டு.

'இந்த எழுதும் ஆசாமிகள் உண்மையில் மற்ற வர்களின் துயரங்களை உறிஞ்சிக் கொள்கிற கடல் பஞ்சுகள் மாதிரிதான். இதற்கு வசதியாக அவர்கள் விசேஷ சக்தியுடைய கண்களைப் பெற்றிருக்கிறார்கள். தனிரகமான இதயம் கூட அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் நீண்ட காலம் வாழ்க்கையைக் கவனித்தால், அது அவர்களுள் வேதனையை புகுத்தி விடுகிறது. அதை அவர்கள் தங்களுடைய புத்தகங்களில் கொட்டி வைக்கிறார்கள். ஆனால் அது அவர்களுக்கு நன்மை செய்வதில்லை. ஏனெனில் அவர்களுடைய இதயமே பாதிக்கப்பட்டு விடுகிறது. ஒரு தடவை வேதனை உள்ளத்தில் புகுந்துவிட்டால் போதும், அப்புறம் அதை அகற்றவே முடியாது' என்றும் அந்த நாடோடி சொல்கிறான்.

'நான் யார்? ஒரு நாடோடி. குடிகாரன். ஒன்றுக்கும் உதவாதவன். சீர்கெட்டுப் போனவன். என்னுடையதைப் போன்ற வாழ்க்கையில் எவ்விதமான அர்த்தமும் கிடையாது. நான் எனது துயரத்திலேயே வாழ்கிறேன். அது ஏன் என்று எவருக்கும் தெரியாது. நானும் வாழ்ந்துகொண்டிருக்கிறேன், ஏதோ ஒன்றைத் தேடியபடி. அந்த எதுவோ ஒன்றுக்காக ஏங்கியபடி. ஆனால் அது என்ன? எனக்கே தெரியாது' என்கிறான்.

சில கதாபாத்திரங்களின் அனுபவங்களைக் கேட்டு அவன் என்ன சொல்கிறான், எப்படி ஆசைகளை வளர்க்கிறான் என்பவை விவரமாக வர்ணிக்கப்பட்டுள்ளன கதையிலே. கனேவலோவ் எத்தகைய விந்தை மனிதன் என்பதை அவை எடுத்துக் காட்டும்.

மனிதர்கள் எவ்வாறு சூழ்நிலை, சந்தர்ப்பங்கள் முதலியவற்றால் பாதிக்கப்படுகிறார்கள் என்றும், வாழ்க்

கையில் காணப்படும் உயர்வு தாழ்வுகள், அவற்றின் காரணங்கள் குறித்தும் மாக்ஸிம் பேசுகிருன். 'நீ வஞ்சிக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவன். உனது இன்றைய நிலைக்கு உன்னை நீயே குறைகூற வேண்டிய தில்லை' என்ருன்.

ஆனுல், அந்த நாடோடி இதை ஏற்றுக்கொள்ள வில்லை. தனது சிறுமைக்கும் சீரழிவுக்கும் தானே பொறுப்பாளி என வாதாடுகிருன். 'நான் ஒரு ஸ்பெஷல் கேஸ்' என்று கூறி விளக்க முயல்கிருன். இதர நாடோடிகளின் போக்கிலும் குணத்திலுமிருந்து இவ் வகையிலும், அவன் மாறுபட்டவனே என்கிருர் கதாசிரியர்.

விடுதலை பெற்ற விபசாரி அவனைத் தேடி வருகி ருள். அவனேடு வாழ்வேன் என்கிருள். அவன் அவளை அனுப்பிவிட முயல்கிருன். அவள் குடித்து விட்டு கலாட்டா செய்கிருள். போலீசாரால் பிடித்துச் செல்லப்படுகிருள். அவளது போக்கையும் சீரழிவை யும் கண்டு கனேவலோவ் மிகுந்த வேதனை அடை கிருன். நல்லது எண்ணிச் செய்த காரியம் அவளால் மதிக்கப்படவில்லையே என வருந்துகிருன். அவனுள் வெறுப்பும் வேதனையும் வளர்கின்றன. மறுபடியும் குடிவெறி அவனைப் பற்றுகிறது. குடியனுகி, சோகப் பாடல்களை உணர்ச்சிகரமாகப் பாடிக்கொண்டு மதுச் சாவடியில் பொழுதுபோக்குகிருன்.

பல வருஷங்களுக்குப் பிறகு மாக்ஸிம் அவனை வேறு ஒரு இடத்தில் — கடற்கரை அருகில் — கடின உழைப்பில் ஈடுபட்ட தொழிலாளியாகக் காண நேரு கிறது. இருவரும் நட்பை மறக்காமல் பேசிப் பழகு கிருர்கள். கனேவலோவின் புறத்தோற்றத்தில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டிருந்த போதிலும், அவன் உள்ளம்

பழைய நிலையிலேயே—வேதனை, வெறுப்பு, ஏக்கம், குழப்பம் இவற்றின் களமாகவே—இருப்பதை மாக்ஸிம் உணர்கிறான்.

அதன் பிறகு அந்த நாடோடி எங்கெல்லாமோ திரிந்து, சிறைவாசமும் அனுபவிக்க நேர்ந்தது என்பதை மாக்ஸிம் தெரிந்துகொள்ள முடிகிறது. தீராத மன நோய் பெற்ற கனேவலோவ் முடிவில் தற்கொலை செய்து கொண்டதாக பத்திரிகையில் செய்தி வருகிறது.

கார்க்கி அறிமுகம் செய்துள்ள கனேவலோவ் வேடிக்கை மனிதன் மட்டுமல்ல; அனுதாபத்துக்குரிய—மறக்கமுடியாத—ஒரு பாத்திரமுங்கூட.

# முத்துக் குளிப்பு

இதுவரை எவ்வளவோ புத்தகங்கள் வெளிவந்து விட்டன. மாதம் தோறும் பலபல புத்தகங்கள் பிரசுர மாகின்றன. இன்னும் புதிது புதிதாகப் புத்தகங்கள் வெளி வந்துகொண்டே யிருக்கும்.

சில சமயங்களில் நான் ஆச்சரியப்படுவது உண்டு —'இவ்வளவு புத்தகங்களையும் யார்தான் படிக்கிறார் களோ?' என்று.

ஆலிவர் கோல்டுஸ்மித் எனும் ஆங்கில இலக்கிய ஆசிரியன் எழுதிய சில வரிகள் எனக்கு அடிக்கடி நினைவில் எழுகிறது. 'வாரம் தோறும் மூன்று புதிய புத்தகங்கள் பிறக்கின்றன. அவற்றிலே மாதம் மூன்று புத்தகங்களையாவது ஒவ்வொருவரும் அவசியம் படித்து விடுவது என்று திட்டமிட்டுச் செயலாற்றினால், இந் நாட்டில் அறிவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து விடும்' என்றான் அவன்.

கோல்டுஸ்மித் வாழ்ந்த காலம் பதினெட்டாம் நூற் றாண்டு. இந்த இருபதாம் நூற்றாண்டில், புத்தகங்கள் வெளிவருவதும் வேகநிலையில்தான் உள்ளது. தமிழில் மாதா மாதம் பிரசுரமாகிற புத்தகங்களில், மாதம் மூன்று புத்தகங்கள் என்ற விகிதத்திலாவது படித்து முடிப்பவர் கள் யாராவது இருப்பார்களோ என்னவோ, நான் அறியேன்.

ஆனால், புத்தகங்களைப் படிக்காமலிருப்பதே மேதைத்தனம் என்று எண்ணுகிறவர்கள் நம்மிடையே நிறையப்பேர் உண்டு என்பது எனக்குத் தெரியும்.

நான் பெரிய மேதாவியோ, பேரறிஞனோ அல்ல. சாதாரணமானவன். அதனால் புத்தகங்களைப் படித்துப் பொழுது போக்குவதில் இன்பம் காண்கிறேன். அதுவே என் வாழ்க்கையாகவும் அமைந்து விட்டது.

சும்மா பொழுது போக்குவதற்கென்றே புத்தகங்கள் படிப்போர் உண்டு. புதிய புதிய விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையோடு படிப்பவர் பலர். தூக்கம் வரவேண்டும் என்பதற்காக ஏதாவ தொரு புத்தகத்தின் துணையை நாடுவோரும் உளர். பிறர் தங்களை அறிஞர்—மெத்தப் படித்தவர்—என்று கருத வேணும் என்ற ஆசையோடு புத்தகங்களைச் சுமக்கிறவர்களும் இருக்கிறார்கள். கண்டது கற்றுப் பண்டிதன் ஆக முயல்வோரும் உண்டு. உலகம் பல விதம்!

* * *

வாழ்க்கையைப் பற்றி, மனிதர்களைப் பற்றி, உல கத்தைப்பற்றி எவ்வளவோ உண்மைகளை உணர்ந்து கொள்வதற்குப் புத்தகங்கள் உதவ முடியும். ஒருவ னுக்கே எல்லா அனுபவங்களும் கிட்டிவிட முடியாது. அறியவேணும் என்ற ஆசை உடையவர்கள் அனுபவ சாலிகளின் எழுத்துக்கள் மூலமும் மிக நிறையவே அறிந்து கொள்ளலாம்.

அறிந்து கொள்ள வேண்டும் எனும் அவா பூனை யைக் கொன்றுவிடும் (''க்யுரியாஸிட்டி கில்ஸ் தி கேட்'') என்று ஒரு பழமொழி உண்டு. பல பழ மொழிகளைப் போலவே இதுவும் அபத்தமானதுதான்.

'ஆராயும் ஆவல் அறிவுக்கு அவசியமானது. அறியும் ஆவல் ஒருபோதும் பூனையைக் கொன்றதில்லை.

மந்தபுத்தியால் பூனே செத்தது. அல்லது, எலிகளே அதிகம் தின்றதால் இருக்கலாம்'—அனுபவம் மிகுந்த தாத்தா ஒருவரின் கூற்று இது.

அவரே சொல்லி யிருக்கிருர்: 'உண்மையில் இது வேடிக்கையானதுதான். ஒருவன் விழித்த கண் களுடன் வாழலாம். ஆயினும், முக்கிய விஷயம் எதையுமே கவனிப்பதில்லே. வாழ்க்கை எனும் முட்டாள் தனமான விவகாரத்தில் பெரும்பாலர், கூரிய நோக்கும் அடர்ந்த வாலும் உடையவர்களாக இடறி விழுகிருர் கள். ஆனல் காலக் கிழவன் தன் வீச்சரிவாளால் கொய்யும் வேளே வந்ததும் அவர்கள் அதிகமாக எதை யும் பார்த்திருக்க மாட்டார்கள். அனேத்தையும் பதிவு செய்துகொண்டு பின் மறந்துவிடும் காமிரா போவில்லா மல், பலவற்றையும் பார்த்தறிவதற்கு பழகிக்கொள்ள வேண்டும்.''

'தாத்தாவும் பேரனும்' என்ற புதிய புத்தகத்தில் வருகிறது இது. ராபர்ட் ரூவார்க் என்பவர் எழுதியுள்ள இந்தப் புத்தகம் தனி ரகமானது. இயற்கை, பறவை கள், மீன்கள், மனிதர்களே எல்லாம் பற்றித் தமது பேரனுக்குக் கற்றுக்கொடுக்கிருர் தாத்தா. சிறுவனின் அனுபவங்கள் ரசமானவை.

*     *     *

ரசமான விஷயங்கள், சுவையில்லாத விஷயங்கள், வறண்டவை, குளுமையானவை போன்ற எந்த ரகமான விஷயங்கள் கொண்ட புத்தகங்களாக இருந்தாலும், நான் பொறுமையோடு படிப்பது வழக்கம். 'புத்தகம்' என்று எழுதி, அச்சிட்டு, அழகு படுத்திப் பலருடைய உழைப்பினுலும் உருவாகியுள்ள ஒன்றைப் படித்துப்

பார்ப்பதற்கும் ஒருசில அப்பாவிகள் இருக்கத்தானே வேண்டும்!

எனது படிப்பின் மூலம் நான் உணர்ந்த—உணர்கிற—நயங்களில் சிலவற்றை பிறரும் ரசிக்கக் கூடிய விதத்தில் அவ்வப்போது எடுத்துச் சொல்ல முன்வந்திருக்கிறேன். இப்பகுதியில் சொல்லப்படுபவை சுவையான முறையில் அமைகின்றனவா என்பதுதான் ரசிகர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய 'பாய்ன்ட்'.

* * *

ஒரு கதை. பலருடைய உள்ளத்தில் நிலைபெற்று விட்ட பெருமையை உடைய கதைகளில் இதுவும் ஒன்று. ராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்னது.—

ஒரு பெண் வறுமையினுல் விலைமகளாக ஆகித் தொழில் புரிந்து வாழ்ந்தாள், அவள் வீட்டுக்கு யார் யார் வருகிருர்கள், தினந்தோறும் எத்தனை பேர் வந்து போகிருர்கள் என்று கவனிப்பதையே தொழிலாகக் கொண்டான் எதிர் வீட்டில் வாழ்ந்த நல்லவன் ஒருவன். அவளுக்காக வருத்தப்பட்டு, அவள் நடத்தையைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்து, அவள் நினைவாகவே இருந்தான் அவன்.

அந்தக் 'கெட்டுப்போன' மங்கையோ, தான் இப்படி வாழ நேர்ந்துவிட்டதே என்று எண்ணிக் குமைந்து, மனம் புழுங்கி, அழுது கண்ணிர் வடித்தாள்... தினந்தோறும் அவள் இழிதொழிலைச் செய்துதான் வாழவேண்டியிருந்தது. நாள் முடிவில் அவள் அழுது வருந்துவதும் நித்திய நியதியாகிவிட்டது.

அவள், செத்ததும், சொர்க்கத்துக்குப் போனுள்.

அந்த நல்லவனே நரகத்துக்குப் போக நேர்ந்தது.

அவள் தனது பாபங்களுக்காக நெஞ்சார வருந்தினாள். அழுது கண்ணீர் வடித்தாள். அதுவே அவளுக்குப் பிராயச்சித்தமாக அமைந்தது.

அவன் அவளைப் பற்றியே எண்ணினான். அவளது பாபங்களைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் பாப நினைவுகள் தான் மண்டி வளர்ந்தன...

இக்கதை வெவ்வேறு பத்திரிகைகளில் வெவ்வேறு காலங்களில் எடுத்தாளப் பட்டிருக்கிறது.

இதை ஒரு நவயுவதி படித்து ரசித்தாள். இஷ்டம் போல் ஜாலியாக வாழும் பண்பினள் அவள். இக் கதையைப் படித்த பிறகு அவளும் கண்ணீர்விடக் கற்றுக்கொண்டாள்! தன் போக்கை மாற்றினாளில்லை. அவள் விந்தைச்செயலை அறிந்த நண்பர் ஒருவர், 'நாம் செய்யும் பாபத்துக்காக நாமே கண்ணீர் விட்டால் போதும்; அது நம் பாபத்தைக் கழுவிவிடும் என்று அவள் எண்ணுகிருள் போலும்!' என்று குறிப்பிட்டார்.

* * *

'பாபம் செய்கிற யுவதிகள்' பற்றி இரண்டு நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். நல்ல பெண்கள் வீணுகக் கெட்டுப்போவது பற்றி வருத்தப்பட்டார்கள். அப்பொழுது அவர்களில் ஒருவர், ராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்ன கதையை விரிவாகக் கூறினார்.

'அதே மாதிரித்தான் நடக்கிறது. கெட்டலைகிற பெண்கள் இன்ப வாழ்வு வாழ்கிறார்கள். ஜோராக

டிரஸ் செய்துகொண்டு, சந்தோஷமாகத் திரிகிறார்கள். அவர்களுக்கு எப்பவாவது நரகம் கிடைக்குமோ கிடைக்காதோ, இப்போது ஆனந்தமாக அனுபவித்து வாழ முடிகிறது அவர்களால். ஆனால், அவர்களைப் பற்றி எண்ணி, அவர்களுக்காக வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிற நம்முடைய உள்ளத்தில் வேதனைதான் இருக்கிறது. நமக்குத்தான் மனக்கஷ்டமும் அமைதி இன்மையும் ஏற்படுகின்றன. இவர்கள் இப்படி வாழ்கிறார்களே என்று வீணாக நாம் வேதனைப் படுவதுதான் தவறு என்று தோன்றுகிறது' என்றார் அவர்.

மூலக்கதை எந்த நோக்கத்துடன் சொல்லப்பட்டதாக இருந்தாலும், பலருக்கும் பலவிதங்களிலும் பயன் படுமானால், அதுவே அக்கதைக்குத் தனிச்சிறப்பு தருகிறது என்று நான் நினைக்கிறேன்.